விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii —

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 13 செவ்வாய்க்கிழமை (26.04.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 128




## வன்னிப் போரில் இந்தியப் புலனாய்வு செயற்பட்டது

# தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில்

# ஐ.நாவும், இந்தியாவும் தவறிவிட்டன

## ஐ.நாவின் முன்னாள் பேச்சாளர் அதிர்ச்சித் தகவல்



(கொழும்பு)

**வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது பொதுமக்களைப் பாதுகாப்பதில் ஐக்கிய நாடுகள் சபையும், இந்தியாவும் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ளவில்லை என கொழும்பில் ஐ.நா. தலைமையகத்தின் பேச்சாளராக முன்பு பணியாற்றிய கோர்டன் வைஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.**

இப் போரின்போது ஏற்பட்ட பெரும் எண்ணிக்கையிலான பொதுமக்களின் உயிரிழப்புக்களை ஐக்கிய நாடுகள் சபை தவிர்த்திருக்க முடியும் எனவும் அவர் பி.பி.சி சிங்கள செய்திச் சேவைக்கு வழங்கிய செவ்வியில் தெரிவித்துள்ளார்.

இலங்கைப் படைத்தரப்பால் பொதுமக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கடுமையான தாக்குதல்களை தடுத்து நிறுத்த கொழும்பு மீது ஐக்கிய நாடுகள் சபை கடுமையான அழுத்தங்களைப் பிரயோகித்திருக்கவில்லை எனவும் அவர் இச் செவ்வியில் குற்றம் சுமத்தியுள்ள கோர்டன் வைஸ் மேலும் தெரிவித்துள்ளதாவது,

வன்னிப் போரின் இறுதி ஐந்து மாதங்களில் கனரக ஆயுதங்களைப் பயன்படுத்துவதில்லை என சர்வதேச சமூகத்திற்கு அரசாங்கம் உறுதிகளை வழங்கியிருந்த போதிலும் படைத்தரப்பு கனரக ஆயுதங்களைத் தொடர்ந்தும் பயன்படுத்திவந்தமை தெளிவாகத் தெரியவந்துள்ளது.

படைத்தரப்பினரின் கடுமையான ஷெல் தாக்குதல்களினால் பெருமளவிலான பொதுமக்கள் கொல்லப்பட் (20ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசிய கூட்டமைப்பை அரசு மீண்டும் ஏமாற்றிவிட்டது


### சுமந்திரன் எம்.பி. கவலை

(கொழும்பு)

வவுனியா தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டவர்களின் பெயர் பட்டியல்களை பார்வையிட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை வவுனியாவுக்கு நேற்று அழைத்துச் செல்வதாக உறுதியளித்திருந்த போதிலும், வழங்கிய வாக்குறுதியின்படி அரசாங்கம் தம்மை அழைத்துச் செல்லவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

தம்மை அழைத்துச் செல்வதாக உறுதியளித்த அரசாங்கத்திடம் அது குறித்து வினவியபோது, இதுவரை அவர்களிடம் இருந்து எவ்வித பதில்களும் கிடைக்கவில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் (20ஆம் பக்கம் பார்க்க)



புட்டபர்த்தியிலுள்ள பிரசாந்தி நிலையத்தில் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவின் திருவுடல் வைக்கப்பட்டுள்ளது

## பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய அமெரிக்காவுக்கு இரகசியப் பயணம்

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மிகவும் இரகசியமான முறையில் அமெரிக்காவுக்கான பயணமொன்றை மேற்கொண்டுள்ளார்.

கடந்த சனிக்கிழமை மாலை அவர் மிகவும் இரகசியமான முறையில் விமான நிலையத்தை அடைந்து அமெரிக்காவுக்குப் புறப்பட்டுச் செல்லும்வரை அது பற்றிய தகவல்கள் ஜனாதிபதியைத் தவிர யாருக்கும் தெரியப்படுத்தப்படவில்லையாம்.

ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை தொடர்பில் இலங்கையின் எதிர்காலச் செயற்பாடுகள் மற்றும் அது தொடர்பில் அமெரிக்க அரசின் ஆதரவைப் பெற்றுக்கொள்வது போன்ற விடயங்கள் குறித்து (20ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை ரணிலை அழைக்கிறார் ஜனாதிபதி

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் ஆலோசனை நடத்த வருமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு தற்போது சுற்றுப் பயணத்தை மேற்கொண்டுள்ள ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 28ஆம் திகதி வியாழக்கிழமை கொழும்பு திரும்பவுள்ள நிலையில் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்திக்க மகிந்த ராஜபக்ஷ விருப்பம் கொண்டுள்ளதாக ஜனாதி (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை உயர்மட்டக்குழு டில்லி வர இந்தியா மறுப்பு

### ஆங்கில வார இதழ் தெரிவிப்பு

(கொழும்பு)

தற்போதைய அரசியல் சூழல் குறித்து கலந்துரையாடுவதற்காக இலங்கையின் உயர்மட்டக் குழுவொன்று புதுடில்லிக்கு செல்வதற்கு இலங்கையால் விடுக்கப்பட்ட அழைப்பை இந்தியா நிராகரித்துள்ளதாக கொழும்பு ஆங்கில வாரஇதழ் ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

போர்க் காலத்தில் இந்திய -இலங்கை விவகாரங்களை கையாள்வதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நியமித்த அமைச்சர் பசில் ராஜபக்ஷ, பாதுகாப்பு செயலர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலர் லலித் வீரதுங்க ஆகியோரை உள்ளடக்கிய உயர்மட்டக் குழுவிற்கே உடனடியாக புதுடில்லி செல்வதற்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. (ந-5)




**தரம்- 5 மாணவர்களே!**

*நாளை புதன்கிழமை உங்கள் வலம்புரியில் ஆசிரியர் வே. அன்பழகனின் தரம்- 5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் பகுதி- 1 வெளியாகும்.*

# தொழில்நுட்ப இணைப்பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்ட தொழில் நுட்ப இணைப் பாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள தாக கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி றூ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

மேற்படி பதவி நிலைக்கு விரைவில் செயற் படுத்தப்படவுள்ள சர்வதேச நிதியளிப்புட னான திட்டமொன்றுக்கு மாவட்டத்தில் பொறுப் பளிக்கப்பட்ட தொழில்நுட்ப இணைப்பாளர் பதவிக்கு பின்வரும் தகைமையுடையோரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா (NDT) அல்லது தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் (NCT) உடையவர்களாக இருக்கவேண்டும்.

வீதி மற்றும் நீர்ப்பாசன துறைகளில் 5 வருடகால அனுபவம் பெற்றிருத்தல் வேண் டும் எனவும் மோட்டார் சைக்கிள் செலுத்து வதற்கான அனுமதிப்பத்திரமும் தேக ஆரோக் கியம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

மேற்படி தகுதி உடையவர்கள் விண்ணப் பங்களை இன்றும் நாளையும் மாவட்ட செய லகத்தின் திட்டமிடல் கிளையில் நேரில் ஒப் படைக்க வேண்டும் என அவர் மேலும் தெரி வித்தார். (ந-6)

## கற்கைநெறி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை நூலகச் சங்கத்தின் யாழ்ப் பாணம் நிலையத்தினால் நடத்தப்படும் நூலகமும் தகவல் விஞ்ஞானமும் டிப்ளோமா கற்கைநெறி தரம் 1 (2011/2012) வகுப்புக் கள் எதிர்வரும் 30ஆம் திகதி காலை 9.30. மணிக்கு யாழ்.பல்கலைக்கழக நூலககேட் போர்கூடத்தில் ஆரம்பமாக இருக்கின்றது.

இக்கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்கள் அனைவரும் தவறாது சமுகமளிக் குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். (ந)

# மிருசுவிலில் நடந்த கூட்டுப்படுகொலை நீதிபதிகள் குழு நாளை வருகை

(யாழ்ப்பாணம்)

மிருசுவிலில் இடம்பெற்ற கூட்டுப்படு கொலை புதைகுழியைப் பார்வையிட கொழும் பிலிருந்து நீதிபதிகள் குழாம் நாளை யாழ்ப் பாணத்திற்கு வரவுள்ளது.

இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட எட்டு பேர் கூட்டாகக் படுகொலை செய்யப்பட்டு மிருசுவிலில் புதைக்கப்பட்டமை தொடர்பான வழக்கிற்காகவே இந்த நீதிபதிகள் குழு இங்கு வருகின்றது.

2000ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி அல்லது அதற்கு அண்மித்த தினமொன்றில் மிருசுவில் வாசியான ஞானபாலன் ரவிவர் மன் மற்றும் இரண்டு குழந்தைகள் உள்ளிட்ட எட்டுப்பேரை கொன்றது தொடர்பாக 5 இரா ணுவத்தினருக்கு எதிராக ஏற்கனவே வழக் குத் தொடரப்பட்டுள்ளது.

வழக்கு தற்போதைக்கு ட்ரையல் அட்பார் முறையில் மூன்று நீதிபதிகள் குழாவினால் விசாரிக்கப்படுவதுடன் வழக்கை விசாரிக்கும் நீதிபதிகள் சம்பவம் இடம்பெற்ற இடத்தை நேரடியாக பார்வையிட்டு மேலதிக விபரங் களை சேகரித்து கொள்ளவுள்ளனர்.

அத்துடன் வழக்கின் சாட்சிகளான யாழ். மாவட்ட நீதிபதி, சாவகச்சேரி நீதிபதி, தற்போ தைய வெல்லவ காவற்துறையில் பொறுப்பதி காரியாக கடமையாற்றும் பிரதான காவற் துறை பரிசோதகர் ஆகியோரையும் நாளை சம்பவம் நடந்த இடமான மிருசுவிலுக்கு விஜயம் செய்யு மாறு கொழும்புபிரதான நீதிமன்றம் கேட்டுள்ளது.

இந்த கொலைவழக்கில் குற்றம்சாட்டப்பட் டுள்ள 5 இராணுவத்தினரையும் கொழும்பி லிருந்து சம்பவ இடத்துக்கு அழைத்துச்செல் லும் பொறுப்பை வழக்கை விசாரிக்கும் நீதி பதிகள் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

வழக்கு விசாரணைக்காக வரும் சாட்சி கள் மற்றும் குற்றம் சாட்டப்பட்டிருப்பவர்கள், நீதிபதிகள் ஆகியோரின் பாதுகாப்பை உறு திப்படுத்துமாறு யாழ்.மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கும் நீதிமன்றம் அறிவுறுத்தி யுள்ளது. (ந-5)

# நிபுணர் குழுவின் அறிக்கையின் நோக்கம் இனப்பிரச்சினை தீர்வை துரிதப்படுத்துவதே

## பிரதி அமைச்சர் சேகுதாவூத் கருத்து



(மட்டக்களப்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர்குழு இலங்கை விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடு கள் சபையின் செயலாளருக்கு வழங்கியுள்ள அறிக்கையானது, இலங்கையில் அரசியல் தீர்வை துரிதப்படுத்துவதற்கான இராஜதந்திர நடவடிக்கையாக கருத முடியுமென சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளரும் பிரதி யமைச்சருமான புசீர் சேகுதாவூத் தெரிவித் தார்.

மட்டக்களப்பு, பூநொச்சிமுனை இக்றாஹ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற நிகழ்வொன் றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அங்கு தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்,

இன்று ஏற்பட்டுள்ள சூழ்நிலையில் இலங் கை உலகில் பரவலாக பேசப்பட்டு வருகின் றது. ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் வெளியிட்டுள்ள அறிக்கை தொடர்பாக பாரிய சர்ச்சைகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் அரசியல் தீர்வொன்றை துரிதமாக ஏற்படுத்துவதற்கான இராஜதந்திர நடவடிக்கையாக ஐக்கிய நாடுகள் நிபுணர்குழு வின் அறிக்கையை பார்க்க முடியும்.

வெளிநாட்டு சக்திகள் வந்து இலங்கையில் அரசியல் தீர்வை பெற்றுத்தர முடியாது. சுய நிபுணத்துவத்தை வளர்த்துக்கொண்டு நாம் தீர்வை ஏற்படுத்த வேணடும். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ 13ஆவது திருத்தச்சட்டத் துக்கும் அப்பால் சென்று தீர்வை தருவதாக தேர்தல் காலங்களில் வாக்குறுதியளித்துள்ளார்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஜனாதிப தியை இன்னும் சில தினங்களில் சந்தித்து தீர் வினை முன்வைக்கவுள்ளது எனவும் பிரதி யமைச்சர் பசீர் மேலும் தெரிவித்தார். (ந-5)

# கண் சத்திரசிகிச்சை வணிகர் கழக அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் கலாசார மண்ட பத்தில் கடந்த 22ஆம் திகதி காலை நடைபெற்ற இலவச கண் சிகிச்சை முகாமில் கண்களில் வெள்ளை படர்தல் சத்திரசிகிச்சைக்கு தெரிவு செய்யப்பட்டு மஞ்சள் அட்டை வழங்கப்பட்ட சகலரும் நாளை புதன்கிழமை காலை 5.00 - 5.30 மணிக்கிடையில் இல. 165 மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ். வணிகர் கழக பணிமனைக்கு புத்தளத்திற்குச் செல்ல ஆயத்தமாக வருமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றனர்.

பயணத்திற்கு ஆயத்தமாக வரும்போது தாங்கள் வேறு நோய்களுக்காக பயன்படுத் தும் மாத்திரைகள், மருந்துகள் ஊசி மருந்து களையும் எடுத்து வருமாறு கேட்டுக்கொள் ளப்பட்டுள்ளனர். (ந-5)


## மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

புதிய பொக்சர் மோட்டார் சைக்கிள் டபிள்சீற் பெரிய கரியர் மொடல் 10,000 கி.மீ ஓடிய நிலையில் விற் பனைக்கு உண்டு.

55,சீனியர் லேன் (எடிசன் ரியூட்டறிக்கு முன்)
கலட்டி,வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (4687)



உ
சிவமயம்

## வீட்டுக்கிருத்திய அழைப்பு

அன்புடையீர்!

கடந்த விகிர்தி வருடம் பங்குனிமாதம் 14ஆம் நாள் (28..03.2011)
திங்கட்கிழமை அன்று சிவபதமடைந்த எமது தந்தையும்
குடும்பத் தலைவருமான



## அமரர் சரவணமுத்து செல்லத்துரை

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நிகழும் கர வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் திங்கட்கிழமை (25.04.2011) காலை 10 மணியளவில் கீரிமலை ஸ்ரீ நகுலேஸ்வரர் தீர்த்தக் கரையில் நடைபெற்றது, வீட்டுக்கிருத்தியம் மற்றும் சபிண்டீகரண கிரியைகள் நாளை சித்திரை மாதம் 14ஆம் நாள் (27.04.2011) புதன்கிழமை மதியம்-இல 72/50, பணிக்கர் ஒழுங்கை, திருநெல்வேலியில் உள்ள அன்னாரின் இல்லத்திலும், அன் னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டி அன்றையதினம் (27.04.2011) காலை 9 மணி யிலிருந்து அல்லைப்பிட்டி கறண்டப்பாய் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் விசேட அபிசேக மும் அதனைத் தொடர்ந்து அன்னதானமும் நடைபெறும். இங்நிகழ்வுகளில் தாங் களும் தங்கள் குடும்பமுமாய் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எம் முடன் இணைந்து பிரார்த்திக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பினை உறவினர்கள், நண்பர்கள் அனைவரும்
தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
செல்லத்துரை குடும்பத்தினர்.

1ஆம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி.

(467)



## ஆசிரியர்கள் தேவை

பிரபல தனியார் பாலர் பாடசாலை ஒன்றிற்கு அச்சுவேலி, மானிப்பாய், சுன் னாகம், சங்கானை, நீர்வேலி, பருத்தித்துறை, கோப்பாய், நல்லூர், சாவகச் சேரி ஆகிய இடங்களில் பணியாற்றக்கூடிய ஆசிரியர்கள் தேவை.

நேர்முகப் பரீட்சைக்கு சனிக்கிழமை காலை 9 மணிக்கு பின்வரும் முகவரிக்கு நேரில் வரவும். 140, கோயில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (4686)



## கேள்வி கோரல்கள்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
துறைமுகங்கள், பெருந்தெருக்கள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை
யாழ்ப்பாணம்

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வீதிகள்,
புனர் நிர்மாணம் செய்வதற்கான
கேள்வி கோரல் அறிவித்தல்

பெருந்தெருக்கள் அமைச்சின் நிதியின் மூலம்
உள்ளூர் போட்டிக்குரிய கூறுவிலை கோரல்கள்
காலநீடிப்பு

1) 09.04.2011 வலம்புரி பத்திரிகையில் பிரதம பொறியியலாளர், கேள்விச்சபையின் சார்பாக பிரதம பொறியியலாளர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, கடற்கரை வீதி, யாழ்ப்பாணம் அவர்களால் பிரசுரிக்கப்பட்ட கேள்வி கோரல் விளம்பரம் சம்பந்தமாக,

மேற்படி கேள்வி கோரலுக்கான கேள்விப்பத்திர ஆவணங்கள் 29.04.2011 பிற்பகல் 2.00 மணி வரை வழங்கப்படும். 04.05.2011 காலை 10 மணிக்கு கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் நடைமுறை முடிவடையும்.

மாகாணப் பணிப்பாளர் (வடக்கு)
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

பிரதம பொறியியலாளர்
வீதி அபிவிருத்தி அதிகாரசபை,
கடற்கரை வீதி,
யாழ்ப்பாணம்.

(C-3071)

# இன்று ஒரு தகவல்

## சோக்ரடீஸ்

"கத்தியைத் தீட்டாதே ! உந்தன் புத்தியை தீட்டு!" என்று ஒரு பெரியவர் அறிவுரை கூறினார். அதைக் கேட்ட ஒரு சிறிய பையன் அது எப்படி பெரியவரே! புத்தியை தீட்டுவது? கத்தியைத் தீட்டு என்றால் ஒரு கருங்கல்லில் கத்தியைத் தேய்க்கலாம்! புத்தியை தீட்டு என்றால் தலையினைத் தரையிலே தேய்க்க முடியுமா? என்று கேட்டான்.

உடனே அந்தப் பெரியவர் 'இந்தப் பையனுக்கு புத்திக் கூர்மை குறைவு' என்று புரிந்து கொண்டார். அது சரி! அறிவிற்கும் புத்திசாலித்தனத்திற்கும் என்ன வித்தியாசம்?

இது ஒரு முக்கியமான கேள்வி.

இதே கேள்வியை ஒரு சமயம் சோக்ரடீஸிடம் அவரது சீடன் ஒருவன்," அறிவுக்கும் புத்திசாலித்தனத்துக்கும் என்ன வேறுபாடு?" என்று கேட்டான். அதற்கு சோக்ரடீஸ் அவனிடம் "நான் இதற்குப் பதில் கூறமுன் நீ ஒரு காரியம் செய்ய வேண்டும்? என்றார்!" என்ன செய்ய வேண்டும்? சொல்லுங்கள் என்றான் சீடன்.

"அதோ அங்கே ஒரு வயதான பெரியவர் உட்கார்ந்திருக்கிறார் பார்! நேராக அவரிடம் போ இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று அவரிடம் கேட்டு வா! என்றார். சோக்ரட்டீஸ் சரி! என்று சொல்லிவிட்டு சென்ற சீடன், சோக்ரட்டீஸ் கூறிய பெரியவரிடம் "ஏங்க பெரியவரே இங்கேயிருந்து பக்கத்திலிருக்கும் கிராமத்துக்குப் போய்ச் சேர எவ்வளவு நேரம் ஆகும்?" என்று கேட்டான்.

பெரியவர் நிமிர்ந்து அவனைப் பார்த்தார். ஆனால் பதில் எதுவும் சொல்லவில்லை ! சீடன் மறுபடியும் அதே கேள்வியினைக் கேட்டான். அப்போதும் அவர் பதில் சொல்லவில்லை உடனே இவன் ஒரு முடிவுக்கு வந்தான். அதாவது "சரி பெரியவர் ஒரு மாதிரியாகத் தெரிகிறார்! புத்தி சுவாதீனம் இல்லாதவர் போல் உள்ளது! "என்று நினைத்துக் கொண்டு வந்த வழியிலே திரும்பி நடந்தான்.

இவன் சிறிது தூரம் வந்தவுடனே அந்தப் பெரியவர் இவனைக்கூப்பிட்டு "நீ இங்கேயிருந்து பக்கத்து கிராமத்திற்கு போய்ச் சேர ஐந்து நிமிடம் ஆகும்!" என்றார்.

இப்போது சீடன் அவரை ஒரு மாதிரியாகப் பார்த்தான். பின்னர் அவரிடமே "ஏங்க பெரியவரே இந்த பதிலை நீங்கள் அப்போதே சொல்லியிருக்கலாம் அல்லவா? என்னைத் திருப்பி போகவிட்டு... அப்புறம் கூப்பிட்டு... அதற்குப் பின்னர் இப்படிச் சொல்கிறீர்களே!" என்றான்.

பெரியவர் "ஏனப்பா! நீ எவ்வளவு வேகமாய் நடக்கிறாய் என்பதை பார்க்காமல், நான் எப்படிப்பா... நீ கிராமத்திற்குப் போய்ச்சேர ஆகக் கூடிய நேரத்தைச் சொல்லமுடியும் ? அதனால் தான் உன்னை நடக்க விட்டு... வேகத்தைப் பார்த்து அதன் பின்னர் நேரத்தை சொன்னேன்" என்றார்.

அதற்குச் சீடனால் பதில் எதுவும் சொல்ல முடியவில்லை சோர்ரடீஸிடம் திரும்பி வந்து நடந்தவற்றைக் கூறினான்.

அதற்குப் பெயர்தான் புத்திசாலித்தனம் என்றார் சோக்ரடீஸ்.

இந்த புத்திசாலித்தனம் எல்லோருக்கும் வரவேண்டும் என்பதற்காகத்தான் ... கத்தியைத் தீட்டாதே புத்தியைத் தீட்டு! என்று பெரியோர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாட்டின் இரண்டாவது விமான நிலையம் அடுத்தவருடம் இறுதியில் செயற்படும்

(கொழும்பு)

மத்தலையில் அமைக்கப்படும் இலங்கையின் இரண்டாவது சர்வதேச விமான நிலையத்தின் பயணிகள் தரையிறங்குமிடத்திற்கான நிர்மாணப்பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

பயணிகள் தரையிறங்குமிடத்திற்கான அடிக்கல்லை சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாட்டிவைத்தார்.

இந் நிகழ்வில் விமான சேவைகள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷஆகியோரும் கலந்து கொண்டனர். தெற்காசியப் பிராந்தியத்தில் சுற்றாடலுக்கு தீங்கு ஏற்படாத வகையில் நிர்மாணிக்கப்படும் இந்த விமானநி லையத்திற்காக 209 மில்லியன் டொலர்களை செலவிடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அடுத்த வருடத்தில் மத்தலை சர்வதேச விமான நிலையத்தின் நிர்மாணப்பணிகள் நிறைவு பெறும் என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் பிரசன்ன ஜே.விக்கிரமசூரிய நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

விமான நிலையத்தின் ஓடுபாதை உட்பட 40 வீதமான நிர்மாணப்பணிகள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் நிர்மாணிக்கப்படுகின்ற இந்த விமானநிலையம் அடுத்த வருட இறுதி முதற் செயற்பாடுகளை ஆரம்பிக்கும் என விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் நிறுவனத்தின் தலைவர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-2)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஈழத்து இராமேஸ்வரம் என வழங்கும் புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் கடந்த 19 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி திருவிழா நடைபெற்று வருகிறது.

இவ்வுற்சவத்தில் இன்று இரவு சப்பறத்திருவிழாவும் நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் நாளை மறுதினம் வியாழக்கிழமை காலை 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் இடம்பெறும். (ஸ்ரீ-2)

# தேசிய பாடசாலை ஆசிரியர்களுக்கு மே மாதம் முதல் இடமாற்றம்

ஒரே இடத்தில் 8 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றும் தேசிய பாடசாலை ஆசிரியர்கள் மே மாதம் முதல் இடமாற்றப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன நேற்று முன்தினம் தெரிவித்துள்ளார்.

இந்நாட்டில் 340 தேசிய பாடசாலைகள் உள்ளன. சிலர் ஒரே இடத்தில் 22 வருடகாலமாகவும் தேசிய பாடசாலையில் சேவையாற்றுகின்றனர். அவர்களை மே மாதம் முதல் இடமாற்றம் செய்வோம் அவர்கள் விரும்பினால் அருகிலுள்ள மாகாணசபைகளின் கீழ் இயங்கும் பாடசாலைகளுக்கு மாறலாம். அதேபோல் புதிய இடமாற்றக் கொள்கையின் கீழ் மாகாண பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு தேசிய பாடசாலைகளுக்கு மாற்றப்படுவர் என அமைச்சர் பந்துல குணவர்தன கூறினார்.

(ந-5)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 40 | 60 | 60 |
| உருளைக்கிழங்கு | 75 | 80 | 75 |
| பச்சைமிளகாய் | 60-100 | 100 | 100 |
| தக்காளி | 40 | 60 | 40 |
| மரவள்ளிக்கிழங்கு | 55 | 40 | 50 |
| கோவா | 40 | 40 | 60 |
| கரட் | 60 | 80 | 80 |
| பூசணி | 40 | 40 | 30 |
| புடோல் | 25-30 | 30 | 30 |
| வாழைக்காய் | 40 | 30 | 40 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 150 |
| பெரிய வெங்காயம் | 55 | 80 | 80 |
| பாகற்காய் | 60-70 | 70 | 90 |
| வெண்டிக்காய் | 30 | 20 | 30 |
| கருணைக் கிழங்கு | - | 90 | - |
| பயற்றங்காய் | 40 | 30 | 40 |
| லீக்ஸ் | 50 | 80 | 60 |
| பீற்றூட் | 50 | 60 | 70 |
| கறிமிளகாய் | 60 | 60 | 90 |
| முருங்கைக்காய் | 400-500 | 300 | 450 |
| போஞ்சி | - | 80 | 100 |
| கத்தரிதம்புள்ள | - | 50 | 40 |
| கீரை - 1 பிடி | 10-15 | 20 | 20 |
| தேசிக்காய் | 100 | 60 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 50 |

# இராசி பலன்

*26.04.2011*
*(சித்திரை 13 ,செவ்வாய்க்கிழமை)*
*சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு*
*நவமி பின்னிரவு 2.21 மணிவரை*
*திருவோணம் பிற்பகல் 12.56 மணிவரை*
*இராகுகாலம் 2.59-4.29 மணிவரை*
*சுபநேரம் 10.29-11.59 மணிவரை*

**மேடம்** புதிய முயற்சிகளில் வெற்றி பெறும் நாள், வருங்கால நலன் கருதி சேமிக்க முற்படுவீர்கள், பெரிய மனிதர்களின் உதவிகள் கிடைக்கலாம், தொழில் முன்னேற்றமுண்டு.

**இடபம்** அரைகுறையாக இருந்த பணிகளை மீண்டும் செய்து முடிப்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் குறையும், எதிர்பாராத பயணங்களால் நன்மையுண்டு.

**மிதுனம்** கவலை தீர கந்தனை வழிபட வேண்டிய நாள், உறவினர் விவகாரங்களில் தலையிடுவதை தவிர்ப்பது நல்லது, சேமிப்பு செலவாகாது இருக்க விழிப்புணர்வு தேவை.

**கடகம்** நட்பால் நல்லகாரியமொன்று நடைபெறலாம், உத்தியோகத்தில் உயரதிகாரிகளின் நட்பை பெறுவீர்கள்,வெளியூர் பயணங்களால் அனுகூலமுண்டு.

**சிங்கம்** தொழில் போட்டிகள் மாறும், சுவாரஸ்யமான நாள், புதிய மருத்துவத்தால் உடல்நலம் சீராகும், உற்சாகத்தோடு செயற்படுவீர்கள், சிக்கனத்தை கடைப்பிடிக்கும் எண்ணம் உருவாகும்.

**கன்னி** நீண்டநாட்களாக தள்ளிப்போட்ட காரியமொன்று இன்று நடைபெறலாம், உயர் அதிகாரிகளின் பாராட்டுக்களைப் பெறுவீர்கள், இன்பங்கள் இல்லம் தேடிவரலாம்.

**துலாம்** செல்வாக்கு அதிகரிக்கும் நாள், சென்ற இடத்தில் சிந்தனை ஆற்றலை சிறப்படைவீர்கள், தொழில் முன்னேற்றம் ஏற்படும், வாகன சுகமுண்டு.

**விருச்சிகம்** உடன் பிறப்புக்கள் உதவிக்கரம் நீட்ட முன்வருவார், சேமிப்பு உயர்வதற்கான முயற்சியை கையாள்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும், பொருட் சேர்கையுண்டு.

**தனுசு** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கலாம், குடும்பத்தில் மங்கல நிகழ்வுகள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், மேன்மையும் உயர்வும் கிடைக்கும்.


**மகரம்** தொட்டகாரியம் வெற்றிபெற அம்பிகையை வழிபடவேண்டிய நாள், உடல் நலனில் அதிக அக்கறை எடுப்பீர்கள், கற்பனை மிகுதியுண்டு.

**கும்பம்** உறவினர் வருகையால் திடீர் செலவுகள் ஏற்படலாம், மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம், சயன சுகக்குறையுண்டு.


**மீனம்** செய் தொழிலால் வருமானம் அதிகரிக்கும், செல்வாக்கு மேலோங்கும், போசனசுகமுண்டு, எடுத்தகருமங்கள் எளிதில் நிறைவேறும்.

வளவன்


# மண்ணுலகில் நடமாடிய தெய்வம் சத்ய சாய்பாபா




புட்டபர்த்தியில் அலைமோதும் பக்தர் கூட்டம்




டென்டுல்கரின் இறுதித் தரிசனம்



பாபாவின் திருவுடல், தரிசனத்திற்காக பக்தர்கள் முண்டியடிக்கிறார்கள்





யா/எழுவைதீவு முருகவேள் வித்தியாலயத்தின் இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் அதிபர் ச.கமலதீபன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் மங்கல விளக்கேற்றுவதையும் வெற்றி பெற்ற மாணவர்கள் வெற்றிக் கேடயத்துடன் நிற்பதனையும் படங்களில் காணலாம்.

# இலங்கையில் மலேரியா நோயினால் வருடாந்தம் 450 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

உலக மலேரியா தினம் நேற்று அனுஷ்டிக்கப்பட்டது. வருடாந்தம் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி உலக மலேரியா தினமாக ஐக்கிய நாடுகள் சபையால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு வருடத்திற்கு 10 இலட்சம் பேர் வரை உயிரிழப்பதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது. இவ்வாறு உயிரிழப்பவர்களில் அதிகமானோர் 5 வயதிற்கும் கீழ்ப்பட்ட சிறுவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் மலேரியா நோயினால் பாதிக்கப்பட்டு வருடாந்தம் 450 மரணங்கள் சம்பவிப்பதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

கடும் காய்ச்சல், கண்சிவத்தல், உடம்பு வலி மற்றும் உடல் முடியாமை என்பன மலேரியா நோய்க்கான அறிகுறிகளாகும். மலேரியா நோய் ஏற்பட்டுள்ளவர்கள் விரைவில் சிகிச்சை பெறாவிடின் அதன் மூலமாக பல நோய்கள் உண்டாக வாய்ப்புண்டு.

மலேரியா தடுப்புத் திட்டங்கள் மூலம் இலவச சிகிச்சையைப் பெற முடியும். இந்நோயிலிருந்து விடுபட நோயை ஏற்படுத்தும் நுளம்புகளை ஒழிப்பது அவசியமென சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

(ஸ்ரீ-2)

# யூலை மாதம் முதல் பேருந்து கட்டணங்கள் அதிகரிக்கப்படலாம்

பேருந்து கட்டணங்கள் எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் அதிகரிக்கப்படலாம் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தகவல்கள் தெரிவித்தன. அதாவது பேருந்து கட்டண அதிகரிப்பு தொடர்பான தேசிய கொள்கைக்கு அமையவே இந்த கட்டணம் அதிகரிப்பு இடம் பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் டீசலின் விலை அதிகரிக்கப்பட்டமை மற்றும் பேருந்து போக்குவரத்துத்துறையுடன் கூடிய செலவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளமை போன்ற காரணங்களினாலேயே இந்த அதிகரிப்பு மேற்கொள்ளப்படவுள்ளதாக கூறப்படுகின்றது.

இதேவேளை பேருந்து கட்டண அதிகரிப்பின் கீழ் ஆகக் குறைந்த கட்டணமான ஆறு ரூபா கட்டணம் ஏழு ரூபாவாக அதிகரிக்கப்படலாம் என்றும் தகவல்கள் தெரிவித்தன.

மேலும் பேருந்து கட்டணம் தொடர்பான தேசிய கொள்கையின் பிரகாரம் எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி முதல் கட்டண அதிகரிப்பு இடம்பெறுவது போதுமானது என்று தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிய வருகின்றன. (2)

# பெற்றோலில் இயங்கும் வாகனங்களுக்கான வரி அதிகரிப்பு

(கொழும்பு)

பெற்றோலில் இயங்கும் வாகனங்கள் மற்றும் பல்எரிபொருட்கள் மூலம் இயங்கும் வாகனங்களுக்கான தீர்வை வரி அதிகரிக்கப்படும் என சுங்க மற்றும் திறைசேரி அதிகாரிகள் தெரிவித்தனர்.

பல்எரிபொருட்களில் இயங்கக்கூடிய 1600 சி.சி இற்கு குறைந்த கொள்ளளவுடைய வாகனங்களுக்கு 8 சதவீத தீர்வை வரி விதிக்கப்படும் என பிரதிசுங்க ஆணையாளர் அஜந்த டயஸ் தெரிவித்தார்.

1600 சி.சி.க்கு மேற்பட்ட கொள்ளளவுடைய வாகனங்களுக்கான தீர்வை வரி 24 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

2000 தொடக்கம்3000 சி.சி கொள்ளளவுடைய பல்எரிபொருள் வாகனங்களுக்கான வரி 75 சதவீதமாக அதிகரிக்கப்படும். 3000 சி.சியை விட அதிக கொள்ளளவுடைய வாகனங்களுக்கான வரி 100 சதவீதமாக அதிகரிக்கப்படும்.

முன்னர் பல் எரிபொருள் வாகனங்களுக்கு தீர்வை அறவிடப்படவில்லை. 15 சதவீத வரியும் 12 சதவீத வற் வரியுமே அறவிடப்பட்டன. கடந்த இரு மாத காலங்களில் சுமார் 3000 பல்எரிபொருள் வாகனங்கள் இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

அதேவேளை பெற்றோலில் இயங்கும் 1000 சி.சி இற்கு குறைந்த வாகனங்களுக்கான வரி 23 சதவீதத்திலிருந்து 38 சதவீதமாக அதிகரிக்கப்படும். 1000 தொடக்கம்1500 சி.சி பெற்றோல் வாகனங்களுக்கான வரி 43 சதவீதமாக அதிகரிக்கப்படும். (ஸ்ரீ-2)

# சுசந்திகா ஜயசிங்கவை தாக்கிய குற்றச்சாட்டில் கணவன் கைது

(கொழும்பு)

இலங்கையின் முன்னணி குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்கவைத் தாக்கிய குற்றச்சாட்டில் அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறுந்தூர ஓட்ட வீராங்கனையான சுசந்திகா ஜயசிங்க 2000 ஆம் ஆண்டு சிட்னியில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் இலங்கைக்கு வெள்ளிப் பதக்க மொன்றைப் பெற்றுக் கொடுத்துள்ளார். மேலும் ஆசிய மட்ட விளையாட்டுப் போட்டிகள், பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு கொண்டு தங்கப்பதக்கங்களையும் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அவரும் அவரது கணவர் தம்மிக நந்தகுமாரவும் இராணுவத்தில் கடமையாற்றும் போது காதலிக்க ஆரம்பித்து அதன் பின்னர் தப்பியோடி வந்து திருமணம் முடித்துக் கொண் டவர்கள்.

சுசந்திகாவின் சாதனைகள் காரணமாக இருவருக்கும் இராணுவ சேவையிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டது.

அவ்வாறான நிலையில் சுசந்திகாவைத் துன்புறுத்தும் வகையில் கடும் தாக்குதலை மேற்கொண்ட தாக நேற்று காலை அவரது கணவன் கைது செய்யப்பட்டுள்ளார். அது குறித்த முறைப்பாட்டை சிறுவர் மற்றும் மகளிர்பாதுகாப்புப் பிரிவிற்கு சுசந்திகா ஜயசிங்கவே செய்திருந்தார்.

கைது செய்யப்பட்டுள்ள தம்மிக நந்தகுமார் ஹொரணை நீதிமன்றத்தில்ஆஜர்செய்யப்படவுள்ளார். (ஸ்ரீ-2)

# றுகுணு பல்கலைக்கும் அமெரிக்க ஹவாய் பல்கலைக்குமிடையில் ஒப்பந்தம் கைச்சாத்து

றுகுணு பல்கலைக்கழகத்திற்கும் அமெரிக்க ஹவாய் பசுபிக் பல்கலைக் கழகத்திற்கும் இடையில் ஒப்பந்தம் ஒன்று நேற்று கொழும்பில் கைச்சாத்திடப்பட்டது. இரண்டு பல்கலைக்கழகங்களுக்கும் இடையில் மாணவர்களை பரிமாற்றம் செய்யும் நோக்கில் இந்த ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது.

இதன்மூலம் இலங்கை மாணவர்கள் குறுங்கால கல்வி நடவடிக்கைகளுக்காக ஹவாய் பல்கலைக்கழகத்தில் கற்கும் வாய்ப்பை பெற்றுக் கொள்ள முடியும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் விடுதலைப் புலிகளின் பாரிய ஆயுதக் களஞ்சியம் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பு மாங்கேணி பிரதேசத்தில் விடுதலைப்புலிகளின் பாரிய ஆயுதக் களஞ்சியமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் அறிவித்துள்ளனர்.

மாங்கேணிக்குளம் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையை அடுத்தே பிரஸ்தாப ஆயுதக்களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய நேற்று முன்தினம் அறிவித்துள்ளார்.

பல்வேறு வகையான துப்பாக்கிகளுக்கு பயன்படுத்தப்படும் பெருந்தொகையான ரவைகள், பல்ரக துப்பாக்கி வகைகள், குண்டெறிகருவிகள், கைக்குண்டுகள் உள்ளிட்ட பெருந்தொகையான குண்டுவகைகள் தொலைத்தொடர்புக் கருவிகள், அதியுயர் தொழில்நுட்பத் தகவல் பரிமாற்றக் கருவிகள், தகவல் பரிமாற்ற கருவிகளுக்கான அலைவரிசை சீராக்கி அன்டெனாக்கள், புலிகளின் இடைப்பட்டிகள், கிளைமோர்க்குண்டுகள், விமான எதிர்ப்பு குண்டுகள் என்பன பெருந்தொகையில் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கிழக்குப் பிராந்தியக் கடற்படைத் கட்டளைத்தளபதியின் பணிப்பின் பேரில் கடந்த 22 ஆம் திகதி மேற்கொண்ட விசேட சோதனையொன்றின் போதே கடற்படையினரால் பிரஸ்தாப ஆயுதக் களஞ்சியம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்படையின் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)


1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

பூநகரியை பிறப்பிடமாகவும், வல்வெட்டித்துறையை வசிப்பிடமாகவும் கொண்டு வாழ்ந்த

அமரர் இராசம்மா செல்லக்கண்டு (இராசநாயகம்)

தோற்றம் 11.10.1943 மறைவு 07.05.2010

திதி-அபரபக்க நவமி



எம் குடும்பம் வாழ்வில் உயர்ச்சிபெற வழி காட்டிய அன்புத் தாயின் வீட்டுக் கிருத்திய நிகழ்வுகள் இன்று (26.04.2011) செவ்வாய்க்கிழமை முற்பகல் 12 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் நடைபெறும்.

கணவன் செல்லக்கண்டு (இராசநாயகம்)
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

சிவகுருவித்தியாசாலை வீதி,
வல்வெட்டித்துறை.

# பரீட்சைப் பெறுபேறுகள் கிடைக்காத மாணவர்களுக்கான கலந்துரையாடல்

(அல்வாய்)

வடமராட்சி வலய பாடசாலைகளில் க.பொ.த.(சா/த) பரீட்சை பெறுபேறுகள் கிடைக்காத மாணவர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் 29 ஆம் திகதி காலை 9 மணிக்கு யா/புலோலி மெ.மி.த.க. பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கொழும்பு மத்திய பரீட்சை திணைக்களத்தின் ஆணையாளர் நேரடியாக சகல கல்வி வலயங்களுக்கும் சென்று இதுவரை பரீட்சை முடிவுகள் கிடைக்காத மாணவர்களையும் அவர்கள் தோற்றிய பாடசாலை அதிபர்களையும் சந்திக்கவுள்ளார்.

மாணவர்கள் சமூகம் தரும் பொழுது பரீட்சைக்கு தோற்றிய அஞ்சல் அடையாள அட்டை, உறுதி செய்யப்பட்ட புகைப்படம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை தவறாது எடுத்து வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனிப்பட்ட முறையில் தோற்றிய பரீட்சார்த்திகளும் இக்கலந்துரையாடலில் முக்கிய ஆவணங்களுடன் பங்குபற்றலாம் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-19)

# வடமாகாணத்தில் அதிசிறந்த வைத்தியசாலையாக தெரிவு

(வல்வெட்டித்துறை)

வல்வெட்டித்துறை பிரதேச வைத்தியசாலை வடமாகாணத்தில் அதிசிறந்த வைத்தியசாலையாகவும் முழு இலங்கையிலுமுள்ள 243 பிரதேச வைத்தியசாலைகளில் கடந்த 2009-2010 காலப்பகுதிக்கான சிறந்த வைத்தியசாலைகளில் ஒன்றாகவும் கணிக்கப்பட்டு சுகாதார அமைச்சினால் சான்றிதழ் வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அகில உலக ரீதியில் சர்வதேச தரத்தில் உள்ள வைத்தியசாலை என்ற மங்காப் புகழையும் அமெரிக்கத் தூதரகம், பின்லாந்து செஞ்சிலுவைச் சங்கம், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க சம்மேளனம் என்பன வழங்கியிருக்கின்றன.

(ஸ்ரீ-3-63)

# கையடக்கத் தொலைபேசியில் ஆபாசப் படங்கள் வைத்திருந்த நபருக்கு ரூ.20ஆயிரம் அபராதம்

(கரவெட்டி)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பிரதேசத்தில் சிறுமிகளின் ஆபாசப்படங்களை தனது கையடக்கத் தொலைபேசியிலும் சிம் அட்டையிலும் பதிவு செய்து வைத்திருந்த நபருக்கு பருத்தித்துறை நீதவான் நீதிமன்றம் இருபது ஆயிரம் ரூபா அபராதம் விதித்து நேற்றுத் தீர்ப்பளித்துள்ளது.

குறித்த நபர் சம்பவதினம் தனது கையடக்கத் தொலைபேசியிலும் சிம் அட்டையிலும் சிறுமிகளின் ஆபாசப் படங்களை வைத்திருந்த வேளை பருத்தித்துறைப் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த நீதிபதி குறித்த நபர் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தை விதித்ததுடன் ஆபாசப்படங்களை உடன் அழிக்க வேண்டும் என்றும் சான்றுப்பொருளான கையடக்கத் தொலைபேசியை அரச உடமையாக்க வேண்டும் என்றும் தனது தீர்ப்பில் குறிப்பிட்டார். (ஸ்ரீ-3-24)

# பாலியல் குற்றச்சாட்டில் கைதான சந்தேக நபருக்கு விளக்கமறியல்

(சாவகச்சேரி)

பத்து வயது சிறுமியை பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கியதாக சாவகச்சேரி பொலிஸாரால் கைது செய்யப்பட்ட கல்வயலைச் சேர்ந்த 60 வயது நபர் கடந்த 22 ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்ற பதில் நீதிபதி செ.கணபதிப்பிள்ளை முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டார்.

வழக்கை விசாரித்த பதில் நீதிபதி குறித் நபரை எதிர்வரும் மே மாதம் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (ஸ்ரீ-3-29)

# காணிப் பதிவாளரை நியமிக்க கோரிக்கை

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மேலதிக மாவட்ட காணிப் பதிவாளர் அலுவலகத்திற்கு நிரந்தர பதிவாளரை நியமிக்க வேண்டும் என பருத்தித்துறை பிரதேச செயலர் கோரிக்கை விடுத்துள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரிடம் அவர் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளார்.

இவ் அலுவலகத்தில் இருந்த பதிவாளர் மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் ஆகியோர் ஓய்வு பெற்றுள்ளதாகவும் புதிய பதிவாளரை நியமிக்குமாறும் அவர் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3-10)

# அனுமதிப்பத்திரமின்றி பசுமாட்டை கொண்டு வந்தவருக்கு அபராதம்

(சாவகச்சேரி)

அனுமதிப்பத்திரம் இன்றி முகமாலையிலிருந்து பசுமாட்டை வாகனத்தில் கொண்டு சென்ற நான்கு பேருக்கு எதிராக சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.




வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற நீதிபதி மாணிக்கவாசகர் கணேராசா குறித்த நபர்கள் மன்றில் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு தலா 2 ஆயிரம் ரூபா வீதம் 8 ஆயிரம் ரூபா அபராதம் விதித்து தீர்ப்பளித்தார்.

வாகனத்தையும் மாட்டையும் பிணை முறியில் எடுத்துச் செல்ல அனுமதித்ததுடன் வாகனம் சம்பந்தமான விசாரணையை எதிர்வரும் மே மாதம் 10 ஆம் திகதிக்கு ஒத்தி வைத்தார். (ஸ்ரீ-3-29-24)

# போதிய நிவாரண வசதிகள் இன்றி அல்லலுறும் மீனவக் குடும்பங்கள்

(பருத்தித்துறை)

வடமராட்சி வடக்கு மீனவர் குடும்பங்கள் வாழ்வாதார பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதாக வடமராட்சி வடக்கு கடற்தொழிலாளர் சமாசத் தலைவர் அ.எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு பிரதேச செயலாக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யுத்தத்தால் வன்னிக்கு சென்று தமது உறவுகளை இழந்து, சொத்துக்களை இழந்து மீளக்குடியேறிய மீனவக் குடும்பங்கள் போதிய நிவாரண வசதிகள் இல்லாமல் அவதியுறுவதாக தெரிவித்துள்ளார்.

இவர்களுக்கான நிவாரண உதவிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவித்தார்.

(ஸ்ரீ-3-10)

# மின்னிணைப்பைப் பெற்றுக் கொள்வதில் சுனாமி வீட்டுத்திட்ட பயனாளிகள் சிரமம்

(அல்வாய்)

சுனாமி வீட்டுத்திட்ட பயனாளிகள் சிலர் புதிதாக மின் இணைப்பினை பெறுவதற்கான பணத்தினை செலுத்தியிருந்த போதும் வீட்டிற்கான மின் இணைப்பு இதுவரை வழங்கப்படவில்லையென வடமராட்சி வடக்கு ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்தில் வடமராட்சி பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

இதற்கு வடமராட்சி பிரதேச மின் அத்தியட்சகர் பதிலளிக்கையில்,

இத்திட்டத்திற்கான நிதி முடிவுறுத்தப்பட்டுள்ளது எனவும் மீளவும் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து பணத்தினை கட்டுவதன் மூலமே புதிய மின் இணைப்பினை பெற்றுக் கொள்ளலாம் எனவும் தெரிவித்தார்.

இதேவேளை புலோலி பல்லப்பை இராணுவ முகாம் நீக்கப்பட்ட பின்பு அப்பகுதியில் வன்னியிலிருந்து மீளக்குடியமர்ந்த மக்களின் வீடுகளுக்கு மின் இணைப்பினை விரைவில் ஏற்படுத்தி தருமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ஸ்ரீ-3-19)






காரைநகர் சமுர்த்தி வங்கியின் புத்தாண்டு விளையாட்டு விழா கடந்த 23 ஆம் திகதி கலாநிதி தியாகராஜா மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் தி.சசிக்குமார் தலைமையுரையாற்றுவதையும் நடைபெற்ற பாரம்பரிய விளையாட்டுகளான கிடுகு பின்னல், கைக்கொடி சாவரி, போன்ற நிகழ்வுகளையும் பிரதம விருந்தினரான யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள் காரைநகர் செய்தியாளர்)

# ஈழத் தமிழர்களுக்காக தீக்குளித்த கிருஷ்ணமூர்த்தி

## இலங்கைத் தமிழர்களுக்கு இந்தியாவே சூர்ப்பனகை

இலங்கையில் போர் நடந்த போது, அதைத் தடுத்து நிறுத்தக் கோரி தீக்குளித்து இறந்த முத்துக்குமாரைப்போலவே, இலங்கையில் மிச்சம் இருக்கும் தமிழர்களும் படுகொலை செய்யப்படுவதைக் கேள்விப்பட்டு மனம் உடைந்து தீக்குளித்து இறந்துள்ளார் கிருஷ்ணமூர்த்தி.

நெல்லை மாவட்டம் கலிங்கப்பட்டி அருகே உள்ள சீகம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, பொறியியல் பட்டதாரி. ராஜஸ்தான் மாநிலத்தில் வோல்டெக் இன்ஜினியர்ஸ் பிறைவெட் லிமிட்டெட் என்ற நிறுவனத்தில் வேலை செய்தார். இலங்கையில் முள்வேலிக்குள் அடைபட்டுக்கிடக்கும் தமிழர்கள் மீது தொடர்ந்து நடத்தப்படும் வன்முறைகளும், பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகளும், இவருக்குத் தொடர்ந்து வேதனையாக இருந்திருக்கிறது. இலங்கைப் படுகொலைகள் குறித்து நண்பர்களிடம் அடிக்கடி பேசி அழுதிருக்கிறார்.

விடுமுறைக்காக ஊருக்கு வந்த கிருஷ்ணமூர்த்தி 18ஆம் திகதி அதிகாலையில் பெற்றோல் ஊற்றி தன்னையே எரித்துக்கொண்டார். உயிர் துறக்க முடிவு செய்ததும், தனது மனக்குமுறல்களை எல்லாம் கடிதத்தில் கொட்டி இருக்கிறார்.

அன்று இராவணன் செய்த கொடுமையான செயல்களை இன்று சிங்களம் செய்கிறது. அவர்களுக்கும் இப்படி ஒரு நிலை ஏற்பட்டால் என்ன ஆகும் என்பதை நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் அனைவரையும் ஒன்றிணைத்து அவர்களுக்கு தனிநாடு பெற்றுத்தரவேண்டும். அதுவரை தமிழகத்தில் யாரும் ஆட்சிப் பொறுப்பேற்கக் கூடாது.

அப்படிப் பொறுப்பேற்றால், விஷ்ணுவின் பிறப்பு என்று சொல்லிக் கொள்ளும் கோயில்கள் அனைத்தையும் மூடி விடுங்கள். இந்திய அரசுதான் இன்றைய சூர்ப்பனகை... என்று அவரது கடிதம் தொடர்கிறது...

"இலங்கைத் தமிழர்களுக்காகப் போராடிய போராட்டத்தில் முத்துக்குமாரே சிறந்தவர். இலங்கைத் தமிழர்களுக்காகப் போராட மீண்டும் என் ஆஞ்சநேயரை அழைக்கிறேன். அப்பா, அம்மா, சீனி, தினகரன் என்னை மன்னித்துவிடுங்கள். எனக்குப் பிறவியில் கொடுக்கப்பட்ட தொழில் இதுதான். இதை நான் செய்யாவிட்டால், மிகப் பெரிய குற்றவாளி நான்தான்!" என்று முடிகிறது கடிதம்.


தீக்குளித்த கிருஷ்ணமூர்த்தி, கோவில்பட்டி அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு உயிருக்கு போராடிய நிலையிலும் இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதாக உணர்ச்சி பொங்கப் பேசி இருக்கிறார். ஆனால் 'வேதனையில் பிதற்றுகிறார்' என்று சொல்லி பொலிஸார், கிருஷ்ணமூர்த்தியிடம் மரண வாக்குமூலம் வாங்க ஆர்வம் காட்டவில்லை.

தகவல் கேள்விப்பட்டு வை.கோ பதறியடித்து ஓடி வந்தார். சீகம்பட்டி கிராமத்துக்கு வந்த வை.கோ, "தென் மாவட்டத்தின் கடைக்கோடியில் இருக்கும் குக்கிராமத்தைச் சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி, வாழ வேண்டிய வயதில் ஈழத்தமிழருக்காக செய்திருக்கும் இந்தத் தியாகம் வெளியே தெரியாமல் போய்விடக் கூடாது. யாரும் தங்களை மாய்த்துக்கொள்ளும் செயலில் இறங்க வேண்டாம்!' என்று நானும் நெடுமாறன் அண்ணனும் பல முறை கேட்டுக்கொண்ட பின்னரும் உயிர்த் தியாகங்கள் தொடர்வது வேதனையாக இருக்கிறது. ஈழத்தமிழர்க


தீக்காயத்துடன் சுப்புலட்சுமி

ளுக்குத் தனிநாடு வேண்டும் என்பதற்காக உயிர்த் தியாகம் செய்த கிருஷ்ணமூர்த்தியின் கோரிக்கை நிறைவேற வேண்டும்.

இலங்கை ஒரு போர்க் குற்றவாளி என ஐ.நா. அறிவித்து இருப்பதால், சர்வதேச நீதிமன்றத்தில் அவரை நிறுத்தித் தண்டிக்க வேண்டும். இலங்கையின் போர்க் குற்றங்களை, மக்களுக்குத் தெரியவிடாமல் இந்திய அரசு முயற்சித்தது என இங்கே பகிரங்கமாகக் குற்றம் சாட்டுகிறேன். அவருடைய உயிர்த் தியாகத்தை மறைக்க நினைக்கும் தமிழகப் பொலிஸாரின் செயல் கடும் கண்டனத்துக்குரியது! என்று வை.கோ கொந்தளித்தார்.




கிருஷ்ணமூர்த்தி தீக்குளித்த போது தடுக்க முயன்ற அவரது தாய் சுப்புலட்சுமிக்குத் தீக்காயங்கள் ஏற்பட்டன. அவரை மதுரை அப் போலோ மருத்துவமனையில் சேர்த்துள்ளார் வை.கோ.

நம்மிடம் பேசிய கிருஷ்ணமூர்த்தியின் தம்பி தினகரன் "இலங்கை விவகாரம் பற்றி எங்க அண்ணன் அடிக்கடி பேசுவார். தேர்தல் அன்றுகூட, இலங்கையில் தமிழர்கள் கொல்லப்பட்டதற்கு காங்கிரஸ் கட்சிதான் காரணம். அதனால் அந்தக் கூட்டணியில் இருக்கும் தி.மு.க.வுக்கு வாக்குப் போடாதீங்க! என்று எல்லோரிடமும் சொல்லிக் கொண்டு இருந்தார்.

இப்போது பொலிஸ்காரர்கள் மஃப்டியில் வந்து அந்தக் கடிதத்தை எதுக்காக வை.கோவிடம் கொடுத்தீர்கள்? என்று கேட்டு தொல்லை கொடுக்கிறார்கள். அண்ணனின் செல்போனை எடுத்துக் கொண்டவர்கள், வேறு என்னென்ன பொருட்கள் இருக்கின்றன என்று கேட்டுத்தொல்லை தருகிறார்கள்..." என்று பதறினார்.

இறுதி நேரத்தில் உடன் இருந்த உறவினரான சுரேஷ், "இலங்கைத் தமிழர்களைப் பற்றிப் பேசுவானே தவிர, இந்த அளவுக்குப் போவான்னு நினைச்சுக்கூட பார்க்கலை. அவனிடம் இருந்த புத்தகங்கள், பகவத்கீதை மற்றும் டயரிகளை முதலில் எரித்து இருக்கிறான். பின்னர் தன்னையே எரித்துக்கொண்டான். மருத்துவமனையில் கூட, இலங்கையில் இப்படி ஒரு கொடூரம் நடந்துவிட்டதே. என் மக்களுக்கு இப்படி ஒரு நிலைமை வந்துருச்சே... என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இருந்தான்..." என்று விம்மினான்.

இதற்கிடையே கிருஷ்ணமூர்த்தியின் கடைசி வாக்குமூலத்தை பொலிஸார் பதிவு செய்யாமல் போனதன் பின்னணி என்ன? என்ற கேள்வி எழுகிறது.

இது குறித்துப் பேசிய நெல்லை டி.ஐ.ஜி. சண்முகராஜேஸ்வரன் "இப்போது டி.எஸ்.பி.தலைமையில் விசாரணை நடத்த உத்தரவு போட்டிருக்கிறேன். விசாரணைக்காக கிருஷ்ணமூர்த்தியின் செல்போனை காவலர்கள் எடுத்துப் போயிக்கலாம். மற்றபடி, அந்த சம்பவத்தை மறைக்க வேண்டும் என்ற நோக்கம் எங்களுக்குக் கிடையாது!" என்றார்.

தமிழர்களை மீண்டும் உசுப்பேற்றி இருக்கிறது ஒரு நெருப்பு!

-ஆண்டனிராஜ்-

ஜூனியர் விகடன்

# பொன்சேகாவை விடுதலை செய்வதன் மூலம் நிபுணர் அறிக்கையை முறியடிக்க முடியும்

## சஜித் பிரேமதாச எம்.பி.தெரிவிப்பு

(கொழும்பு)

ஜனநாயகத் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சரத்பொன்சேகாவை விடுதலை செய்வதன் மூலம் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கையை முறியடிக்க முடியும் என ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

சகல அரசியல் கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மோசமான வெளிவிவகார கொள்கையினால் இவ்வாறான தேவையற்ற வெளிநாட்டு அழுத்தங்கள் நாட்டின் மீது பிரயோகிக்கப்படுவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் முழு நாடுமே பாதகமான நிலைமைகளை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் தோற்கடிக்கப்பட்டதில் சந்தேகமில்லை என்ற போதிலும் இன, மத, மொழி பேதங்களின்றி நாட்டின் சகல மக்களையும் பாதுகாக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கட்சி நியமணங்களின் போது மறுசீரமைப்பிற்காக குரல் கொடுத்தவர்களின் பிரதிநிதித்துவம் உறுதிப்படுத் தப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தி யுள்ளார்.

கட்சி மறுசீரமைப்பிற்காக குரல் கொடுத்தவர்கள் பழிவாங்கப்பட்டால் அது ஓர் துரதிர்ஷ்டவாசமான நிலைமையாக கருதப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)

# பரீட்சை முடிவு கிடைக்க பெறாத மாணவர்களுக்கு

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் இந்துக் கல்லூரியில் க.பொ. த (சாதாரணதரம்)2010 பரீட்சைக்கு தோற்றியோரில் பரீட்சை முடிவு கிடைக்கப் பெறாத மாணவர்கள் இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு அதிபரைச் சந்திக்குமாறு கேட்கப்படுகிறார்கள்.

அதிபரை சந்திக்கத் தவறும் மாணவர்களுக்கு பரீட்சை முடிவு கிடைக்காது என அதிபர் ஏ.அகிலதாஸ் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

# பரீட்சை மோசடிகள் குறித்து 6500 மாணவர்களிடம் விசாரணை

(கொழும்பு)

2010 ஆம் ஆண்டுக்கான க.பொ.த (சா/து) பரீட்சையில் மோசடி செய்ததாக தெரிவிக்கப்படும் 6ஆயிரத்து 500 மாணவர்களிடம் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

பரீட்சை திணைக்களத்தின் விசாரணைப் பிரிவினரால் இதற்கான விசாரணை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பரீட்சை ஆணையாளர் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இரு வாரங்களுக்குள் விசாரணைகளை முடிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் எந்த வித மோசடியிலும் ஈடுபடவில்லை என நிரூபிக்கப்படும் மாணவர்களின் பரீட்சை முடிவுகள் உடனடியாக வெளியிடப்படும் என அவர் கூறினார்.

குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்ட மாணவர்களின் பரீட்சை முடிவுகள் தடைசெய்யப் படுமென்பதுடன் அவர்கள் இரண்டு முதல் ஐந்து வருடங்கள் வரை பரீட்சை எழுதுவதிலிருந்து இடைநிறுத்தப்படுவார்களென வும் அனுர எதிரிசிங்க தெரிவித்தார்.

இதேவேளை கடந்த ஆண்டுக்கான க.பொ. த.(சா/த) பரீட்சைக்கு தபால் அடையாள அட்டையைப் சமர்ப்பித்து பரீட்சை எழுதிய சுமார் 10 ஆயிரம் பரீட்சார்த்திகளின் முடிவுகளை இடை நிறுத்தி வைப்பதற்கு பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

(ஸ்ரீ-2)

# எடை குறைந்த பாணை விற்கும் வர்த்தகர்களுக்கு எதிராக நடவடிக்கை

## அமைச்சர் ஜோன்ஸ்டன் அறிவிப்பு

(கொழும்பு)

பாண் விற்பனையில் மோசடி செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு வர்த்தக அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ பணித்துள்ளார்.

எடை குறைந்த பாணை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அவர் அளவை மற்றும் நிறுவை சேவை திணைக்களத்துக்கு நேற்று முன்தினம் பணிப்புரை விடுத்துள்ளார்.

ஒரு பாண் 450 கிராம் எடையை கொண்டிருக்க வேண்டும் அதற்கு குறைவான நிறை கொண்ட பாணை விற்பனை செய்யும் வர்த்தகர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

எடை குறைந்த பாண் கடைகளில் விற்கப்படுவதாக பொதுமக்களிடமிருந்து தனக்கு பல முறைப்பாடுகள் வந்திருப்பதாகவும் எனவே அவ்வாறு நிறை குறைந்த பாணை விற்பனை செய்யும் வர்த்தகர்களை பிடிப் பதற்காக நாடளாவியரீதியில் சுற்றிவளைப் புக்களை மேற்கொள்ளுமாறு தான் உத்தர விட்டுள்ளதாக அமைச்சர் மேலும் கூறினார்.

(ஸ்ரீ-2)

# பல்கலைக்கழக மாணவர்கள் பரீட்சை விடைத்தாள்களை பார்வையிட அனுமதி

(கொழும்பு)

பல்கலைக்கழக மாணவர்கள் பரீட்சை விடைத்தாள்களை பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட உள்ளது.

இதுவரை காலமும் பரீட்சை விடைத்தாள்களை பார்வையிடுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

விரிவுரையாளர்கள் மற்றும் பேராசிரியர்களினால் திருத்தப்படும் பரீட்சை வினாத்தாள்களை மாணவர்கள் பார்வையிட அனுமதிக்கப்படுவதில்லை.

பெறுபேறுகள் தொடர்பில் சந்தேகம் காணப்படும் மாணவர்கள் மீள் பரிசீலனை செய்வதற்கு கோரிக்கை விடுக்கக்கூடிய புதிய திட்டமென்று விரைவில் அறிமுகப் படுத்தப் படவுள்ளது.

கல்விப் பொதுத்தராதர மற்றும் சாதாரணதர பரீட்சைகளின் போது பரீட்சை விடைத்தாள்களை மீள் பரிசீலனை செய்யுமாறு கோரிக்கை விடுக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் காலங்களில் இந்த சலுகை பல்கலைக்கழக மாணவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

(ஸ்ரீ-2)

# சாய்பாபா பக்தர்கள் இந்தியா செல்ல விசேட விமான சேவைகள்

(கொழும்பு)

ஸ்ரீ சத்ய சாய் பாபாவின் இறுதிக் கிரியைகளில் அவரின் பக்தர்கள் கலந்து கொள்வதற்கு வசதியாக விசேட ஏற்பாடுகளை செய்துள்ளதாக ஸ்ரீலங்கன் எயார் லைன்ஸ் நிறுவனம் அறிவித்துள்ளது.

ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் பெங்களூருக்கான தனது தினசரி விமான சேவைகளில் கூடுதலாக பயணிகளை உள்ளடக்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அந் நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந் நிகழ்வில் பங்கேற்பதற்காக குழுவாக இந்தியா செல்ல விரும்பும் பக்தர்கள் வேண்டுகோள் விடுக்கும் பட்சத்தில் அதற்கென விசேட விமான சேவைகளை ஒழுங்கு செய்ய ஸ்ரீலங்கன் விமான சேவை தயாராக உள்ளதாக விமான சேவைகள் மற்றும் சிவில் விமான போக்குவரத்து அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன அறிவித்துள்ளார். இதற்கான அறிவுறுத்தல்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வழங்கியுள்ளதாகவும் அவர் கூறினார்.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை 0197335500 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்பு கொள்வதன் மூலம் அல்லது பயண முகவர் நிறுவனங்கள் மூலம் அறிந்துகொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

சாயிபாபாவுக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கி படை எடுத்த வண்ணம் உள்ளனர்.

புட்டபர்த்தி பிரசாந்தி நிலையத்தில் சாய் குல்வன்ந் மண்டபத்தில் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது. சாயி பாபாவின் இறுதிக் கிரியைகள் நாளை புதன்கிழமை இடம் பெறும்.

(ஸ்ரீ-2)



அத்தியடி விநாயகர் கோவில் மகோற்சவம் அண்மையில் இடம்பெற்றது. 5 ஆம் நாள் திருவிழாவின் போது ஓதுவார் ஆர்.சண்முகராசாவிற்கு பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப் படுவதைப் படத்தில் காணலாம்.

# பொன்சேகாவின் நலன்கருதி சிறப்பு பூஜை வழிபாடுகள்

(கொழும்பு)

சிறையில் அடைக்கப்பட்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகாவின் நலனுக்காக அவரது மனைவி அனோமா பொன்சேகா உட்பட குழுவினர் சிவனொளி பாதமலை அடிவாரத்தில் உள்ள நல்ல தண்ணி என்ற இடத்தில் சிறப்புப்பூஜை நடத்தினர்.

கட்சி ஆதரவாளர்கள் பலர் இதில் கலந்து கொண்டதோடு அவர் விடுதலையாகி பொது சேவையில் ஈடுபட வேண்டுமென பிரார்த்தனை மற்றும் வழிபாடுகள் இடம் பெற்றன. (ஸ்ரீ-2)

# இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்

8



**திருகோணமலையில் தம்பிராசாவின் புதிய கண்டுபிடிப்புகள்**

கடந்த மூன்று தசாப்தங்களாகக் கலாசார முக்கோணத்தின் ஆதரவில் நடைபெற்ற அகழ்வுகளிற் சில தமிழ்க் கல்வெட்டுகள் கிடைத்துள்ளன. சாம்பல்தீவுக் கிராமசபையின் தலைவராகவிருந்த நா.தம்பிராசா தொல்பொருள் சின்னங்களின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்தவர். திருகோணமலை மாவட்டத்திலுள்ள வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சோழ இலங்கேஸ்வரனின் காலத்துக் கந்தளாய்க் கல்வெட்டு, மானாங்கேணிக் கல்வெட்டு என்பனவும் திருக்கோணேஸ்வரம் பற்றி அரிய விவரங்கள் அடங்கிய நிலாவெளிக் கல்வெட்டும் அவரின் இடையறாத தேடல் முயற்சிகளின் விளைவாகக் கிடைத்துள்ளன. அவற்றைப் பற்றி முன்பு வேறெவரும் அறிந்திருக்கவில்லை.

தம்பிராசா கண்டறிந்த சாசனங்களைப் பற்றி அவர் மூலமாகப் பேராதனைப் பல்கலைக்கழகத்து வரலாற்றுத்துறையில் விரிவுரையாளராகவிருந்த செல்லத்துரை குணசிங்கம் அறிந்து கொண்டார். குணசிங்கம் மாணவராகவிருந்த காலத்தில் தனது ஆசிரியரான கலாநிதி கா.இந்திரபாலாவிடம் தமிழ்ச் சாசனங்களைப் பற்றிப் படித்தவர். அவர்களிருவரும் தம்பிராசா கண்டறிந்த சாசனங்களைத் தலத்திலே கண்டு, அவற்றைப் படியெடுத்து ஆராய்ந்து கொள்ள முடிந்தது. அதன் பின்னரே தொல்பொருளியல் திணைக்களத்தினர் சோழ இலங்கேஸ்வரன் காலத்துக் கந்தளாய்ச் சாசனத்தைப் படி எடுத்தனர். மானாங்கேணி, நிலாவெளி ஆகியவற்றிலுள்ள கல்வெட்டுகளின் மீது அவர்கள் கவனஞ் செலுத்தவில்லை.

அரசாங்க வெளியீடுகளில், 1912 ஆம் ஆண்டுக்குப் பின்பு வெளிவந்த சாசனங்களைக் காலவரையறைப்படி அட்டவணைப்படுத்தி வெளியிடுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே, இலங்கையில் இதுவரை எத்தனை தமிழ்ச் சாசனங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்பதைத் திட்டவட்டமாகக் கூற முடியவில்லை. ஏறக்குறைய 150 தமிழ்ச் சாசனங்கள் உள்ளன என்பது ஒரு கணிப்பீடாகும்.

ஈழத்துத் தமிழ்ச் சாசனங்களிற் பல துண்டமாயுள்ளன. சிலவற்றில் மழை, வெயில், காற்று என்பவற்றின் தாக்கத்தினால் எழுத்துகள் சிதைவடைந்துள்ளன. சாசனங்கள் எழுதப்பட்ட பல கற்றூண்களும் பாறைக் கற்களும் புதிய கட்டுமானங்களுக்குப் பயன்படுத்தப்பட்ட சமயங்களிலே தேவைக்கேற்ப உடைக்கப்பட்டுள்ளன. சோழ இலங்கேஸ்வரன் காலத்து மானாங்கேணிச் சாசனம், ஜயம்கொண்டசோழ மூவேந்தவேளானின் நடவடிக்கைகளைக் குறிப்பிடும் ஊறாத்துறைக் கல்வெட்டு, சோடகங்கனைப் பற்றிய திருகோணமலைக் கோட்டையிற் கிடைத்த கல்வெட்டு, சிவாலயப்பிரியனான இராமன்புயங்கன் என்னும் வணிகனைப் பற்றிய கல்வெட்டு முதலியவை அத்தகையனவாகும்[4]. கரையோர மாகாணங்களில் அமைந்திருந்த கோயில்கள் யாவும் போர்த்துக்கேயரின் ஆட்சிக் காலத்தில் இடிபாடுகளாகிய பொழுது அவற்றிலிருந்த சாசனங்களும் அடையாளங் காணமுடியாதவாறு மறைந்துவிட்டன. எனவே, முற்காலங்களில் எழுதப்பட்ட சாசனங்களிற் பெரும்பாலானவை அழிந்தொழிந்துவிட்டன என்று கருதலாம்.

எஞ்சியுள்ள சாசனங்களைக் கண்டெடுத்து, அவற்றைப் பாதுகாப்பான இடங்களில் வைத்தல் அவசியமாகும். தொல்பொருள் சின்னங்களில் ஆர்வங் கொண்டவர்களும் தனிப்பட்ட முறையிலோ உத்தியோக பூர்வமாகவோ இதனைப் பற்றி ஒன்றும் செய்துகொள்ள முடிவதில்லை. அவர்களைச் சட்டம் கட்டுப்படுத்துகின்றது. சட்டபூர்வமாக இவற்றைச் செய்வதற்கு அதிகாரம் பெற்ற நிறுவனங்களில் உள்ளவர்களாலும் எதனையும் செய்யமுடிவில்லை. சமூகத் தேவைகளுக்கும் நடைமுறைச் சாத்தியங்களுக்கும் இசைவாகச் சட்டங்கள் அமைதல் அவசியமாகும்.

இப்பொழுது காணப்படும் சூழ்நிலையில் சாசனங்களில் வித்துவ பூர்வமான ஈடுபாடு கொண்டவர்கள் நிறைவேற்ற வேண்டிய சில பணிகள் உண்டு. அவற்றிலொன்று இதுவரை கிடைத்துள்ள சாசனங்களின் திருத்திய வாசகங்களை ஒரு தொகுதியாக்கி அவற்றைப் பற்றிய விளக்கக் குறிப்புகளோடு வெளியிடுவதாகும். மற்றொன்று சாசனங்கள், அவற்றோடு தொடர்புடைய வேறு தொல்பொருட் சின்னங்கள் என்பன பற்றிய புரிந்துணர்வை மக்களிடையில் ஏற்படுத்துவதாகும். இப்பணிகளும் இலகுவானவையன்று. தங்கள் கலாசார பாரம்பரியங்கள், தேச வழக்காறுகள், சமூக வரலாறுகள் என்பனபற்றிய உணர்ச்சி தமிழரிடையிலே குன்றிவிட்டது. தொல்பொருட் சின்னங்கள், கலாசார சின்னங்கள் என்பவற்றைத் தேடி, பெறுமதி வாய்ந்தனவென்று கருதிப் பேணிக்கொள்ளும் வழக்கம் அவர்களிடையே காணப்படுவதில்லை. ஊடகத் துறையில் உள்ளவர்களின் போக்கும் அனுகூலமானதாக அமைவதில்லை. விளம்பரம், வியாபாரம், பிரசாரம் என்பனவற்றையே இந்நாட்களில் ஊடகங்கள் முன்னிலைப்படுத்துகின்றன. அரசாங்க மட்டத்தில் இவற்றைப் பற்றிய ஒரு கொள்கை முறையின் அடையாளங்கள் தன்னும் காணப்படுவதில்லை. சாசனங்களைப் பற்றிய வெளியீடுகள் ஆராய்ச்சி பூர்வ மானவையாகவும் வித்துவபூர்வமானவையாகவும் அமைவதால் அவற்றை வாசிப்போரின் எண்ணிக்கையும் மிகவும் குறைவாகும். அவற்றில் ஈடுபடுவோருக்கு இலாபம் எதுவும் கிடைப்பதில்லை. பொருள் நட்டமே ஏற்படும். அவர்கள் பொறுமையாகவும் மிகுந்த பிரயத்தனங்களோடும் மேற்கொள்ளும் முயற்சிகள் ஈடுபாட்டின் காரணமானவை. அரசாங்க தரப்பிலிருந்து அத்தகையோருக்குத் தேவையான ஆதரவும் கிடைப்பது அரிதாகும்.

**சாசனங்களில் ஐரோப்பியர் கொண்டிருந்த ஈடுபாடு**

இலங்கையிலே தமிழ்ச் சாசனங்கள் பற்றிய ஆய்வு முயற்சிகளின் வரலாறு சுருக்கமானது. ஆயினும் அது ஒரு நீண்டகால வரலாறாகும். பிரித்தானியர் இலங்கையிலே தொல்பொருள் திணைக்களத்தை உருவாக்குவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே ஐரோப்பிய நூலாசிரியர்கள் தமிழ்ச் சாசனங்களைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளனர். பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த போர்த்துக்கேய ஆசிரியர்களும் அவர்களைப் பின்பற்றி ஒல்லாந்தர் சிலரும் திருக்கோணேஸ்வரத்திலிருந்து கல்வெட்டொன்றைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர். அது ஒரு தீர்க்க தரிசனம் பற்றிய ஆவணமென்றும் அவர்கள் குறிப்பிட்டனர். ஆனால் அவர்களின் குறிப்புகளாற் சாசனம் பற்றிய விபரங்களைத் தெளிவாக அறிந்துகொள்ள முடியவில்லை. அவற்றை அடிப்படையாகக் கொண்டு சென்ற நூற்றாண்டிலே சில பொருத்தமற்ற சிந்தனைகள் உருவாகிவிட்டன. அவற்றைப் பற்றி வேறோரிடத்திலே கவனிக்கப்படும்.

இலங்கையிலுள்ள தமிழ்ச் சாசனமொன்றை முதன்முதலாக வாசித்து, அதன் வாசகத்தைப் பற்றிய விளக்கத்தைத் தெளிவாகப் பதிவு செய்த சிறப்பு பன்-சன்டென் என்னும் ஒல்லாந்தருக்கு உரியதாகும்[5].

அவர் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே திருகோணமலைப் பிராந்திய நிர்வாகப் பிரிவின் அதிபராக விளங்கியவர். தனது பொறுப்பிலுள்ள பிராந்தியத்து ஊர்களையும் நிலப்பகுதிகளையும் நேரிலே பார்த்து, அவற்றின் நிலைமைகளை அறிவதற்கென்று ஒரு தொடர்ச்சியான பிரயாணத்தை அவர் மேற்கொண்டார். கங்குவேலிக்குச் சென்ற சமயத்தில் அங்குள்ள சிலாசாசனத்தைக் கண்டு, அதனாற் கவரப்பட்டதால், அதனைப் பற்றிய சில விபரங்களைத் தனது பதிவேட்டிலே குறிப்பிட்டுள்ளார். கங்குவேலிச் சாசனத்தின் வாசகம் பற்றி அவர் குறிப்பிடுவன பொருத்தமானவையாகக் காணப்படுகின்றன.

இலங்கையில் நிர்வாக அதிகாரிகளாகக் கடமை புரிந்தவர்களிற் பலர் வரலாற்று மரபுகள், தொல்பொருட் சின்னங்கள் ஆகியவற்றில் ஈடுபாடு கொண்டனர். அவற்றை ஆராய்வது தங்கள் ஆய்வுகளின் அடிப்படையிலே கட்டுரைகள் எழுதுவதும் அவர்களின் பொழுதுபோக்காகிவிட்டது. அவர்களிற் சிலர் வித்துவப்புலமை நோக்கிற் பல ஆக்கங்களைப் படைத்துள்ளனர். அவர்களிற் பிரபலமானவர் H.W கொட்றிங்ரன். இலங்கையிற் கிடைத்துள்ள நாணயங்களைப் பற்றி அவர் எழுதிய நூல் இன்றுவரை அத்துறை பற்றிய முதன்மை நூலாக விளங்குகின்றது. சாசனவியலாளர் என்ற வகையிலும் அவர் சிறப்படைந்தார். பல சிங்கள மொழிச் சாசனங்களை வாசித்து, அவற்றின் வாசகங்களை விரிவான விளக்கக் குறிப்புகளுடன் அவர் வெளியிட்டுள்ளார். தமிழ்ச் சானங்களில் இரண்டு அவருடைய விசேட கவனத்தைக் பெற்றன. அவற்றிலொன்று கோட்டகமவிலுள்ள சிங்கையாரியன் கல்வெட்டு; மற்றையது திருகோணமலைக் கோட்டையிலுள்ள சாசனமாகும்[6]. கொட்றிங்ரன் கூறும் விளக்கங்கள் அச்சாசனங்களைப் பற்றிய ஆய்வுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அடிப்படையானவை.

இலங்கையில் நிர்வாகசேவையிற் கடமை புரிந்தவரான ஹியூ நெவில் வேறொரு வகையைச் சேர்ந்தவர். கொட்றிங்ரனைப் போன்று நெவில் பிரபலமடையாத பொழுதிலும் அவர் தொல்பொருட் சின்னங்களைப் பற்றி எழுதிய கட்டுரைகள் மிகவும் பயனுடைவை. வெருகல், திருக்கோயில் என்னுந் தலங்களிலுள்ள தமிழ்ச் சாசனங்களையும் ஆராய்ந்து அவற்றின் வாசகங்களை நெவில் வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அவர் வாசித்து வெளியிட்ட வெருகற் சாசனத்தின் வாசகம் வருமாறு,

1.ஸ்ரீ கும்ரமண் ய
2. நம தெற்கும
3.தில் கயிலவன்னி
4.யனார் உபயம் தம
5.ா சா மகன் பழை
6.யிற் சீம்மாப்பிள்ளை
7.மேற்குப்பிறம் மை
8. டக்களப்பூரவர் நீகொ
9.ம்புக்கரை யூரவர் வ
10.டபுறம் செட்டியள்-உப
11.யம்

இச்சாசனத்தைப் பின்பு ஆராய்ந்த கா.இந்திரபாலா, ஆ.வேலுப்பிள்ளை ஆகிய இருவரும் நெவிலின் வாசகத்திலே சில திருத்தங்களைச் செய்துள்ளனர். யாழ்ப்பாண வரலாறு பற்றிய நூல்களின் ஆசிரியரான செ.இராசநாயகம் முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டின் வாசகத்தை முதன் முதலாக வெளியிட்டார். அந்த வாசகத்திலே சில இடைவெளிகளும் தவறுகளுங் காணப்பட்டன. திருகோணமலைக் கோட்டைச் சாசனம் பற்றி அவர் கொண்டிருந்த கருத்துகள் சாசனம் பற்றிய புரிந்துணர்வுகளுக்கு ஏதுவாக அமையவில்லை என்பதும் இப்பொழுது புலனாகின்றது.

பேராசிரியர் சி.பத்மநாதன்,
B.A, Ph.D, LFIBA

(தொடரும்)

# யாழ்.மாவட்டத்தில் அஸ்வகந்தி எனும் அமுக்கிரா மூலிகையின் பரீட்சார்த்த பயிர்ச்செய்கை

2

ஒரு பழத்தினுள் 35-40 விதைகள் காணப்படும். அறுவடைக் காலமானது தைமாதம்-பங்குனிமாதம் வரை செய்ய லாம். முழுச் செடியையும் வேருடன் சேர்த்துப் பிடுங்க வேண்டும். பின்பு மண்மட்டத்திலிருந்து 1-2 cm உயரத் தில் வேர்களுடன் சேர்த்து தாவரத்தின் மேற்பகுதியிலிருந்து வெட்டி சேகரி த்துக் கொள்ள வேண்டும். பின்பு பக்க வேர்களை சிறிதுசிறிதாக துண்டு களாக வெட்டி கழுவி துப்பரவு செய்து நிழலில் உலர்த்தி எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு வேர்த்துண்டங்களும் 10-17 cm நீளமும் 6-12 cm விட்டமும் உடையதாக இருக்க வேண்டும்.


அமுக்கிரா வேர்க்கிழங்குகள்

நேராகவும் கிளைகளற்றும் உருளை (Cornical) உருவிலும் காணப்படும்.

தற்போது இம் மூலிகையானது மூலிகை வணிகத்தில் பெரும்பங்கு வகிக்கிறது. அமுக்கிரா சித்தமருத்து வத்தில் சூரணம், லேகியம், நெய், தைலம் போன்ற வடிவத்தில் மருந்து களாகவும் (Dietary suplement) உப உணவாக பிஸ்கட், சத்துமா போன்ற வடிவத்திலும் செய்து உபயோகப் படுத்தப்படுகிறது.

இவை அனைத்தும் உடல் உறுதி (உரம்), அழகு (மெருகு) மற்றும் நீண்ட ஆயுளை வழங்கும் சக்தி பெற்றது. மேலும் வாதநோய் களுக்கு நிவாரணம் அளிக்கும் சக்தி இதற்குள்ளது.

இச்சான்றிற்கும் மேலாக அசுவகந் தில் ஆணின் பருவ சுழற்சி என்பது விந்து, விந்தணுக்கள், ஆண் இனப் பெருக்க ஓமோன், விறைப்புத்தன்மை ஆகியவற்றை செயற்படுத்தும் தன்மை கொண்டது.

மேலும் இந்த செய்கையை ஊக்கு விக்கும் தன்மையும் இதற்குண்டு. இதே போல் இயற்கையாகவே முதுமையடையும் தன்மை மட்டு மில்லாது தற்போதுள்ள அன்றாட வேலைப்பளு, மனஉளைச்சல், மனக்கவலை, சுற்றுப்புறச் சூழலி லுள்ள நச்சுத் தன்மை மற்றும் நீரிழிவு, ஆஸ்துமா போன்ற வியாதிகள், உடல் உழைப்பு ஆகிய காரணங்களால் ஆணின் பருவமூப்பு (Andropause) விரைவாக ஏற்படு கின்றது. மேற்குறிப் பிட்ட காரணங்களால் ஆணின் பருவமூப்பு அடைபவர் களுக்கு மீண்டும் இனிமை வீரியத்தை பெற்றுத்தரும் அமுக்கிரா எனும் அசுவகந்தி மூலிகை சிறப்பாக செயற்படுகிறது.

எனவே இம் மருத்துவ முக்கியத் துவம் வாய்ந்த மூலிகையை யாழ். மாவட்டத்தில் பயிர் செய்யும் நோக் குடன் ஆயுள்வேத திணைக்களத்தி னால் குறிப்பிட்ட சில விவசாயிகளை தெரிவுசெய்து தரமான அமுக்கிரா விதைகள் பரீட்சார்த்த பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்டு அவர் களுக்கு பயிர்ச்செய்கை சம்பந்தப் பட்ட விழிப்புணர்வும் ஏற்படுத்தப் பட்டது.


அமுக்கிரா வேர்கள் அறுவடை செய்யப்படுகின்றது.

இதில் தொட்டிலடி சண்டிலிப் பாயை சேர்ந்த க.வீரசிங்கம் என்பவரது தோட்டத்தில் அமுக்கிரா பரீட்சார்த்தப் பயிர்ச்செய்கை வெற்றி கரமாக அறுவடை செய்யப்பட்டது.

ஒருசெடி அமுக்கிராவில் இருந்து கிடைக்கப் பெற்ற அமுக்கிரா வேர்க் கிழங்கின் நிறை 250g ஆக காணப் பட்டமை பரீட்சார்த்த பயிர்ச்செய்கை யின் வெற்றியை உறுதிப்படுத்தி உள்ளது.

ஒருசெடியி.ல் கிட்டத்தட்ட 1000ற்கு மேற்பட்ட விதை பெறப்பட்டுள்ளது. இதனால் தூய இனவிருத்தியை கூடுதலான அளவில் மேற்கொள்ள கூடியதாக இருக்கும்.

அமுக்கிரா செடிகள் குறிப்பிட்ட காலத்தில் அறுவடை செய்யப்பட்டு கழுவி நிழலில் உலர்த்தப்பட்ட அமுக்கிரா வேர்க்கிழங்குகளை படத் தில் காணலாம்.

எனவே இப்பரீட்சாத்த பயிர்ச் செய்கையானது திட்டமிடப்பட்ட பாரிய அளவிலான பயிர்ச்செய்கைக்கு வழிவகுக்கும்.

யாழ். மாவட்டத்திலுள்ள தரிசு நிலங்கள் கூட இப்பயிர்ச் செய்கைக்கு பயன்படுத்தப்படலாம்.

இதனால் பிரதேசமண்வளம், சூழல் ஆகியன பாதுகாக்கப்படுவதுடன் வணிகலாபத்தால் அந்நிய செலா வணியை ஈட்டித் தருவதாக இருக்கும்.

ஏனைய மருத்துவ முறைகளைப் போலல் லாது சுதேசமருத்துவத் தில் மருத்துவர்களே மருந்துகளை தயாரிப்பது இதன் சிறப்பம்சமாகும்.

மருந்துகளின் தரக் கட்டுப்பாட்டை நோக்கும் போது மருந்துகளில் சேரும் மூலப்பொருட்கள் அவற்றின் காலாவதி திகதியை அடையுமுன் மருந்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டால் தரமான மருந்து களைத் தயாரிக்க முடியும்.

டாக்டர் திருமதி வி.சத்தியசீலன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்,
கைதடி.

டாக்டர் த.விஜயகுமார்
பொதுச் சுகாதார வைத்திய அதிகாரி,
ஆயுள் வேதம்.

எனவே மூலப்பொருட்கள் மருத்துவர்களின் நேரடி கண் காணிப்பின் கீழ் பயிரிடப்பட்டு அறுவடை செய்யப்படும் போது தரமான மூலிகை மூலப்பொருட்களை பெற முடியும்.

எனவே எமது பிரதேச மண் வளத்திற்கு உகந்த பயிரிட்டு வளர்க்கக் கூடிய மூலிகைகளை இனங்கண்டு பாதியளவிலான பயிர்ச்செய்கையை மேற்கொள்வதால் தரமான மூலிகை மூலப்பொருட்களை பெறக்கூடியதாக இருக்கும்.

( முற்றும் )

# தடுத்துவைக்கப்பட்டுள்ளோரின் விபரங்களை பார்வையிட த.தே.கூட்டமைப்புக்கு சந்தர்ப்பம்

(கொழும்பு)

பயங்கரவாத நடவடிக்கைகளுடன் தொடர் புடைய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப் பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள சந்தேக நபர் களின் பெயர் விபரங்களை பார்வையிடுவ தற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

அரசாங்கப் பிரதிநிதிகளும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர்களும் கைதிகள் பற்றிய விபரங்களை பார்வை யிடுவதற்காக வவுனியா செல்லவுள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபர்களின் குடும்பத் தினரும் உறவினர்களும் தரவுகளை வெளி யிடுமாறு கோரிக்கை விடுத்து வருவதாகவும் இந்தக் கோரிக்கை தொடர்பில் அண்மையில் அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பிற்கும் இடையிலான சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டதாகவும் தெரிவிக்கப் படுகின்றது.

கைதிகள் விபரங்களை பார்வையிடுவ தற்கு அனுமதி அளிப்பதாக அரசாங்கம் முன் னர் உறுதியளித்த போதிலும் பின்னர் இதனை நடைமுறைப்படுத்தவில்லை என தமிழ் தேசியக் கூட்டமைப்பு குற்றம் சுமத்தியிருந்தது.

4 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கைதிகள் பற்றிய தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன. கைதிகள் பற்றிய விபரங்களை முதலில் தாம் பார்வையிட உள்ளதாகவும் பின்னர் இந்த விபரங்களை அவர்களது உறவினர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் எம்.சுமந்திர னும் அரசாங்கத்தின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வால் குணவர்த்தனவும் கைதிகளின் விபரங்களைபார்வையிடவுள்ளனர்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் எதிர்வரும் 29 ஆம் திகதி மேலுமொரு சுற்றுப் பேச்சு வார்த்தை நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத் தக்கது. (ஸ்ரீ-2)

# போர்க்குற்றச்சாட்டுக்களின் பின்னணியில் அமெரிக்காவும் பிரித்தானியாவும்

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவினால் இலங்கை மீது சுமத்தப்பட்ட போர்க்குற்றச் சாட்டுக்களின் பின்னணியில் பிரித்தானியா வும் அமெரிக்காவும் செயற்பட்டுள்ளதாக கொழும்பு ஊடகங்கள் குற்றம் சுமத்தியுள்ளன.

பிரித்தானியாமற்றும்அமெரிக்கா ஆகிய நாடு களின் விருப்பு வெறுப்புக்களை பூர்த்தி செய்யும் வகையில் ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு செயற்பட்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பிரித்தானியா மற்றும் அமெரிக்காவின் இந்த முயற்சிக்கு இலங்கைக்கான நோர்வே யின் முன்னாள் சமாதான ஏற்பாட்டாளர் எரிக் சொல்ஹெய்மும் ஆதரவளித்துள்ளார்.

இதேவேளை குளோபல் தமிழ் அமைப்பு அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாடுகளின் முக்கிய அரசியல் தலைவர்களை சந்தித்து யுத்தக் குற்றச் செயல்கள் விசாரணை களுக்கு ஆதரவளிக்குமாறு கோரிக்கை விடுத் துள்ளதாக குறித்த கொழும்பு ஊடகம் சுட்டிக் காட்டியுள்ளது. (ஸ்ரீ-2)

# மே மாதம் நடுப்பகுதி வரை மழை தொடரும்

(கொழும்பு)

எதிர்வரும் மே மாதம் நடுப்பகுதி வரை தற்போதைய பருவக்காற்று மழை தொடரு மென வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று முன்தினம் அறிவித்துள்ளது.

நாட்டின்அனைத்துப்பாகங்களிலும்மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும். நாட்டின் வடக்கு-கிழக்குப் பகுதிக ளில் கடும் மழை பெய்யுமென்று எதிர்பார்க்கப்படுவ தாக மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# தொடர் பிரார்த்தனை


(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா ஸ்தூல உடலை விட்டுச் சென்றமையையொட்டி நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணி முதல் இன்று செவ்வாய்க் கிழமை மாலை வரை யாழ்ப்பாணம் சாயி நிலையத்தில் மூன்று நாட்கள் தொடர்ச்சி யாக பிரார்த்தனை நடைபெற்றுக் கொண்டி ருக்கின்றது.

இதேபோல் ஏனைய சாயி நிலையங்க ளிலும் விசேட பஜனைகள், பிரார்த்தனை கள் நடைபெற்று வருகின்றன. (ஸ்ரீ)







திருமுருகண்டி இந்து தமிழ் கலவன் பாடசாலைக்கு இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ கொண்ட குழுவினர் அண்மையில் விஜயமொன்றை மேற்கொண்டனர். இந்த நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்து வரப்படுவதையும், நாமல் ராஜபக்ஷ இப்பாடசாலையின் இருமாடிக்கட்டடத்திற்குரிய அடிக்கல்லை நாட்டி வைப்பதையும், கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்-என். குமார்)

## வடபிராந்திய கடற்படையின் புதிய கட்டளைத் தளபதி நியமனம்

(கொழும்பு)

வடபிராந்தியத்துக்கான கடற்படையின் புதிய கட்டளைத் தளபதியாக ரியர் அட்மிரல் ரவீந்திர சந்திர சிறி விஜேகுணரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்பு குறித்த பதவியை வகித்த ரியர் அட்மிரல் துசித வீரசேகர நான்கு கடற்படை வீரர்கள் காணாமற்போன சம்பவம் காரணமாக பதவி பறிக்கப்பட்டு தொண்டர் படையணியின் கட்டளையிடும் அதிகாரியாக மாற்றம் செய்யப்பட்டிருந் தார்.

கடற்படையில் இதற்கு முன் அவ்வாறானதோர் பதவி நடைமுறையில் இருக்கவில்லை என்பதுடன் கடற்படை கப்டன் தர அதிகாரியொருவர் வகிக்க வேண்டிய பதவிக்கு ரியர் அட்மிரல் ஒருவர் நியமிக்கப்பட்ட முதலாவது சந்தர்ப்பமாகவும் அது அமைந்தது.

ரியர் அட்மிரல் ரவீந்திர சந்திர சிறி முன்பு மேற்குப் பிராந்தியக் கடற்படைக்கட்டளைத் தளபதியாக கடமையாற்றியிருந்தார்.

அவரது இடமாற்றத்தையடுத்து மேற்குப் பிராந்தியக் கட்டளைத் தளபதியாக ரியர் அட்மிரல் தமயந்த ஜயனெ தர்ம சிரிவர்தன நியமிக்கப்பட்டுள்ளார். (ஸ்ரீ-2)

## நிபுணர்குழு அறிக்கை தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் ஜனாதிபதி ஆலோசனை

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக எதிர்வரும் வாரமளவில் அனைத்துக் கட்சிகளுடனும் ஜனாதிபதி ஆலோசனையொன்றை நடாத்தவுள்ளார்.

அதன்போது ஐக்கிய நாடுகள் நிபுணர் குழுவின் அறிக்கை மற்றும் அதன் பின்னணி குறித்தும் அறிக்கை தயாரிப்பதற்கான சூழல் ஏற்படுத்தப்பட்டமைக்கான காரணம் குறித்தும் அனைத்துக் கட்சிகளினதும் பிரதிநிதிகளுடனும் ஜனாதிபதி கருத்துக்களை பரிமாறிக் கொள்ளவுள்ளார்.

இதற்கிடையே ஐக்கிய நாடுகள் நிபுணர் குழு என்பது அதன் செயலாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட ஒன்றே தவிர அதற்கு அப்பால் செயற்பட அதிகாரமற்றது என்று அமைச்சர் டளஸ் அழகப்பெரும வலியுறுத்தியுள்ளார்.

அந்த வகையில் இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பில் அந்தக்குழு விசாரணைகளை மேற்கொண்டுள்ளதும் அதனை அறிக்கையாக்கி வெளியிட முனைவதும் சட்டவிரோதமானதும் அதிகார வரம்பை மீறியதுமான செயற்பாடுகள் என்றும் அவர் குற்றம் சாட்டியுள்ளார். (ஸ்ரீ-2)

## அமெரிக்காவுக்கான பதில் இலங்கை தூதுவராக சவேந்திர சில்வா நியமனம்

(கொழும்பு)

மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா அமெரிக்காவுக்கான பதில் இலங்கைத் தூதுவராக நியமிக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவில் இலங்கைத் தூதுவராக கடமையாற்றிய ஜாலிய விக்கிம சூரிய இலங்கை திரும்பியுள்ள நிலையில் பதில் தூதுவராக ஐக்கிய நாடுகள் சபையின் துணை நிரந்தரப் பிரதிநிதியாக கடமையாற்றிய மேஜர் ஜெனரல் சவேந்திர சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆயினும் அவரது நியமனமானது இரண்டு வாரங்களுக்கு மட்டுமானது என அத்தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. ஜாலிய விக்கிரமசூரிய அதன்பின் மீண்டும் பதவிக்கு திரும்பிவிடுவார் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐ.நா.நிபுணர்குழு அறிக்கை தொடர்பாகவும் அதனை இராஜதந்திர வழியில் எதிர்கொள்ளும் வழிமுறைகள் குறித்தும் ஆராயவே ஜாலிய இலங்கை திரும்பியுள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஸ்ரீ-2)

## 2011.04 26 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

★ 1802- நெப்போலியன் பொனபார்ட் பிரெஞ்சுப் புரட்சியை அடுத்து நாட்டை விட்டு வெளியேறிய அல்லது வெளியேற்றப்பட்டவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கினான்.

★ 1805- ஐக்கிய அமெரிக்காவின் கடற்படையினர் லிபியாவின் டேர்ன் நகரைக் கைப்பற்றினர்.

★ 1865- அமெரிக்க உள்நாட்டுப் போர்: ஜோசப் ஜோன்ஸ்டன் தலைமையில் கூட்டமைப்புப் படையினர் வட கரோலினாவின் டேர்ஹம் நகரில் கூட்டணியினரிடம் சரணடைந்தனர்.

★ 1865- அமெரிக்க ஜனாதிபதி ஆபிரகாம் லிங்கனை கொலை செய்த ஜோன் பூத் என்பவனை கூட்டணிப் படைகள் சுட்டுக் கொன்றனர்.

★ 1937- ஸ்பானிய உள்நாட்டுப் போர்: ஸ்பெயினின் கேர்னிக்கா நகரம் ஜேர்மனியினரின் குண்டுத் தாக்குதலுக்குள்ளானது.

★ 1945- இரண்டாம் உலகப் போர்: நாசி ஜேர்மனியின் கடைசி வெற்றிகரமான தாக்குதல் போட்சன் என்ற இடத்தில் இடம்பெற்றது.

★ 1954- பிரெஞ்சு இந்தோனேஷியா மற்றும் வியட்நாமில் அமைதியைக் கொண்டு வரும் முகாமாக ஜெனிவாவில் அமைதிப் பேச்சுக்கள் ஆரம்பமாயின.

★ 1962- நாசாவின் ரேஞ்சர் 4 ஆளில்லா விண்கலம் சந்திரனில் மோதியது.

★ 1964- தங்கனீக்கா, சன்சிபார் இரண்டு நாடுகளும் இணைக்கப்பட்டு தான்சானியா என ஒரு நாடாகியது.

★ 1982- தென் கொரியாவில் முன்னாள் பொலிஸ் அதிகாரி ஒருவர் துப்பாக்கிச் சூடு நிகழ்த்தியதில் 57 பொது மக்கள் கொல்லப்பட்டனர்.

★ 1986- உக்ரைனில் செர்னோபில் அணுமின் உலையில் பெரும் விபத்து ஏற்பட்டது. உலகின் மிகப் பெரும் அணுவுலை விபத்து இதுவாகும்.

★ 1994- ஜப்பானில் சீன விமானம் ஒன்று விபத்துக்குள்ளாகியதில் 264 பேர் கொல்லப்பட்டனர்.

★ 1994- உச்சிகுவார்க் (Top Quark) உப அணுத் துணிக்கை ஒன்றைத் தாம் அவதானித்ததாக இயற்பியலாளர்கள் அறிவித்தனர்.

★ 2005- 29ஆண்டுகால இராணுவ ஆக்கிரமிப்புக்குப் பின்னர் சிரியா தனது 14,000 இராணுவத்தினரை லெபனானில் இருந்து முற்றாக விலக்கிக் கொண்டது.

### பிறப்புக்கள்

★ 1564- வில்லியம் சேக்ஸ்பியர், ஆங்கில எழுத்தாளர் (இ.1616)

★ 1762- சியாமா சாஸ்திரிகள், கர்நாடக இசை மும்மூர்த்திகளில் ஒருவர் (இ.1827)

### இறப்புக்கள்

★ 1920- சிறீனிவாச இராமானுசன், கணித மேதை (பி.1887)

★ 1897- பெ.சுந்தரம்பிள்ளை, மனோன்மணியம் என்ற நாடக நூலைப் படைத்த தமிழறிஞர் (பி.1855)

★ 1977- எஸ்.ஜே.வி.செல்வநாயகம் இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி.1898)

### சிறப்புநாள்

★ தான்சானியா தேசிய நாள்

★ அறிவுசார் சொத்துரிமை பாதுகாப்பு நாள்

# ஆனந்த அலை

### யோகா ஒரு கலாசாரமாகவே மாறிவிடவேண்டும்

சிவன் தான் ஆதி குரு. அவர்கள் தான் யோகாவை ஆரம்பித்து வைத்தார்கள். சப்தரிஷிகள் ஏழு பேரும் இமாலய பர்வதத்திற்கு வந்து சிவனிடம் யோகா கற்றுக்




கொடுக்கும் படி கேட்டார்கள். சிவனும் அவர்களுக்கு அதை 12 வருடங்களில் கற்றுக்கொடுத்தார். அந்த ஏழுபேரும் தாங்கள் உணர்ந்ததை மற்றவர்களும் உணரவேண்டும் என்ற நோக்கத்துடன் ஏழு திசைகளில் போனார்கள். அதில் தென்திசைக்கு வந்தவர்தான் அகத்திய முனிவர். தென்பகுதியில் அனைத்துப் பிரதேசங்களுக்கும் சென்று யோகா கற்பித்தார்.

இப்போதுகூட தென் மாநிலங்களில் பல பகுதிகளில் அது அகத்தியர் தவம் செய்த இடம், இது அகத்தியர் இருந்த குகை, இது அகத்தியர் இருந்த கோயில் என்று மக்களால் சொல்லப்படுகின்றது. தென்பகுதி முழுக்க அவர் யோகா சொல்லிக் கொடுத்ததாக தெரிகிறது. அவர் 4000 வருடங்களுக்கும் மேல் வாழ்ந்ததாக சொல்லப்படுகின்றது. நமக்குத் தெரியவில்லை. ஆனால் நிச்சயமாக நீண்டகாலமாக வாழ்ந்திருப்பார். ஏனெனில் இந்த அனைத்துப் பகுதிகளுக்கும் நடந்தே சென்று அவர் கற்றுக் கொடுத்திருக்கிறார் என்றால் அதற்கு நிச்சயமாக நிறையக் காலம் தேவைப் பட்டிருக்கும். அவர் செய்த நன்மைகளைத்தான் நீங்கள் இப்போது அனுபவிக்கிறீர்கள்.

சிவனுக்குப் பூதகணங்கள் என்று சொல்லப்படும் சில நண்பர்கள் இருந்தார்கள். எங்களுக்கு ஏன் யோகா சொல்லிக் கொடுக்கவில்லை என்று அவர்கள் சிவனிடம் கேட்க, உங்களுக்கு பயிற்சிகள் வேண்டாம், உட்கார்ந்த இடத்திலேயே ஆனந்தமாக இருக்கலாம் என்று வேறுவிதமாகச் சொல்லிக் கொடுத்தார்கள். ஒரே குருநாதன், ஒருவரை உட்காரச் சொன்னார். இன்னொருவருக்குப் போதனை கொடுத்தார், இன்னொருவருக்கு உட்காரவும் வேண்டாம், போதனையும் வேண்டாம், வெறுமனே ஆனந்தமாக இருக்கமுடியும் என்று சொல்லிக் கொடுத்தார் ஒரே குருநாதர். ஆனால் மூன்றுபேருக்கு மூன்று விதமாக இந்தத் தனிமையைப் பரிமாறினார். அவர் கண்களில் வழிந்த ஆனந்தக் கண்ணீர்தான், அந்த ஆனந்தமான தன்மைதான் பல விதங்களில் பரிமாறப்பட்டது. அது இந்த மண்ணில் மட்டும் நடக்காமல் உலகின் பல பகுதிகளுக்கும் சென்றது. ஆனால் வெவ்வேறு மாதிரியாக உருமாறிப் போய்விட்டது.

இப்போதுகூட உங்களுக்குத் தெரியாமலேயே உங்கள் வீட்டில் சிறிது யோகா நடந்து கொண்டுதான் இருக்கிறது. எப்படி உட்காருவது, எப்படி சாப்பிடுவது என்று சிறுவயதிலே உங்களுக்குச் சொல்லிக் கொடுத்தார்கள் இல்லையா? அது எல்லாமே யோகாதான். ஏதோ ஆச்சாரம் என்றெல்லாம் சொல்லிக் கொடுத்தார்கள் இல்லையா, அதெல்லாம் யோக தான். நீங்கள் கூட உங்களுக்கும் தெரியாமல் சில சில யோகாக்களை உங்கள் குழந்தைக்



## ஆன்மீகம் 36

குச் சொல்லிக் கொடுத்து வருகிறீர்கள்.

இந்த ஆனந்தஅலை வகுப்புக்களின் நோக்கமும் அதுதான்.

அடுத்த தலைமுறைக்கு நாம் இங்குவந்து யோகா சொல்லிக் கொடுக்கும்படி இருக்கக்கூடாது. எப்படி ஒருதாய் தன் குழந்தைக்கு பல் விளக்கச் சொல்லிக் கொடுக்கிறாளோ அப்படியே யோகாவும் கற்றுக் கொடுக்க வேண்டும். அது ஒரு கலாசாரமாகவே மாறிவிட வேண்டும்.

**சத்குரு ஜக்கி வாசுதேவ்**

# பெண்ணிலைவாதம் தொடர்பான கோட்பாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும் 03

உயிரியல் கூறு வேறுபாடுகள் பெண் மீதான ஆணின் மேலாதிக்கத் தன்மையைத் தந்தது. அதனால் ஆணாதிக்கத்தை எதிர்ப்பதினாலேயே தீவிரம் காட்டினர். பெண்களின் இரண்டாம் பட்சநிலை, ஆணின் மேலாண்மை, பெண்ணின் மீதான பலாத்காரம், பெண்கள் ஆண்களைச் சார்ந்திருக்கும் நிலை, தந்தைவழிச் சமூக அமைப்பு முறை , திருமணத்தின் மூலம் நிரந்தரமாக்கப்பட்டு காப்பாற்றப்பட்டது. ஆதிக்கத்திற்கான பற்பல தளங்களும் ஆணின் கையில் இருந்ததால் பாலியல் அரசியல் என்பது தந்தைவழிச் சமுதாயத்தின் அரசியல். குடும்ப சட்டரீதிக் கோட்பாடு , திருமண அமைப்பிற்கு எதிராயின. எனவே தீவிரவாதப் பெண்ணிலைவாதிகள் குடும்ப அமைப்பு, சமூக அமைப்பு, ஆணின் மேலாண்மை அனைத்தையும் புறக்கணித்தனர். உடனே அவர்களுக்குப் பாடம் புகட்டவேண்டும் என்ற தீவிரப் போக்குடையவர்கள் தந்தை வழிச் சமுதாயம் அடியோடு தகர்க்கப்பட்டால் தான் பெண்ணின் பாலியல் நிலை உழைப்பு மற்றும் கருத்தரிப்பு ஆகியவை மீது ஆணாதிக்கம் செலுத்தமுடியாது என்றும் பெண்ணின் ஆளுமைத் தன்மையும் பாலியல் நிலையில் முழுமையான வளர்ச்சியைப் பெற முடியுமென்று நம்பினார். பெண்ணடிமைத்தனமானது பொருளாதார வேறுபாட்டில் வேர் கொண்டது என்பதை விட ஆண், பெண் பாலியல் உறவில் உண்டானது என்றே அவர்கள் நினைத்தனர். பாலியல் உரிமை உடம்பின் மீதான கட்டுப்பாடு விடுதலைக்காதல், தன்னின அனுபவம் குழந்தைகளின் கூட்டுப் பாதுகாப்பு ஆகியன இவர்களின் செயற்பாடுகள் ஆயின.

ஆண்மேலாண்மையை முழுவதுமாகப் போக்க பாலியல் ரீதியிலான புரட்சிதேவை என்றனர். விழிப்புணர்வை ஊட்டுவதன் மூலம் மரபுகள், பாலியல் கோட்பாடுகள் ஆகியவற்றைத் தக்கவைக்க வேண்டுமென்று தீவிர பெண்ணிலைவாதிகள் கருதினர்.

> “கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட் ஆய்வுக்கட்டுரை”

ஆண் மேலாண்மை என்பது மிகப் பழைய மிக அடிப்படையான ஆதிக்கத்தின் வடிவம். மற்ற அடக்குமுறைகள் சுரண்டலுக்கான வடிவங்கள் யாவும் இன முதலாளித்துவ எதேச்சிகார ஆண் மேலாண்மையின் விரிவுகளே என்று கருதினர். ஆண்கள், பெண்களின் மேல் மேலாதிக்கம் செலுத்த சில ஆண்கள் இவர்கள் மீது ஆதிக்கம் செலுத்தினர். இதுவே சமூக நிலையாய் இருந்தது. பெண்ணின மறு உற்பத்தி ஆணின் மேலாண்மையை வெறுத்த இருவர் ஆணின் வெறுப்பு பெண் மீதான பலாத்காரம், பெண்களின் நிர்வாணப் படங்களை கண்டு மகிழ் தல் ஆகியன பாலிய ரீதியான வன்முறைகளின் வெளிப்பாடுகளாகும் என்றனர். பெண்களின் ஒருங்கிணைப்பும் அவர்களிடையே வரும் தற்சார்பு நிலையுமே இவற்றைத் தூக்கியெறிய முடியும் என்ற எண்ணத்தை உடையதென்பதால் எதற்கும் ஆணைச்சார்ந்திராத தன்மை உருவாக வேண்டுமென்று செயற்பட்டனர். இவ்வாறு தீவிரவாதப் பெண்ணிலைவாதிகள் தீவிர நடவடிக்கையில் இறங்கினர். அத்துடன் தந்தை வழிச் சமுதாயம், ஆணாதிக்கம், உளவியல் ரீதியான காரணங்கள் ஆகியனவே பெண்ணை அடிமைப்படுத்துகின்றன. இது ஆணின் ஆதிக்க மனதைக் காட்டுகிறது. இதைமாற்றி அமைக்க வேண்டும். அதற்கு ஆண், பெண் இருபாலாருக்கும் சமத்துவம் பற்றிப் போதிக்கப் புதியதொரு கலாசார விளைவை அவர்களுக்குள் ஏற்படுத்த வேண்டும். பொருளாதார ஒடுக்குமுறை அகல வேண்டும் என இக்கொள்கையாளர்கள் வாதித்தனர். அரசியல் களத்துள் அவர்கள் பிரச்சினைகளைக் கொண்டுவரவும் பெண்கள் அரசியல் பிரக்ஞையைச் செழுமைப்படுத்தி அவளை புரட்சிகரச் செயற்பாட்டின்பால் உந்தித் தள்ளுவும் தீவிர பெண்ணிலைவாதம் உதவுகிறது. தந்தையாதிக்கம் இறுதியில் தோற்கும் ஆணாதிக்கத்தைப் பெண்கள் தகர்த்தெறிந்தே தீருவர் என்ற மார்க்சியக் கோட்பாட்டோடு மிகவும் இணைகின்றது. இந்தப் பெண்ணிலைவாதம் உண்மையான பெண் விடுதலைக்குப் பிள்ளை பெறும் தொல்லை அடியோடு ஒழிந்து போகவேண்டும். குழந்தை என்ற ஒன்று ஆணுக்கும் பெண்ணுக்கும் என்று பிறந்தால் தானே பெண் குடும்பத்திற்குள்ளேயே குமைந்து போக வேண்டி வருகிறது. தந்தையாதிக்கம் இடர்ப்படுகிறது. (Test Tube baby) தாய் வழிச் சமுதாயத்திற்கு வழிகாட்டக் கூடியது. இதன் மூலம் எந்த ஆணுக்கும் குழந்தைக்கு உரிமை கொண்டாட முடியாது என்னும் நோக்குடையவர்களே தீவிர வாதப் பெண்ணிலைவாதிகள்.

**எம்.பகீரதி**

மதிப்பு இல்லாமையால் வந்த ஏமாற்றம், விரக்திமனப்பான்மை ஆகியன ஆண்களையே புறக்கணிக்கும் எண்ணம் கொள்ளச் செய்கிறது. தானே தன்காலில் நிற்கவேண்டும். குடும்ப அமைப்பு உடையவேண்டும் என்பதற்காகப் போராடுகிறது. போராட்டம் புரட்சிகரமானது. பெண்கள் மட்டுமே போராட்டத்தை நடத்த வேண்டுமென்ற குறுகிய நோக்குடையது.

(தொடரும்)

# ஜோர்தானில் இலங்கை பணியாளர்களின் பணிப் பகிஷ்கரிப்பு தொடர்கிறது

ஜோர்தானின் அம்மான் நகரில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் இலங்கை பணியாளர்கள் ஆரம்பித்துள்ள பணிப் பகிஷ்கரிப்பு தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை பணியாளர்கள் முன் வைத்துள்ள கோரிக்கைகளுக்கு சம்பந்தப்பட்டவர்கள் இதுவரை தகுந்த தீர்வைப் பெற்றுக் கொடுக்க தவறியுள்ளதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பள உயர்வு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை அடிப்படையாக கொண்டு ஜோர்தானில் அம்மான் நகரிலுள்ள இலங்கை பணியாளர்கள் 12 நாட்களுக்கு முன்னதாக இந்தப் பணி பகிஷ்கரிப்பை ஆரம்பித்தனர்.

ஐந்து தொழிற்சாலைகளைச் சேர்ந்த மூவாயிரத்துக்கும் மேற்பட்ட பணியாளர்கள் இந்த பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. ஆடைத் தொழிற்சாலைகளில் பணியாற்றும் வேறு சில நாடுகளைச் சேர்ந்த பணியாளர்களும் இந்தப் பணிப்பகிஷ்கரிப்பில் இணைந்து கொண்டுள்ளதாக ஜோர்தானின் அம்மான் நகரிலுள்ள இலங்கைப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

தமக்கு கிடைக்கும் சம்பளத்தை கொண்டு அந்த நாட்டில் வாழ்வதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் உணவு உள்ளிட்ட அத்தியாவசிய வசதிகள் கூட உரிய முறையில் வழங்கப்படுவதில்லை எனவும் அவர்கள் சுட்டிகாட்டியுள்ளனர்.

விடுதிகளில் நீர் விநியோகம் சீரின்மையால் பெரும் அசௌகரியத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகவும் இலங்கைப் பணியாளர்கள் கூறினர். தாம் எதிர்கொண்டுள்ள பிரச்சனைகளை ஏற்கனவே பல தடவைகள் அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வந்தும் இதுவரை எவ்வித தீர்வும் கிடைக்கவில்லை என அவர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

ஜோர்தானில் அம்மான் நகரில் உள்ள இலங்கைப் பணியாளர்களின் இந்த பிரச்சினை தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் கிங்ஸ்லி ரணவக்க தெரிவிக்கையில், அவர்கள் சேவை வழங்குநர்களுடன் ஏற்படுத்திக் கொண்ட உடன்படிக்கைக்கு அமையவே தற்போதைய சம்பளம் வழங்கப்படுகின்றமை தெரியவந்துள்ளதாக கூறினார்.

இதுதொடர்பிலான அறிக்கையொன்றை ஜோர்தானில் உள்ள இலங்கைத்தூதரகம் அனுப்பி வைத்துள்ளதாகவும் ஜோர்தானுக்கான இலங்கை தூதரகத்தின் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியக அதிகாரிகளிடம் இதுதொடர்பிலான மேலதிக அறிக்கையொன்றை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த அறிக்கை கிடைத்தவுடன் மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியுள்ளதாகவும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் தலைவர் மேலும் கூறினார். (ஸ்ரீ-2)

# கணித வினாவிடைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கல்வி வலயத்தின் வலய மட்ட கணித வினாவிடைப் போட்டி ஏற்கனவே அறிவிக்கப்பட்டவாறு எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இப்போட்டி தரம் 6,7 மாணவர்களுக்கு காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரையும் தரம் 8,9 மாணவர்களுக்கு காலை 10.15 மணி தொடக்கம் 11.15 மணிவரையும் தரம் 10,11 மாணவர்களுக்கு காலை 11.30 மணி தொடக்கம் 12.30 மணிவரையும் நடைபெறவுள்ளது.

எனவே வழங்கப்பட்ட சுட்டெண்களுடன் மாணவர்களை கணித ஆசிரியர்களுடன் அனுப்பி வைக்குமாறு அதிபர்களை யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம் கேட்டுள்ளார். (ஸ்ரீ-3)

# சுகாதார அமைச்சர் ரஷ்யாவுக்கு விஜயம்

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன நேற்று முற்பகல் ரஷ்யாவிற்கு விஜயமொன்றை மேற்கொண்டுள்ளார்.

ஆரோக்கியமான வாழ்க்கை முறைமை மற்றும் தொற்றாநோய்கள் தொடர்பிலான முதலாவது சர்வதேச மாநாட்டில் கலந்து கொள்வதற்காக சுகாதார அமைச்சர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவில் எதிர்வரும் 28,29ஆம் திகதிகளில் இந்த மாநாடு நடைபெறவுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஆரோக்கியமான வாழ்க்கை முறைமை மற்றும் தொற்றா நோய்கள் தொடர்பிலான முதலாவது சர்வதேச மாநாட்டில் 140 நாடுகளைச் சேர்ந்த சுகாதார அமைச்சர்கள் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாநாட்டில் முதல் நாள் அமர்வுகளின் போது சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உரை நிகழ்த்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# எவ்வித அதிகாரமுமில்லாத ஐ.நா.வின் யாப்புக்கு எதிரான குழுவே நிபுணர்குழு

## அமைச்சர் டளஸ் தெரிவிப்பு



(கொழும்பு)

ஐ.நா. செயலாளருக்கு ஆலோசனை வழங்க நியமிக்கப்பட்ட குழுவிற்கு ஐ.நா. பாதுகாப்புச் சபையில் எவ்வித அதிகாரங்களுமில்லை எனவும் அந்த குழு எவ்வித அதிகாரமும் இல்லாத ஐ.நா.வின் யாப்புக்கு எதிரான குழு எனவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொருளாளரும் அமைச்சருமான டளஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

ஐ.நா. செயலாளருக்கு ஆலோசனை வழங்குவதை தவிர அதற்கு அப்பால் சென்று செயற்படும் அதிகாரம் நிபுணர் குழுவிற்கு இல்லை. அத்துடன் இலங்கை தொடர்பாக விசாரணைகளை நடத்தும் தார்மீக உரிமை நிபுணர் குழுவிற்கு இல்லை எனவும் அழகப்பெரும கூறியுள்ளார்.

நிபுணர் குழுவிற்கு அறிக்கையானது விடுதலைப்புலிகளின் 4 ஆயிரம் ஆதரவாளர் கள் வழங்கிய தகவல்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டுள்ளதாகவும் அதில் உள்ளக்கப்பட்டுள்ள விடயங்கள் இதனை உறுதிப்படுத்துவதாகவும் அதில் கூறப்பட்டுள்ள விடயங்களை ஒப்புவிக்குமாறு தாம் பான் கீ மூனுக்கு சவால் விடுப்பதாகவும் அழகப்பெரும கூறியுள்ளார். (ஸ்ரீ-2)

# மழைக்காலநிலை தொடர்வதால் டெங்கு நோய் பரவும் சாத்தியம்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இந்நாட்களில் அடிக்கடி மழை பெய்து வருவதன் காரணமாக டெங்கு நோய் பரவுவது அதிகரிப்பதற்கான சாத்தியங்கள் உள்ளதாகவும் எனவே மக்கள் இந்த விடயத்தில் விழிப்பாக இருக்க வேண்டும் என்றும் சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இடைக்கால பருவப் பெயர்ச்சியின் காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் இன்னும் சில தினங்களுக்கு அடிக்கடி மழை பெய்யும் நிலைமை காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில் மழைக் காலங்களில் டெங்கு நோயை ஏற்படுத்தும் நுளம்புகளின் பெருக்கம் அதிகரிக்கும் என்றும் எனவே மக்கள் தமது சுற்றுப்புற சூழலை சுத்தமாக வைத்துக் கொள்ள வேண்டும் என்றும் சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.


இவ்வாண்டில் இதுவரை 3 ஆயிரதது 84 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)

# சிரேஷ்ட அமைச்சருக்கு அச்சுறுத்தல் விடுத்தவர் கைது

கிராமிய நடவடிக்கைகள் தொடர்பான சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்னவிற்கு மரண அச்சுறுத்தல் விடுத்த மாவனெல்ல பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் விளக்கமறியலில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மாவனெல்ல பொலிஸாரால் கைது செய்யப்பட்ட குறித்த பிரதேசசபை உறுப்பினர் கடந்த சனிக்கிழமை மாவனெல்ல மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் எதிர்வரும் 4ஆம் திகதி வரை தடுத்துவைக்குமாறு உத்தரவிட்டப்பட்டது.

மாவனெல்லயில் இடம்பெற்ற பொதுக் கூட்டத்தின் போது பிரதேசசபை உறுப்பினரால் தமக்கு மரண அச்சுறுத்தல் விடுவிக்கப்பட்டதாக சிரேஷ்ட அமைச்சர் அதாவுத செனவிரட்ன பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (ஸ்ரீ-2)





யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவர்களால் குறைந்தளவான நிலப்பரப்பில் செய்கை பண்ணப்பட்டு அதிக விளைச்சலுடன் காட்சி தரும் பாடசாலைத் தோட்டத்தைப் படங்களில் காணலாம்.





வன்னி மாவட்டத்தில் முல்லைதீவு, துணுக்காய் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட முன்பள்ளி ஆசிரியர்களுக்கான உதவித்தொகை வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வட மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் உரையாற்றுவதையும் அருகில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் றிசாத் பதியுதீன் ஆசிரியர் ஒருவருக்கு உதவித்தொகை வழங்குவதையும் கலந்து கொண்ட முன்பள்ளி ஆசிரியர்களையும் படங்களில் காணலாம். *(படங்கள்:-என்.குமார்)*

# சாட்சியம் தொடர்பில் மேலதிக தெளிவுபடுத்தல் தேவைப்படின் சாட்சியமளித்தோர் அழைக்கப்படுவர்

## நல்லிணக்க ஆணைக்குழு அதிகாரி தெரிவிப்பு

(கொழும்பு)

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு பெற்றுக் கொண்டுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்யும் போது தேவைப்படின் ஏற்கனவே சாட்சியமளித்தவர்கள் வரவழைக்கப்பட்டு தெளிவுபடுத்தல்கள் பெறப்படும் என்று ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் குறிப்பிட்டார்.

நல்லிணக்க ஆணைக்குழு பெற்றுக் கொண்டுள்ள சாட்சியங்களை ஆய்வு செய்யும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்ற அதேவேளை ஆணைக்குழுவின் இறுதி பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையின் முதற்கட்ட வரைபும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் சாட்சியங்களை ஆய்வு செய்யும்போது முக்கியமான யோசனைகளில் ஏதாவது மேலதிக தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் குறிப்பிட்ட சாட்சியங்களை வழங்கியவர்கள் மீண்டும் அழைக்கப்பட்டு தெளிவுபடுத்தல்களை பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்யப்படும் என்று ஆணைக்குழுவின் அதிகாரி குறிப்பிட்டார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழு கொழும்பு உள்ளிட்ட நாடளாவிய ரீதியில் தனது விசாரணை அமர்வுகளை நடத்தியிருந்தது. வடக்கு-கிழக்கிலும் விசாரணை அமர்வுகள் நடைபெற்றிருந்தன.

இந்நிலையில் எதிர்வரும் மே மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் நல்லிணக்க ஆணைக்குழுவின் இறுதி பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டு வருகின்றது.

ஏற்கனவே ஆணைக்குழுவின் இடைக்கால பரிந்துரைகள் அடங்கிய அறிக்கை அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அந்த பரிந்துரைகள் தொடர்பில் ஆராய அரசாங்கம் ஆலோசனை குழு ஒன்றையும் நியமித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# லங்கா சித்த மருத்துவ கல்லூரியில் புதிய கற்கைநெறி

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் அமைந்திருக்கும் லங்கா சித்த மருத்துவக் கல்லூரியின் 2011 ஆம் ஆண்டிற்கான புதிய கற்கை நெறி எதிர்வரும் மே மாதம் 2 ஆம் திகதி ஆரம்பிக்கப் படவுள்ளது.

கடந்த 2,3 ஆம் திகதிகளில் நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் தெரிவு செய்யப்பட்ட 60 மாணவர்களுக்கான அனுமதிக் கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் இக்கல்லூரியில்கற்கைநெறியை மேற்கொள்ள எவ்வித கட்டணங்களும் செலுத்த தேவையில்லை எனவும் வடமாகாண சுதேச மருத்துவத் திணைக்களப் பணிப்பாளர் டாக்டர் திருமதி. சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# ரணிலின் நெருக்கடி தொடருமாயின் இராஜினாமா செய்வதற்கு தயார்

## சஜித் எம்.பி.அறிவிப்பு

(கொழும்பு)




தமக்கு ஆதரவு வழங்கும் கட்சி எம்.பிக்களுக்கு ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் நெருக்கடி கொடுப்பாராயின் தனது பதவியை இராஜினாமா செய்யவும் தான் தயாரென ஐ.தே.க.வின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்பாளர் நியமனத்தை செய்வதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தடையாக இருக்கிறாரென சஜித் பிரேமதாச எம்.பியைச் சார்ந்த அணியினர் குற்றஞ்சாட்டுகின்றனர். இந்த நிலையில் மௌனம் சாதித்துவரும் ரணில் விக்கிரமசிங்க சத்தமில்லாமல் குழிபறிக்கிறாரென சஜித் பிரேமதாச குற்றம் சாட்டியுள்ளார்.

கட்சியின் தேசிய அமைப்பாளர் நியமனம் இன்னும் இடம்பெறாததால் கட்சிக்குள் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தனக்கு ஆதரவு வழங்கும் கட்சி எம்.பி.க்களுக்கு தொடர்ந்தும் நெருக்கடி கொடுப்பாராயின் தனது பதவியை இராஜினாமா செய்யவும் தான் தயாரென கட்சியின் பிரதித் தலைவரான சஜித் பிரேமதாசா தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அமைச்சர் ரவூப் ஹக்கீம் சிங்கப்பூருக்கு விஜயம்

## நீதித்துறை சீர்திருத்தங்கள் குறித்து ஆராய்வு



(கொழும்பு)

நீதித்துறை சீர்திருத்தங்கள் குறித்து விசேட பேச்சுவார்த்தை நடத்துவதற்காக நீதியமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசியத் தலைவருமான ரவூப் ஹக்கீம் சிங்கப்பூர் சென்றுள்ளார். அமைச்சர் ஹக்கீம் அவரது உத்தியோகபூர்வ விஜயத்தின் போது நீதித் துறை சீர்திருத்தங்கள் தொடர்பாக சிங்கப்பூர் பிரதம நீதியரசர், நீதியமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடவுள்ளார்.

நீதியமைச்சின் மேலதிகச் செயலாளர் (சட்டம்) கமலினி டீ சில்வாவும் இந்தப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார். (ஸ்ரீ-2)

# ஹஜ் யாத்திரிகர் எண்ணிக்கையை எட்டு ஆயிரமாக அதிகரிக்க முயற்சி

## அமைச்சர் பௌஸி சவுதியுடன் பேச்சுவார்த்தை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து இம்முறை ஹஜ் யாத்திரை செல்வதற்கான வாய்ப்பை 8 ஆயிரம் பேருக்கு பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை அமைச்சர் பௌசி மேற்கொண்டு வருகின்றார்.

அதற்கேற்ப அமைச்சர் பௌஸி இலங்கையிலிருந்து ஹஜ் யாத்திரை செல்வோருக்கான கோட்டாவை 8 ஆயிரமாக அதிகரிக்க வேண்டுமென சவுதி அரேபிய ஹஜ் விவகாரங்களுக்கான அமைச்சரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இலங்கை ஹஜ் குழுவுக்குத் தலைமை தாங்கும் அமைச்சர் பௌஸி நாளை மறுதினம் சவுதி அரேபிய அமைச்சர்களுடன் இது தொடர்பாகப் பேசவுள்ளார். ஹஜ் முகவர்கள் மத்தியில் பேசியபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

சவுதி அமைச்சர் டாக்டர் புவாட்பின் அப் துல் சலாம் அல் பாரிஸியிடம் கடந்த ஆண்டு விடுக்கப்பட்ட வேண்டுகோளுக்கிணங்க 2 ஆயிரத்து 800 ஆக இருந்த யாத்திரிகர்களின் எண்ணிக்கை 5 ஆயிரத்து 800 அதிகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த விடயத்தில் இலங்கையிலுள்ள சவுதி அரேபியத் தூதுவரும் ஒத்துழைப்பு வழங்கி வருகிறாரென அமைச்சர் பௌஸி தெரிவித்தார். (ஸ்ரீ-2)


50 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



அரசடி அல்வாய் வடக்கு குறுக்கட்டு ஆலய வீதியைச் சேர்ந்த **திரு.கிருஸ்ணானந்தபவான்** அவர்கள் தனது 50 ஆவது பிறந்த தினத்தை இன்று (26.04.2011) செவ்வாய்க்கிழமை தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

வாழ்த்துபவர்கள்:
மனைவி-சூரியகலா,
பிள்ளைகள்: நதியா,
கிருஸ்ணதீபன், கிருஸ்ணரூபன்,
சுகி, கிருஸ்ணராஜன்,

அல்வாய் உறவினர்கள்,
தொண்டைமானாறு உறவினர்கள்,
வதிரி நண்பர்கள்.

(சி-3066)

# இளம் ஆசிரியை அனுஷாவின் மரணம்
# அதிர்ச்சியில் உறைந்திருக்கும் சில்லாலை



சித்தமருத்துவத்திற்குப் பெயர் போன சில்லாலையில் நடந்த அந்தப் பயங்கரம் அந்தக் கிராமத்தையே சோகத்தில் ஆழ்த்தியிருந்தது.

எங்கும் நிசப்தம். பூவரசுகளின் ஆக்கிரமிப்பில் திண்டாடும் குச்சொழுங்கைகள். மருத்துக்கேனும் தாரைக் கண்டிராத அந்த ஒழுங்கைகளின் மந்தபோசனையை வெளிப்படுத்தும் குன்றுகுழிகள்.

அனுஷா ரீச்சர் வீடு எங்கே...? மெதுவான எங்கள் கேள்விக்கு ஏக்கத்துடன் கூடிய வழிகாட்டல்.

வளைந்து நெளிந்து நீண்டு செல்லும் அந்த ஒழுங்கையின் சிறிய வீட் டில்தான் இளம் ஆசிரியை அனு ஷாவின் இறுதிச் சடங்கு நடந் தேறியது. வீட்டில் பெண்கள் கூடியிருந்தனர். எங்களைக் கண்டதும் அனுஷாவின் தந்தை செல்வராஜா வெளியே வந்து கூட் டிச் சென்றார்.

சில நிமிடங்கள் மௌனம். எங்கட பெரும் செல்வத்தை இழந்திட்டம். இனி எங்களுக்கு என்ன இரு க்கு...! இந்தச் சோகமான வரிகள் அந்த மௌனத்தைக் கலைக்க... இந்த வீட்டில் அந்த சம்பவம் நடக்கவில்லை-எங்கட வீடு சில்லாலை சாந்தையில் இருக்கு. இதைப்போல நெருக்கமான வீடுகள் அங்கில்லை.

தனியான வீடு. என்ன நடந்தாலும் வெளியில தெரியவரா... சோகத் திரையால் மூடப்பட்டிருந்த அனுஷாவின் தாய் நிலத்தை வெறுத்துப் பார்த்த வண்ணம் கூறினார்.

இது என்ர மூத்த மகனின் வீடு. நாங்கள் சில்லாலை சாந்தைப் பகுதியில் குடியிருக்கின்றோம்...

செல்வராஜாவுக்கு மூன்று பிள்ளைகள். மூத்தவர் மகன், இரண்டாவது மகள், மூன்றாவது மகள் தான் அனுஷா. சிறுவயதிலேயே நடிப்பு, இசை, விளையாட்டு, படிப்பு, கவிதை என அனைத்திலும் திறமை மிக்கவராக விளங்கினார்.

அவரின் திறமைக்கேற்றவாறு பரிசில்களும் கிடைக்கப் பெற்றன. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் கல்விகற்ற அனுஷா, வவுனியா பூந்தோட்டம் தேசிய கல்வியியற் கல்லூரியில் உடற்கல்வி கற்கைநெறியைப் பயின்றார்.

2010 ஆம் ஆண்டில் ஆசிரியர் நியமனம் பெற்று யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியராகப் பணியாற்றினார்.

உடற்கல்வி ஆசிரியரான அனுஷா, நடனத்தையும் கற்றிருந்தமையால் மாணவர்களுக்குப் பயிற்சியளித்தல், அவர்களைப் போட்டிகளில் பங்கேற்க வைத்தல் என்பவற்றின் மூலம் சாதனை படைத்தார். எனினும் அந்த சாதனைகள் ஒருவருடத்தை நிறைவு செய்வதற்கு முன்னதாகவே அந்தப் பயங்கரம் நடந்தாயிற்று.

### காதல் ஏற்பட்ட விதம்

வவுனியா பூந்தோட்டம் கல்வியியற் கல்லூரியில் அனுஷா படித்துக் கொண்டிருந்தபோது அவருடன் பருத்தித்துறை சக்கோட்டையைச் சேர்ந்த மாணவி ஒருவரும் கல்வி பயின்றார். இருவரும் சிநேகிதமாக... ஒருமுறை அனுஷா தனது சிநேகிதியுடன் அவரின் ஊரான சக்கோட்டைக்குச் சென்றுள்ளார். அங்கு சிநேகிதியின் உறவினர்களின் வீடுகளுக்கும் செல்லுகின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டது. அவ்வாறானவொரு சந்தர்ப்பமே அனுஷாவை காதல் வலைக்குள் சிக்கவைத்தது.

தனது சிநேகிதியின் உறவினர் வீடொன்றுக்குச் சென்ற அனுஷாவுடன் அந்தக் குடும்பம் மிகவும் அன்போடு பழகிக் கொண்டது.



பழக்கத் தின் நெருக்கம் இறுக்கமடைய சாந்தைக்கும் சக்கோட்டைக்கு மிடையே குடும்ப உறவுகள் வந்து போகுமளவிற்கு நெருக்கம் இறுகிக் கொண்டன.

இதன்போதுதான் சக்கோட்டையைச் சேர்ந்த ராஜசெல்வன்-அனுஷா காதல் மொட்டவிழ்த்தது. காதலின் மரபுப்படி அனுஷா ஆரம்பத்தில் அதனை மறுத்திருந்தாலும் காலத்தின் அசைவில் காதல் கனியவே செய்தது.

அனுஷா சைவசமயத்தைச் சார்ந்தவர். ராஜசெல்வனோ கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்தவர். காதல் நடந்தபோதிலும் ஒரு இந்து வேதமாவதை அனுஷா விரும்பவில்லை. காதல் கதைகளிடையே மோதல்களும், முரண்பாடுகளும் நடக்கவே செய்தன. முரண்பாட்டைத் தவிர்ப்பதற்கும் மோதல்களைச் சமாளிப்பதற்கும் கைத்தொலைபேசிகள் அனுமதிக்கவில்லை.

உடனுக்குடன் கைத்தொலைபேசிகளின் மணியோசைகள் தட்டியெழுப்பின. கூடவே ராஜசெல்வனின் பக்கம் இரண்டு பெண்களும் சேர்ந்து கொண்டு அனுஷாவுக்கு தொலைபேசியில் தொல்லை கொடுத்ததாகக் கூறுகின்றனர் அனுஷாவின் பெற்றோர்.

அனுஷா ராஜசெல்வனை உயிருக்கு உயிராக நேசித்தார். ஆனால், ராஜசெல்வன் காதலைத் துண்டிக்க முற்பட்டார் என்று கூறி முடிப்பதற்குள் அனுஷாவின் அம்மா அழுகை விம்மலின் அடைப்பால் அமைதியானார். மீண்டும் மௌனம்.நடந்து முடிந்த சோகத்திற்கான மௌன அஞ்சலியாக அது அமைந்தது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆசிரியை என்ற மதிப்பும் மரியாதையும் அனுஷாவுக்கு அந்த ஊரில் தாராளமாக உண்டு. அழகு, அறிவு, பண்பு என்ற அத்தனையும் அந்தப் பிள்ளையிடம் இருந்தது... இப்படியாயிற்றே... என்ப தைத் தவிர அந்தக் கிராமத்தவர்கள் வேறு எதனையும் கூறவில்லை.

அனுஷா தன் அம்மா மீது அளவு கடந்த பாசம் கொண்டிருந்தார். அவர் அடிக் கடி கூறிக்கொள்வார் "உங்களைப் பிரிந்திருக் கும் கல்யாணமும் வேண்டாம், உங்களைப் பிரிந் திருக்கும் வெளிநாடும் வேண்டாம்" என்று.

ஆனால் இன்று... தாயின் சோகம் தாழமுடியவில்லை. என் அனுஷாவுக்கு நான் தான் சாப்பாடு ஊட்டிவிடுவேன், பாடசாலைக்குப் போகும் போது வாசலில் நின்று வழியனுப்பி வைப்பேன். அவரின் தலைக் கறுப்புத் தெரியும் வரை என் அனுஷாவைப் பார்த்திருப்பேன் என்ற அந்தத் தாயின் நெருடல் அங்கிருந்த எல்லோரையும் நெருடவைத்தது.

அன்று ஏப்ரல் 8ஆம் திகதி வெள்ளிக்கிழமை. முதலாம் தவணைக்காக பாடசாலை விடுமுறைநாள். கல்லூரியில் இருந்து வீடுதிரும்புவதற்கு நேரமாகுமென முன்கூட்டியே அனுஷா தெரிவித்திருந்தார்.

இது அனுஷா எழுதிய இறுதிக் கவிதை

**பக்குவப்படவில்லை**

என்னையே எனக்குப் பிடிக்கவில்லை  
ஏனென்று எனக்குப் புரியவில்லை  
அழுகைத் துடைப்பது  
தண்ணீர் என்று அறிந்திருக்கிறேன்– ஆனால்  
தண்ணீரை அழுக்கென்று இப்பதான் அறிகிறேன்  
வேதனையின் சாரல் நெஞ்சை வாட்டுகிறது–ஆனால்  
இதமான காற்றைத்தேடி என்  
இதயம் அலைகிறது  
பாதை வழிமாறினாலும்  
நான் வைத்த பாசம்  
வழிமாறாது என்பதை  
பக்குவமாய் எடுத்துரைக்க  
நான் இன்னும் பக்குவப்படவில்லை

காதல் விவகாரம், தொலைபேசி தொந்தரவு இவற்றிற்கெல்லாம் தீர்வு காண்பதற்காக சாத்திரம் கேட்பது தான் வழியென்று நினைத்த அனுஷாவின் பெற்றோர் அன்று மதியம் 12.30 மணியளவில் கோயில், சாத்திரி வீடு என்று சென்றுவிட்டனர்.

அவர்கள் வீடு திரு ம்பும் போது மாலை 4.30 மணியாகியிருந்தது. அந்த நேரத்திற்



குழந்தையில் அனுஷா

கெல்லாம் அனுஷா வீடு திரும்பியிருக்க வேண்டும்.

அனுஷா... அனுஷா... மகளைக் கூப்பிட்டவாறு தாய் வீட்டிற்குள் நுழைகின்றார். பின்னே தந்தை செல்வராஜா. வீட்டின் அறைக்கதவு மெதுவாகத் திறந்திருக்கின்றது.

கதவைத் திறந்ததும் சாறி ஒன்றில் தொங்கியவாறு அனுஷா... இருந்தும் அந்தத் தாயால் நிலைமையைப் புரிந்துகொள்ள முடியவில்லை.

என்ன... இப்படியும் முசுப்பாத்தியோ... இப்படி கூறியபடி அனுஷாவை தூக்கினார்.

ஓ! விபரீதம் நடந்துள்ளது. தாயின் அலறல்... வேகமாக வந்த தந்தை செல் வராஜா மகளை தூக்குகிறார். அனுஷா அப்போது உயிரற்ற சடலமாக... என்ன நடந்தது. குடிமனைகள் அற்ற இருப் பிடம், வீட்டில் எவரும் இல்லாத தனிமையில் அனுஷா... நடந்தது என்ன...?

இளவாலைப் பொலிஸாருக்கு தகவல் சொல்ல பொலிஸார் விரைந்து வந்தனர். அன்று இரவு முழுவதும் வீட்டில் பொலிஸாரின் பாதுகாப்பு. மறுநாள்

### நடந்தது என்ன?

மல்லாகம் நீதிபதி நேரில் வந்து சடலத்தைப் பார்வையிட்டார். அவரின் உத்தரவில் சடலம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்படுகின்றது.

### அதிர்ச்சி அளித்த மருத்துவ அறிக்கை

அனுஷாவின் தலையில் காயம். அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என மருத்துவ அறிக்கை வெளிவர விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன.

அனுஷாவின் கையடக்கத் தொலைபேசியை பொலிஸார் பரிசோதிக்கின்றனர், பெற்றோரிடம் விசாரணை, கல்லூரி நிர்வாகத்திடம் கேள்விக்கணை.

முடிபில் அனுஷா காதலித்ததாக கூறப்படும் சக்கோட்டையைச் சேர்ந்த ராஜசெல்வன் பொலிஸாரால் கைது செய்யப்படுகின்றார். விசாரணை தொடர்கின்றது. முடிபைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டும். எதுவாயினும் ஒரு ஏழைக்குடும் பத்தில் பல்வேறு இடர்களைக் கடந்து ஆசிரியர் பணியை எட்டிப்பிடித்த அனுஷாவின் மரணம் ஜீரணிக்கக் கூடியதல்ல.

சமூக ஏற்றத்தாழ்வுகளை உடைக்கும் முயற்சிகளுக்கு அனுஷாவின் மறைவு பேரிழப்பே.

-விதுரன், கஜன்-

# இலங்கைத் தமிழர்கள் சம உரிமை பெற்று வாழ்வதற்கு தொடர்ந்து குரல் கொடுப்போம்

## கருணாநிதி தெரிவிப்பு

(சென்னை)

மத்திய அரசை வலியுறுத்தி இலங்கைத் தமிழர்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற அந்தத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் சம உரிமை பெற்று வாழ தொடர்ந்து குரல் கொடுப்போம் என முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

சென்னை தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் கருணாநிதி செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது செய்தியாளர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் அளித்தார்.

**கேள்வி:- இலங்கை பிரச்சனை குறித்து ஐ.நா. நியமித்த விசாரணைக் கமிஷனின் அறிக்கை இன்று வெளியிடப்படவுள்ளது. அதற்குள் இது தி.மு.க. விற்கும் அ.தி.மு.க விற்கும் இடையே உள்ள பரஸ்பர விடயமாகக் கருதப்பட்டு அறிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றனவே?**

பதில்: இலங்கைப் பிரச்சினை பெரிய பிரச்சினை. இதை தி.மு.க பிரச்சினை அ.தி.மு.க பிரச்சினை என்று கருதி விட்டுவிடாதீர்கள். ஏனென்றால் அ.தி.மு.க பிரபாகரனை கைது செய்து இங்கே அழைத்து வர வேண்டுமென்று தீர்மானமே சட்டப் பேரவையில் நிறைவேற்றும். ஒருநாள் பிரபாகரனை தியாகி என்று அ.தி.மு.க. பாராட்டும். இன்னொரு நாளைக்கு இலங்கை ஜனாதிபதியை தாக்கிப் பேசும். ஒருநாளைக்கு தாங்கிப் பேசும். அதனால் இலங்கைப் பிரச்சினையில் எங்களுக்கும் அ.தி.மு.க. விற்கும் கருத்து வேறுபாடு என்று சொல்லாதீர்கள். அவர்களுக்கு இலங்கைப் பிரச்சினை என்ன வென்றே தெரியாது. எம். ஜி.ஆர் உயிரோடு இருந்தவரை இலங்கைப் பிரச்சினை அவ ருக்கு தெரியும்.

**கேள்வி: இந்தச்சூழ்நிலையில் இலங்கை பிரச்சினையில் தி.மு.க விற்கு அதிகப் பொறுப்பு இருக்கிறது. எனவே டில்லியில் உள்ள காங்கிரஸ் அரசாங்கம் மத்திய அரசு இலங்கை பிரச்சினையில் என்ன நடவடிக்கை எடுக்க வேண்டும்?**

பதில்: மத்திய அரசை இலங்கைப்பிரச்சினையில் நாங்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறோம். வற்புறுத்திக் கொண்டிருக்கிறோம். இன்னும் சொல்லப் போனால் எங்கள் அணியில் உள்ளவர்கள் போராட்டமே நடத்தியவர்கள். இலங்கைப் பிரச்சினையிலே சட்டமன்றத்தில் தீர்மானம் போட்டவர்கள் யார் என்று உங்களுக்குத் தெரியும். விடுதலைப் புலிகளையெல்லாம் கைது செய்து



நீதிமன்றத்திலே நிறுத்த வேண்டுமென்று சொன்னது யார் என்று உங்களுக்குத் தெரியும். பிரபாகரனைக் கொண்டு வந்து நிறுத்த வேண்டுமென்று சொன்னது யார் என்று உங்களுக்குத் தெரியும். போர் என்றால் பொது மக்கள் கொல்லப்படுவது சகஜம் தான் என்று சொன்னது யார் என்று உங்களுக்குத் தெரியும். இலங்கைப் பிரச்சினையில் நாங்கள் அவர்களை விடத் தீவிரமான ஆதரவாளர்கள். விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த தமிழர்களுக்கு தி.மு.கழகத்தைப் பொறுத்தவரையில் தீவிரமான ஆதரவு என்றைக்கும் உண்டு. ஆனால் அவர்கள் தான் எங்களை விட்டு விட்டு வேறு ஆதரவைத் தேடிப் போய் அதனால் நஷ்டம் அடைந்தார்கள். அதற்காக நாங்கள் அவர்களை கைவிட்டு விட முடியாது.

மத்திய அரசை வலியுறுத்தி இலங்கைத் தமிழர்களுடைய சுதந்திரத்தைக் காப்பாற்ற அந்தத் தீவில் தமிழர்களும் சிங்களவர்களும் சம உரிமை பெற்று வாழ தொடர்ந்து குரல் கொடுப்போம்.

**கேள்வி:- ராஜபக்ஷவை போர்க் குற்றவாளியாக விசாரிக்க வேண்டும் என்ற கருத்தினை டாக்டர் இராமதாஸ் வலியுறுத்தியிருக்கிறார். உங்கள் அணியில் டாக்டர் இராமதாஸ் இருக்கிறார். இதிலே உங்கள் கருத்து என்ன?**


பதில்:- இதிலே டாக்டர் இராமதாஸ் அவர்களின் கருத்திலிருந்து நான் வேறுபடவில்லை. அந்தக் கருத்தை எப்போது எந்தவிதமாக வலியுறுத்துவது என்பது தான் இதிலே முக்கியமே தவிர டாக்டர் இராமதாஸ் அவர்களின் கருத்திலிருந்து நான் வேறுபடுகிறேனா என்று கேட்டு கருணாநிதியும் இராமதாசும் கருத்து வேறுபாடு என்று தலைப்பு போட்டு விட வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**கேள்வி:- ராஜபக்ஷவுக்கு ஆதரவான நிலையை மத்திய அரசு தொடர்ந்து எடுத்து வருகிறதே?**

பதில்:- இவையெல்லாம் சர்வதேச அளவில் சர்வதேச நிலையையொட்டி விவாதிக்க வேண்டிய விடயங்கள். இந்தியாவின் பாதுகாப்பை ஒட்டியும் நல்லுறவு எப்படியெல்லாம் வளர்க்கப்பட வேண்டும் என்பதையொட்டியும் விவாதிக்கப்பட வேண்டிய விடயங்கள். உங்களின் ஒரு கேள்வியிலும் என்னுடைய ஒரு பதிலிலும் இந்த விடயங்களை அடக்கி விட முடியாது என்றார். (ஸ்ரீ-2)

# ஆட்சி போனால் திரும்பப் பெறலாம் போன உயிர் திரும்ப வருமா?

## கலைஞரிடம் விஜயகாந்த் கேள்வி



ஈழத்தமிழ் மக்களின் வரலாற்றில் அழிக்க முடியாத தமிழினப் படுகொலை என்ற களங்கத்திற்கு கருணாநிதியே முழுக்காரணம் என தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்துள்ளதாகக்கூறும் முதலமைச்சர் கருணாநிதிக்கு நற்சான்று அளிக்க வேண்டியவர்கள் ஈழத்தமிழர்களே எனவும் அவர் நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார். இவ்வறிக்கை யின் விபரம் வருமாறு, விடுதலைப்புலிகள் இயக்கத்தை ஒடுக்கப்போவதாகக் கூறி இந்திய அரசின் துணையோடு இலங்கை அரசு இறுதிக் கட்டத்தில் தமிழனப் படுகொலை நடத்தியது. பல்லாயிரம் தமிழர்கள் ஒரேநாளில் இலங்கை அரசின் முப்படைகளும் வீசிய கொத்து குண்டுகளுக்கு இரையாகினர்.

தமிழக முதல்வர் கருணாநிதி இந்தப் படுகொலையை தடுத்து நிறுத்துவார் என்று உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் எதிர் பார்த்தனர். ஆனால் தமிழின வாழ்வை விட முதல்வர் பதவி பெரிது என்று கருதிய கருணாநிதி காலை உணவுக்குப் பின்னர் சென்னை மெரினா கடற்கரையில் மதிய உணவுக்கு முன் வரை உண்ணாவிரதம் இருந்துவிட்டு இலங்கையில் போர் நிறுத்தம் ஏற்பட்டு விட்டது என்று மத்திய உள்துறை அமைச்சர் சிதம்பரம் கூறியதாக தெரிவித்துவிட்டு உண்ணாவிரதத்தை முடித்துக் கொண்டார். போரும் ஓயவில்லை. இனப்படுகொலையும் தவிர்க்கப்படவில்லை. ப.சிதம்பரம் சொன்ன சிதம்பர இரகசியம் என்ன என்பதை கருணாநிதி வெளியிடுவாரா? போர் தொடர்ந்த பொழுது கருணாநிதி, மழை விட்டாலும் தூவானம் விடவில்லை என்று மழுப்பினாரே, அது கபட நாடகம் இல்லையா?

இந்தப் படுகொலையை தவிர்க்கக் கூடிய வாய்ப்பு கருணாநிதிக்கு மட்டுமே இருந்தது. எனினும் கருணாநிதி, ஏற்கனவே 1991 இல் இலங்கை தமிழர் பிரச்சினையில் ஆட்சியை இழந்ததாகவும் இப்பொழுது மூன்றாவது முறையும் நான் ஆட்சியை இழந்தால் தமிழ் நாட்டு மக்களுக்கு என்னென்ன பணிகளை செய்ய வேண்டும் என்று எண்ணியிருக்கிறேனோ அவற்றை எல்லாம் செய்து முடிக்காமலேயே ஆட்சி கவிழ்க்கப்பட்டிருக்கும் என்று கூறினார். ஆட்சி போனால் திரும்பப் பெறலாம். ஆனால் போன உயிர்களைத் திரும்பப் பெற முடியுமா? ஐ.நா. மன்றம் இந்த உண்மையை உணர்ந்து இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை போர்க் குற்றவாளி கூண்டில் நிறுத்துகிறது. ஆனால் முதல்வர் கருணாநிதியோ தனது அணியில் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பி ராஜபக்ஷவுடன் கை குலுக்க வைக்கிறார் என்றார். (ந-5)

# செல்வத்துக்கு மட்டுமல்ல; கடவுளின் அன்புக்குரியவள்

## ஐஸ்வர்யாராயை ஆசீர்வதித்த பாபா



ஐஸ்வர்யாராயின் பெற்றோர் கிருஷ்ணராஜ் ராய் , விரிந்தா ராய் இருவரும் சாய் பாபாவின் அதி தீவிர பக்தர்கள் ஆவர். சாய் பாபாவை அடிக்கடி சந்தித்து அவர்கள் ஆசிபெறுவதை வழக்கத்தில் வைத்திருந்தனர்.

கிருஷ்ணராஜ் ராய்- விரிந்தாராய் தம்பதியருக்கு 1971 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி ஐஸ்வர்யாராய் பிறந்தார். சில நாட்களிலே ஐஸ்வர்யாராயை புட்டபர்த்திக்கு கொண்டு சென்றிருந்தனர். அங்கு தனது இரு கைகளிலும் குழந்தையை வாங்கிக் கொண்ட சாய்பாபா. என்ன பெயர் வைத்தீர்கள்? என்று கேட்டார். அதற்கு கிருஷ்ணராஜ் ராய் , ஐஸ்வர்யா என்றார். உடனே சாய்பாபா புன்னகைத்தபடி குழந்தையின் காதில் மூன்று தடவை ஐஸ்வர்யா என்று மெல்லக் கூறி ஆசீர் வதித்தார். பின்னர் அவர், இவள் செல்வத்துக்கு மட்டுமல்ல; சர்வ வல்லமை படைத்த கடவுளின் அன்புக் குரியவளும் ஆவாள் என்றார். சாய்பாபாவின் ஆசியால் மனம் நெகிழ்ந்த ஐஸ்வர்யாரா யின் பெற்றோர் அடிக்கடி புட்டபர்த்தி வந்து ஆசி பெற்றுச் செல்வதை வழக்கமாக வைத் திருந்தனர்.

ஒருதடவை சாய்பாபா மும்பைக்கு வந்திருந்த போது அவருக்கு மாலை அணிவிக்க ஒரு சிறுமியைத் தேடினார்கள். அப்போது அங்கு வந்த ஐஸ்வர்யாராய்க்கு அந்த வாய்ப்புக் கிடைத்தது. சாய் பாபாவிற்கு ஐஸ்வர்யா மாலை அணிவித்து வணங்கினார். அப்போது சாய் பாபா சிறுமி ஐஸ்வர்யாவின் தலை மீது கை வைத்து ஆசீர்வதித்தார். இப்படி பல தட்வை சாய் பாபாவிடம் ஆசிபெற்ற ஐஸ்வர்யா தன் வாழ்வின் முக்கிய நிகழ்வுகளின் போது சாய் பாபாவிடம் ஆசி வாங்க தவறியதேயில்லை. நேரம் கிடைக்கும் போதெல்லாம் மும்பையில் சாய்பாபா ஆச்சிரமத்திற்கு சென்று பஜனைப் பாடல்களில் ஐஸ்வர்யா ராய் பங்கேற்பதுண்டு. (ஸ்ரீ)

# எகிப்து நாட்டில் புரட்சி வெடிக்க ஊழலே காரணம்

## அப்துல்கலாம் தெரிவிப்பு

(சிகாகோ)

வறுமையை ஒழிக்க வேண்டுமானால் நல்ல உலகத்தை படைக்க வேண்டும் என முன்னாள் இந்திய ஜனாதிபதி அப்துல்கலாம் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் சிகாகோ நகரில் கலாமுக்கு பொதுவரவேற்பு நிகழ்ச்சியை இந்திய-அமெரிக்க மையம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் உரையாற்றிய அப்துல் கலாம் பேசியதாவது ,

நாட்டின் ஊழலைத் தடுக்க வேண்டும். எகிப்து நாட்டில் புரட்சி வெடித்ததற்கு இது தான் காரணம். புதுமையான கருத்துக்களை அரசியலாக்கக் கூடாது. வறுமையை ஒழிக்கவும் சுத்தமான குடிநீர் மற்றும் எரிசக்தி கிடைக்கச் செய்யவும் தரமான கல்வி கிடைக்கவும் நல்ல உலகத்தை படைக்க வேண்டும். அணு சக்தி தூய சக்தி தான். எனவே இந்த சக்தியை உலகம் முழுவதும் பயன்படுத்தச் செய்ய வேண்டும்.

இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தி 9 சதவீதமாக உள்ளது. இன்னும் ஓராண்டில் இது 10சதவீதத்தை எட்டி விடும். 2020இல் இந்தியா பொருளாதாரத்தில் வல்லமை படைத்த நாடாகி விடும். பாராளுமன்றில் பெண்க ளுக்கு 33சதவீத இட ஒதுக்கீடு கிடைக்கச் செய்ய வேண்டும். இவ்வாறு கலாம் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

ஒண்ணுமே புரியல்லே இந்த உலகத்திலே.
என்னமோ நடக்குது மர்மமாய் இருக்குது...
– நடிகர் சந்திரபாபு

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## அலமலக்கு நடக்கிறது அறிக்கையில் ஏதோ இருக்கிறது!

ஐ.நா.நிபுணர்குழு வெளியிட்ட அறிக்கையில் இருப்பது என்ன? என்பதுபற்றி முழுமையாக தெரியாவிடினும், அரச தரப்பில் ஏற்பட்டுள்ள அலமலக்கைப் பார்க்கும் போது அறிக்கையில் காரசாரமான விடயங்கள் உள்ளடங்கியிருப்பது போல தெரிகின்றது.

நாங்கள் அறிக்கையைக் கண்டு பயப்பட மாட்டோம் என்று கூறுவதிலிருந்தே பயம் தொற்றி விட்டது என்பதை உணர முடிந்தாலும், அறிக்கைக்குப்பின்னர் குய்யோ முறையோ என்று கூப்பாடு போடும் சத்தம் மிக மோசமாகவே இருக்கிறது.

வன்னியில் யுத்தம் நடந்த போது நாங்களும் கூப்பாடு போட்டோம். எறிகணை வீச்சு, விமானக் குண்டுத் தாக்குதல், பசி, பஞ்சம், நோய் இவற்றின் காரணமாக எங்கள் உறவுகளின் கூக்குரல் ஒலித்தன.

தேற்றுவாரும் இல்லை. காப்பாற்றுவாரும் இல்லை என்ற நிலையில், இப்போது அரச தரப்பு கூப்பாடு போடுகிறது.

வெறும் அறிக்கையின் தாக்கத்தை ஜீரணிக்க முடியாமல் அரசு தவிப்பதை எங்களால் உணர முடிகின்றது.

ஆளும் தரப்பினர் அங்கும் இங்குமாக ஓடித் திரிவதைப் பார்க்கும் போது, அந்த அறிக்கையில் அப்படி என்னதான் சொல்லியிருக்கிறார்கள்?

அறிக்கை இலங்கை அரசுக்கு மிகவும் மோசமாக இருக்காவிட்டால் இப்படியான அலமலக்குக்கு அவசியமே இல்லை.

அறிக்கையை வெளியிட்ட ஐ.நா. சபை அமைதியாக இருக்கிறது. அறிக்கை வாசிப்பதற்கு நேரமில்லை என்ற பாதுகாப்பு அமைச்சின் செயலாளரோ இருக்க நேரமில்லாமல் இராஜதந்திர நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார்.

ஐ.நா. நிபுணர்குழுவின் அறிக்கை வெளிவந்ததும் அமைச்சர் பீரிஸ் வெளிநாடுகளுக்கு பறக்கிறார்.

அறிக்கையை வெளியிட வேண்டாம் என்று ஐ.நா. செயலாளர் பான் கீ மூனிடம் கெஞ்சுகின்றார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கைக்கு பதில் அறிக்கை தயாரிப்பதில் ஒரு பெரும் கூட்டம் களம் இறங்கியுள்ளது.

இதற்கு மேலாக பத்து இலட்சம் விவசாயிகளை திரட்டி ஐ.நாவின் அறிக்கைக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளும் தடல்புடலாக நடக்கின்றன.

கூடவே சீனா சரணம், ரஷ்யா சரணம், சரணம் சரணம் இந்தியா சரணம் என்று சரணாகதிக் கீதம் பாடிப்பரவும் பணியும் நடக்கிறது.

மறுபுறத்தில் விஜய் நம்பியாரே துணை, சிவ்சங்கர் மேனா துணை, சோனியா துணை, நாராயணா துணை, மன்மோகனே துணை, துணை என்று இடர் களைப் பதிகம் பாடுவதும் நடக்கிறது.

ஓ! அறிக்கை அவ்வளவு கனமானது போலத்தான் இருக்கிறது. பொறுத்திருந்து பார்ப்போம்.

# பெண்களுக்கு எதிரான வன்முறைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

நீதி அமைச்சின் மத்தியஸ்தர் பயிற்சி நிலையத்தால் பெண்களுக்கெதிரான வன்முறையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் யாழ்.மாவட்ட மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுடன் நேற்று முன்தினம் மிலேனியம் ஹோட்டலில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இதற்கென நிந்தவூர் மத்தியஸ்தர் சபை உறுப்பினரான திருமதி பாஸ்லி புஹாரிதீன் தலைமையில் வளவாளர் குழுவொன்று யாழ்.வருகை தந்திருந்தது.

இந்தக் கலந்துரையாடலில் திருமதி பாஸ்லி புஹாரிதீன் தெரிவிக்கையில், சர்வதேச ரீதியில் பெண்கள் வன்முறைக்குட்படுத்தப்பட்டு வருகின்றனர். இவர்களின் அத்தகைய நிலையை கருத்தில் கொண்டே இந்த மத்தியஸ்தர் சபைகள் நியமிக்கப்பட்டுள்ளன.

குடும்பஸ்தர்களிடையில் இடம்பெறும் வன்முறைகளிலும் அதிகமாக பெண்களே பாதிக்கப்படுகின்றனர்.

மனரீதியில் அழுத்தங்களுக்கு உள்ளாக்கி தற்கொலை செய்யும் முடிவுக்கு வருவதும் பெண்களே.

நமது நாட்டைப் பொறுத்தவரை சிறுமிகள் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இவ்வாறான கொடுமைகளில் இருந்து பெண்களை பாதுகாக்கும் நோக்குடன் மத்தியஸ்தர் சபை நாடு பூராகவும் உருவாக்கப்பட்டுள்ளது.

யாழ்.குடாநாட்டில் 13 மத்தியஸ்தர் சபைஉருவாக்கப்பட்டுள்ளதோடுஇவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ப. சனாதனசர்மாவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சபைகள் ஒவ்வொரு பிரதேசத்திலும் இயங்கி வருவதன் மூலம் கணவன்- மனைவியிடையே ஏற்படும் பிணக்குகளை தீர்த்து வைக்கமுடியும்.

சிறு பிரச்சனைக்கும் நீதிமன்றத்தை நாடி விவாகரத்தை கேட்கும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது.

விவாகரத்தின்மூலம்கணவன்- மனைவியிடையே ஏற்படும் பிரிவினை பிள்ளைகளை அதிகம் பாதிக்கிறது.

சமுதாயத்தின் தவறான பார்வைக்கு சில குடும்பங்கள் உட்படுத்தப்படுவதற்கு இந்த விவாகரத்தே காரணம்.

இதன் காரணமாக கலாசார சீர்கேடுகளும் ஏற்படுகிறது என்பதைக் கருத்திற்கொண்டே இந்த மத்தியஸ்தர் சபை உருவாக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-6)

# ஏழைகளின் கஷ்டத்தில், துயரத்தில் பங்கு கொண்டவர் சாய்பாபா

## பாடகி சுசீலா, நடிகைகள் அஞ்சலிதேவி, ஜமுனா உருக்கம்



சாய்பாபாவின் தீவிர பக்தர்களான பாடகி சுசீலா, நடிகைகள் ஜமுனா, அஞ்சலிதேவி ஆகியோர் புட்டபர்த்தி சென்று சாய்பாபா உடலுக்கு மலர் வளையம் வைத்து அஞ்சலி செலுத்தினார்கள்

பின்னர் வெளியே கண்ணீருடன் வந்த பாடகி சுசீலா நிருபர்களிடம் கூறியதாவது, நான் சிறுவயதில் இருந்தே சாய்பாபாவின் தீவிர பக்தை. அவரிடம் நாம் என்ன வேண்டினாலும் கிடைக்கும்.

அவர் உலகமக்களிடம் அன்பைப் போதித்தார். மனிதர்களிடம் உள்ள போட்டி , பொறாமை, கவலை போன்ற தீய குணங்கள் ஒழிப்பது பற்றி அதிகம் போதித்தார்.

அவரது போதனைகளால் திருந்தியவர்கள் ஏராளம். அவரால் இந்தியா ஆன்மீகத்தில் அதிக வளர்ச்சி பெற்றுத்திகழ்கிறது. உலகில் எத்தனையோ பாபாக்கள் இருக்கலாம். எத்தனையோ சாமியார்கள் தோன்றலாம். ஆனால் அவர்களையெல்லாம் விட சாய்பாபா புனிதம் நிறைந்தவர். ஏழைகளின் கஷ்டத்தில், துயரத்தில் பங்கு கொண்டவர்.

அவரைப் போல வேறு யாராலும் சமூக சேவை செய்திருக்க முடியாது. இந்த மகான் 96 வயது வரை இருப்பார் என்று மிகவும் எதிர்பார்த்தோம். ஆனால் இறைவன் பாபாவை வெகு சீக்கிரத்திலேயே எங்களிடமிருந்து பிரித்து விட்டார். அவர் இந்த உலகைவிட்டுப் பிரிந்தாலும் அவரது சேவைகள் தொடரும். அறக்கட்டளை நிர்வாகிகள் அந்தப் பணியை திறமையாகச் செயற்படுத்த வேண்டும் என சுசீலா கூறினார்.

நடிகை ஜமுனா கூறியதாவது, சாய்பாபாவின் கோடிக்கணக்கான பக்தர்களில் நானும் ஒருவர். அவரிடம் சென்று எனது எந்தக் கஷ்ட நஷ்டங்களைக் கூறினாலும் தீர்த்துவைப்பார். அவர் ஒருபோதும் ஏழை-பணக்காரன் என்ற வேறுபாடு பார்த்ததில்லை. அனைவருடனும் சமமாகப் பழகினார்.

அவர் ஆரம்பித்த கல்வி நிறுவனங்களில் இடஒதுக்கீடுமுறை கிடையாது. அனைவரும் சமம் என்பதை வெளிப்படுத்துவதற்காக இந்த முறையை கொண்டு வந்தார். அவரது அருளால் பலன் பெற்றவர்கள் ஏராளம். ஒரு மனிதன் எப்படி வாழவேண்டும் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டாக வாழ்ந்தவர் பாபா என ஜமுனா கூறினார்.

நடிகை அஞ்சலிதேவி கூறியதாவது, சாய்பாபாவுக்கு உடல்நலக் குறைவு என்பதை அறிந்ததுமே என்னைப் போன்ற பக்தர்கள் கடும் அதிர்ச்சியடைந்தோம். டாக்டர்கள் தீவிரசிகிச்சை அளித்து பாபாவைக் காப்பாற்றி விடுவார்கள் என்று நினைத்தோம். அவர் உயிர் பிழைத்து பக்தர்களுக்கு மீண்டும் தரிசனம் தருவார் என்று மிகுந்த நம்பிக்கையுடன் இருந்தோம். அவர் இறந்து விட்டார் என்பதை எங்களால் நம்ப முடியவில்லை.

அவர் தனது தாய் சொல்லைத் தட்டாதவர். அவரது தாய் சொற்படி இந்தியாவைவிட்டு எந்த நாட்டுக்கும் செல்லவில்லை. நம்நாட்டில் இருந்து கொண்டே சேவை செய்தார். அவர் தனது வாழ்நாளில் உகாண்டா நாட்டுக்கு மட்டும் சென்றுள்ளார். சாய்பாபா ஏழைகளுக்கு இலவச மருத்துவ சேவை செய்தார். நாடு முழுவதிலும் உள்ள ஏழை எளிய மக்கள் பயன்பெற பல்வேறு திட்டங்களைத் தீட்டி திறம்பட செயற்படுத்தினார். அவரது இழப்பை என்னால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. மனிதநேயம் மிகுந்த மிகப்பெரிய புண்ணியவானை இந்த உலகம் இழந்து விட்டது என அஞ்சலிதேவி கூறினார். (ஸ்ரீ-2)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய சாரதிக்கு அபராதம்

பருத்தித்துறை பிரதேசத்தில் மது போதையில்வாகனம்செலுத்திய சாரதிக்கு பருத்தித்துறை நீதிமன்றம் 6 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதித்து நேற்று தீர்ப்பளித்துள்ளது.

மது போதையிலும் வாகன அனுமதிப்பத்திரம் இன்றியும் வாகனம் செலுத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட மேற்படி சாரதியை நேற்றையதினம் பொலிஸார் பருத்தித்துறை நீதிவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரம் முன்னிலையில் மன்றில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிபதி மன்றில் குறித்த சாரதி இரு குற்றத்தையும் ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு மேற்படி அபராதத்தை விதித்து தீர்ப்பளித்தார். (ஸ்ரீ-3-24)

## சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



இந்த வாழ்க்கையில் என்ன இருக்கிறது? நாமெல்லாம் இந்து மதத்தைச் சார்ந்தவர்கள், இந்துக்கள். எனவே ஆன்மா அழியாதது; நித்தியமானது என்ற நம்பிக்கை நம் இரத்தத்தோடு, உடலோடு ஊறிக் கிடக்கின்றது. சில சமயங்களில், என்னிடம் வரும் இளைஞர்கள் நாத்திகவாதம் பேசுகிறார்கள். இந்து ஒருவன் நாத்திகனாக இருக்கமுடியும் என்பதை என்னால் ஏற்கமுடியவில்லை. நான் நம்ப மறுக்கிறேன். அவன் மேற்கத்திய நாடுகளின் நூல்களைக் கற்கலாம். கற்றதன் பயனாக உலக வாழ்க்கையில் தன்னை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்ளலாம். ஆனால் இவையெல்லாம் தற்காலிகமானவை. அவன் இரத்தத்தில் ஊறியவையல்ல. உன் உடலுக்கு ஒத்துக் கொள்ளாததை, உன் இயல்புக்கு முரணானதை நல்லது என்று நீ எப்படி ஏற்க முடியும்? அது வீண் வேலையே தவிர வேறன்று. எனவே அவற்றை அரிதில் முயன்று தேட வேண்டாம். நானும் ஒருகாலத்தில் மிகச் சிறுவனாக இருந்தபோது இப்படித்தான் முயன்றேன். ஆனால் அப்படி இருக்க இயலாது என்பதை இப்போது உணர்கிறேன்.

# நைஜீரியாவில் தேர்தல் வன்முறை சம்பவங்களினால் 500 பேர் பலி

நைஜீரியாவில் தேர்தல் வன்முறைச் சம்பவங்களின் காரணமாக 500 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த மாத ஆரம்பத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களின் பின்னர் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களினால் 500 இற்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளதாக அந்நாட்டு மனித உரிமை அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

நைஜீரியாவின் வடக்குப் பகுதியான கடுனா மாநிலத்தில் அதிகளவு வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

நைஜீரியாவில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் ஜொனாதன் குட்லக் வெற்றியீட்டியதாக அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து மோதல்கள் வெடிக்கத் தொடங்கின.

நாட்டின் தென் பகுதியில் கிறிஸ்தவர்கள் செறிந்து வாழ்வதுடன் தேர்தலில் தென் பகுதியைச் சேர்ந்த குட்லக் வெற்றியீட்டிருந்தார்.

எனினும் முஸ்லிம்கள் செறிவாக வாழும் வடக்குப் பகுதியில் இந்தத் தேர்தல் வெற்றியை மக்கள் ஏற்றுக் கொள்ள மறுப்புத் தெரிவித்து வருகின்றனர்.

வன்முறைகளிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக ஆயிரக் கணக்கான மக்கள் குறித்த பிரதேசங்களை விட்டு தப்பிச் செல்வதாகக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ)

# இந்தோனேசியாவில் கடும் நிலநடுக்கம்

இந்தோனேசியாவின் கிழக்குப் பகுதியில் நேற்று அதிகாலை கடும் நிலநடுக்கம் ஏற்பட்டது. 6.2 ரிக்டர் அளவில் இந்த நிலநடுக்கம் பதிவானது.

இதனால் பீதியடைந்த பொதுமக்கள் தங்கள் வீடுகளில் இருந்து பாதுகாப்பான இடங்களுக்கு விரைந்தனர். சில ஹோட்டல்களின் ஜன்னல் கண்ணாடிகள் உடைந்தன. சுவர்களில் விரிசல் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் யாருக்கும் காயம் ஏற்பட்டதா என்பது குறித்து உடனடித் தகவல் ஏதும் இல்லை.

சுலாவேசி தீவில் உள்ள கேந்தரி நகருக்கு தென்கிழக்கே 9 கிலோமீற்றர் ஆழத்தில் இந்த நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாக அமெரிக்க புவி ஆய்வு மையம் தெரிவித்தது. இந்த நிலநடுக்கத்தினைத் தொடர்ந்து 3 முறை கடுமையான நில அதிர்வுகளும் ஏற்பட்டன.

நிலநடுக்கத்தால் பெண்களும் குழந்தைகளும் பீதி அடைந்து தங்கள் வீடுகளில் இருந்து வெளியேறி வயல்வெளிப்பகுதிகளுக்குச் சென்றதாக கேந்தரி நகரின் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

ஹோட்டல்களில் தங்கியிருந்தவர்களும்மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்தவர்களும் உடனடியாக அங்கிருந்து வெளியேறினர்.

2004 டிசம்பர் 26 இல் இந்தோனேசியாவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் இந்தியப் பெருங்கடலில் சுனாமி ஏற்பட்டு 2 இலட்சத்து 30 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். அவர்களில் அரைவாசிப்பேர் இந்தோனேசியாவின் ஆசே மாகாணத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# சூடானில் தீவிரவாதிகளுடன் இராணுவம் துப்பாக்கி சண்டை

## 55 பேர் பலி

(ஜீபோ)

சூடானில் தென் பகுதி தெற்கு சூடான் என பிரிக்கப்பட்டுள்ளது. இது எதிர்வரும் யூலை மாதம்முதல் சுதந்திர நாடாக பிரகடனப்படுத்தப்படவுள்ளது.

இந்த நிலையில் அங்கு 7 தீவிரவாத குழுக்கள் அரசிற்கு எதிரான வன்முறை செயல்களில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நிலையில் தாங்- நினி தீவிர வாத குழுவுக்கும் சூடான் மக்கள் விடுதலை இராணுவத்திற்கும் இடையே நேற்று முன்தினம் துப்பாக்கி சண்டை இடம் பெற்றது.

ஜோங்கிலே மாகாணத்தில் உள்ளதால் டாக் நகரில் சுமார் 3 மணி நேரம் கடுமையான துப்பாக்கி சண்டை இடம் பெற்றது. அதில் தாங்-நினி தீவிரவாதிகள் 55 பேர் கொல்லப்பட்டனர். அவர்களில் 5 பேர் அந்த தீவிரவாத அமைப்பின் அதிகாரிகள் ஆவர்.

மேலும் இராணுவ தரப்பில் 34 வீரர்கள் காயம் அடைந்தனர். பொது மக்கள் 43 பேருக்கு காயம் ஏற்பட்டது. அவர்கள் அனைவரும் மலாக்கல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். தெற்கு சூடானில் வன்முறை சம்பவங்கள் நடப்பது சர்வசாதாரணமாகி விட்டது. கடந்த ஜனவரி மாதத்தில் இருந்து இதுவரை அங்கு 800 பேர் கொல்லப்பட்டுள்ளனர். 94 ஆயிரம் பேர் வீடுகளை இழந்துள்ளனர். இந்த தகவலை ஐ.நா சபை தெரிவித்துள்ளது. (ஸ்ரீ-2)

# 541 தலிபான் தீவிரவாதிகள் சிறையிலிருந்து தப்பியோட்டம்

(காபூல்)

ஆப்கானிஸ்தானில் உள்ள கந்தகாரில் மிகப்பெரிய சிறைச்சாலை உள்ளது. அங்கு அரசியல் கைதிகள் மற்றும் தலிபான் தீவிரவாதிகள் அடைத்து வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் அந்த சிறைச்சாலையில் உள்ள தெற்கு பகுதியில் சிறை அதிகாரிகளுக்கு தெரியாமல் சுமார் 360 மீற்றர் நீளத்துக்கு தலிபான்கள் சுரங்கப் பாதை அமைத்தனர்.

இதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் இரவு 11 மணிளவில் அந்த சுரங்கப்பாதை வழியாக 541 தலிபான் தீவிரவாதிகள் தப்பினர்.

அவர்களில் 106 பேர் தலிபான் கமாண்டர்கள் ஆவர். இந்த தகவலை கந்தகார் சிறை துறை இயக்குநர் ஜெனரல் குலாம் தஸ்தகீர் மயார் தெரிவித்தார்.

இது கடந்த 3 ஆண்டுகளில் இங்கு நடந்த 2 ஆவது மிகப்பெரிய சம்பவமாகும். கடந்த 2008 ஆம் ஆண்டு வெடிகுண்டுகள் ஏற்றிய டிரக்கால் மோதி சிறைச்சாலை தகர்க்கப்பட்டது. இதைத் தொடர்ந்து ஆயிரம் தலிபான்கள் தப்பினர். (ஸ்ரீ-2)




# இந்தியா-பங்களாதேஷ் இரகசிய ஒப்பந்தங்கள்

## முன்னாள் பிரதமர் காலிதாஜியா புகார்

இந்தியாவுடன் பங்களாதேஷ் அரசு இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. இன்றுவரை அந்த ஒப்பந்தங்கள் பற்றிய விபரங்களை வெளியிடாதது சந்தேகங்களை எழுப்புகிறது என்று பங்களா தேஷ் முன்னாள் பிரதமர் காலிதாஜியா குற்றஞ்சாட்டியுள்ளார். கடந்தாண்டு ஜனவரியில் பங்களாதேஷ் பிரதமர் சேக் ஹசீனா இந்தியா வந்திருந்த போது இரு தரப்பிலும் பல்வேறு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. இந்த ஒப்பந்தங்கள் பற்றிய. விபரங்களை சேக் ஹசீனா அரசு இன்னும் வெளியிடவில்லை என்பது எதிர்க்கட்சித் தலைவரும் அந்நாட்டின் முன்னாள் பிரதமருமான கலிதாஜியா வின் குற்றச்சாட்டு.

இது குறித்து நேற்று முன்தினம் தனது கட்சி செயற்குழுவில் பேசிய அவர், ஷேக் ஹசீனா அரசு இந்தியாவுடன் இரகசிய ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது. அந்த ஒப்பந்தங்களை மற்றும் சில சர்வதேச தொழில் நிறுவனங்களுடன் மேற்கொண்ட ஒப்பந்தங்களை பற்றிய விபரங்கள் இன்று வரை வெளியிடப்படவில்லை. இவ்விவகாரத்தில் நாட்டின் நலன்கள் விட்டுக் கொடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. நாட்டு நலன்களை விட்டுக்கொடுத்து பலன் அடைந்தவர்கள் பற்றி விசாரணை நடத்தப்படும். அப்போது மக்களுக்கு உண்மைகள் தெரிய வரும் என்று கூறியுள்ளார். (ஸ்ரீ)

# ஈஸ்டரை முன்னிட்டு பாப்பரசர் அருளுரை


(வத்திக்கான்)

ஈஸ்டர் தினத்தை முன்னிட்டு வத்திக்கான் நகரில் நடந்த சிறப்பு பிரார்த்தனை கூட்டத்தில் 16 ஆம் போப் பெனடிக்ட் (84) சிறப்புரை ஆற்றினார். இயேசு கிறிஸ்து உயிர்ந்தெழுந்த நாளை (ஈஸ்டர்) நேற்று முன்தினம் உலகம் முழுவதும் மக்கள் உற்சாகமாக கொண்டாடினர். அதன் ஒரு பகுதியாக வத்திக்கான் நகரில் புனித பீட்டர் சதுக்கத்தில் சிறப்பு பிரார்த்தனை கூட்டம் நேற்று முன்தினம் நடந்தது. அதில் 16 ஆம் போப் பெனடிக்ட் 63 மொழிகளில் ஈஸ்டர் திருநாள் வாழ்த்து தெரிவித்துவிட்டு பேசுகையில்,

நாம் அனைவரும் இன்றைய நாளில் மிகவும் மகிழ்ச்சியுடன் ஆண்டவரை பிரார்த்திக்கின்றோம். ஆனால் லிபியா போன்ற சில நாடுகளில் அழுகுரல் கேட்கிறது.

மேலும் போர் வன்முறை, இயற்கை பேரழிவு, துக்கம், பசி, நோய், வறுமை ஆகியவற்றால் உலகின் பல்வேறு பகுதிகளில் பலர் வாடுகின்றனர். குறிப்பாக வட ஆபிரிக்காவில் பசி , வறுமையால் அதிகமானோர் பாதிக்கப்படுகின்றனர். லிபியாவில் நடக்கும் போரால் கடந்த 3 மாதங்களில் ஏராளமானோர் இறந்துள்ளனர்.

அங்குமனிதநேயம் போற்றப்பட வேண்டுமெனில் ஆயுதங்களை கீழே போட்டுவிட்டு ஜனநாயக ரீதியில் பேச்சு நடத்த வேண்டும். போர் நடக்கும் நாட்டில் இருந்து வெளியேறி பிற நாடுகளில் குடிபெயரும் மக்களை அன்புடன் வரவேற்று ஆதரவளிக்க வேண்டும் என்று போப் பாண்டவர் கேட்டுக்கொண்டார். (ஸ்ரீ-2)



ஈஸ்டர் திருநாளான நேற்று முன்தினம் வத்திக்கான் நகரில் 16 ஆம் போப் பாண்டவர், புனித பீட்டர் சதுக்கத்தில் கூடியிருந்த கிறிஸ்தவ மக்களிடையே புனித உரையாற்றினார்.

# ஒபாமாவின் செல்வாக்கு சரிவு கருத்துக் கணிப்பில் தகவல்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கு சரிந்திருப்பதாகவும் நாட்டின் பொருளாதார நிலைமை மோசமடைந்து வருவதாக பெரும்பான்மை மக்கள் கருதுவதாகவும் அண்மையில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு கூறுகிறது.

அமெரிக்க நாடாளுமன்றத்தின் செயற்பாடு குறித்து 75 சதவீதம் பேர் அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர்.

நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகையும் சிபிஎஸ் நியூஸ் தொலைக்காட்சியும் இணைந்து அண்மையில் தொலைபேசி மூலம் கருத்துக்கணிப்பு நடத்தின.

கடந்த 15 ஆம் திகதி முதல் 20 ஆம் திகதி வரை நடந்த இந்தக் கருத்துக் கணிப்பில் நாடு முழுவதும் கணனி மூலம் தேர்ந் தெடுக்கப்பட்ட ஆயிரத்து 224 பேரிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டன. இதன் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் செயற்பாடு குறித்து 45 சதவீதம் பேர் அதிருப்தி தெரிவித்திருக்கின்றனர். இது கடந்த ஜனவரி மாதத்தை விட குறைவாகும்.

பொருளாதார நெருக்கடிகளை அவர் கையாளுவது குறித்து 57 சதவீதம் பேரும் பட்ஜெட் பற்றாக்குறையை அவர் கையாண்டது குறித்து கிட்டத்தட்ட அதே அளவினரும் அதிருப்தியில் இருப்பது தெரியவந்துள்ளது.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலிலும் ஒபாமா போட்டியிடக்கூடும் என்று கூறப்பட்டுவரும் நிலையில் இது அவருக்கு மிகப்பெரிய பின்னடைவாக இருக்கும் எனக் கருதப்படுகிறது. (ஸ்ரீ-2)

# DLF IPL ஐ.பி.எல் கொண்டாட்டம்

ஏப்பிரல் 8 முதல் மே 28 வரை

# புனே அணியை புரட்டி எடுத்தது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி

(சென்னை)

சகலதுறையில் ஜொலித்த சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் புனே வாரியர்ஸ் அணியை வீழ்த்தியது.

இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி. எல்) அமைப்பின் 10 அணிகள் மோதும் 4 ஆவது இருபது-20 கிரிக்கெட் தொடர் இந்தியாவில் நடை



பெற்று வருகிறது.

இதில் சென்னையில் நேற்று நடைபெற்ற 29 ஆவது போட்டியில் தோனி தலைமையிலான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் யுவ ராஜ் சிங் தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற புனே வாரியர்ஸ் அணித்தலைவர் யுவராஜ் சிங் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணிக்கு விஜய்-ஹசி ஜோடி சிறப்பான ஆரம்பத்தை வழங்கியது.

இந்த ஜோடி முதலாவது விக்கெட்டுக்காக 9.2 ஓவர்களில் 64 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த பேது முரளி விஜய் 29 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் அட்ங்கலாக) 31 ஓட்டங்களை எடுத்து தோமஸின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து களமிறங்கிய சுரேஸ் ரெய்னா 2 ஓட்டங்களுடன் தோமஸின் வேகத்தில் வெளியேறி ஏமாற்றமளித்தார்.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக ஹசியுடன் இணைந்த தோனி சிறப்பாக ஆட சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை சுமாராக உயர்ந்தது.

இதில் மைக்கெல் ஹசி 42 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். மறுமுனையில் அணித்தலைவர் தோனி 21 பந்துகளில் (2 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 26 ஓட்டங்களை எடுத்து ராகுல் சர்மாவின் பந்தில் ஆட்டமிழந்தார்.

அடுத்து அல்பி மோர்கல் களமிறங்க மறுமுனையில் மைக்கெல் ஹசி 48 பந்துகளில் (6 பவுண்டரிகள், ஒரு சிக்ஸர் உட்பட) 61 ஓட்டங்களை எடுத்து ரெய்லரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து அல்பி மோர்கல் பூச்சியத்துடன் ரெய்லரின் பந்தில் ஆட்டமிழக்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 17.4 ஓவர்களில் 123 ஓட்டங்களை எடுத்து 5 விக்கெட்டுக்களையிழந்தது.

இறுதியில் பத்திரிநாத் 11, அனிருதா 7 ஓட்டங்களை தமது பங்கிற்கு சேர்க்க சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களையிழந்து 142 ஓட்டங்களை எடுத்தது.

பந்துவீச்சில் ஜெரோமி ரெயலர் 3 விக்கெட்டுக்களையும் தோமஸ் 2 விக்கெட்டுக்களையும் ராகுல் சர்மா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 143 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய புனே வாரியர்ஸ் அணிக்கு ரைடர்-மிர்ஷா ஜோடி ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் மிர்ஷா 9 பந்துகளில் (ஒரு பவுண்டரி உட்பட) 9 ஓட்டங்களுடன் மோர்கலின் வேகத்தில் வெளியேறினார்.

அடுத்து பாண்டி களமிறங்க மறுமுனையில் ஜெசிரைடர் 11 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 15 ஓட்டங்களை எடுத்து அஸ்வின் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து பாண்டி 9 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 12 ஓட்டங்களுடன் மோர்கலின் வேகத்தில் வெளியேறினார். ரொபின் உத்தப்பா பூச்சியத்துடன் அஸ்வினின் சுழலில் ஆட்டமிழந்து வெளியேற புனே வாரியர்ஸ் அணி 5.3 ஓவர்களில் 40 ஓட்டங்களை எடுத்து 4 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

அடுத்து யுவராஜ் சிங்குடன் இணைந்த மான்கஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கினார்.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 7.2 ஓவர்களில் 38 ஓட்டங்களைச் சேர்த்த போது மான்கஸ் 23 பந்துகளில் ( ஒரு சிக்ஸர் உட்பட) 20 ஓட்டங்களை எடுத்து பெரல்லிங்கரின் வேகத்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நதன் மக்குலம்



களமிறங்க மறுமுனையில் யுவராஜ் சிங் 43 பந்துகளில் (2 பவுண்டரிகள் உட்பட) 34 ஓட்டங்களை எடுத்து மோர்கலின் பந்தில் ஆட்டமிழக்க புனே வாரியர்ஸ் அணி 18.3 ஓவர்களில்109 ஓட்டங்களை எடுத்து 6 விக்கெட்டுக்களை பறிகொடுத்தது.

பின் வரிசையில் ராகுல் சர்மா ஒரு ஓட்டத்துடனும், ரெய்லர் 2 ஓட்டத்துடனும், மக்குலம் 15 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க புனே வாரியர்ஸ் அணி 20 ஓவர் களில் 9 விக்கெட்டுக்களையிழந்து 117 ஓட்டங்களை மாத்திரமெடுத்து 25 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இவ் வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய 6 ஆவது போட்டியில் 3 ஆவது வெற்றியைப் பெற்று புள்ளிகள் எண்ணிக்கையை 6 ஆக உயர்த்தியது.

பந்து வீச்சில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி சர்பாக அல்பி மோர்கல் 3 விக்கெட்டுக்களையும், அஸ்வின், பொல்லிங்கர் தலா 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இப் போட்டியில் சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் வெற்றிக்கு அடித்தளமமைத்த மைக்கெல் ஹசி ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.



ஜெர்மனி கிராண்ட பிரிக்ஸ் டென்னிஸ் தொடர் அரையிறுதியில் சமந்தா ஸ்டோசரை (ஆஸி.) வீழ்த்திய மகிழ்ச்சியில் ஜெர்மனியின் ஜுலியா

## புள்ளிப் பட்டியல்

| அணிகள் | போட்டி | வெற்றி | தோல்வி | சமனிலை | முடிபில்லை | புள்ளிகள் | நிகர ஓட்ட எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| மும்பை இந்தியன்ஸ் | 6 | 5 | 1 | 0 | 0 | 10 | +0.707 |
| ராஜஸ்தான் ரோயல்ஸ் | 7 | 3 | 3 | 0 | 1 | 7 | -0.357 |
| கொல்கத்தா | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +0.393 |
| சென்னை | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | +0.095 |
| கிங்ஸ் லெவின் பஞ்சாப் | 5 | 3 | 2 | 0 | 0 | 6 | +0.095 |
| கொச்சி | 6 | 3 | 3 | 0 | 0 | 6 | -0.347 |
| றோயல் சலஞ்ஜர்ஸ் | 6 | 2 | 3 | 0 | 1 | 5 | -0.391 |
| புனே வாரியர்ஸ் | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | +0.248 |
| டில்லி | 5 | 2 | 3 | 0 | 0 | 4 | -0.231 |
| டெக்கான் சார்ஜர்ஸ் | 6 | 2 | 4 | 0 | 0 | 4 | +0.251 |

# மலிங்கவின் முடிபிற்கு முன்னணி வீரர்கள் ஆதரவு

(கொழும்பு)

இலங்கையின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றமைக்கு முன்னாள் அணித்தலைவர்களான மஹேல ஜயவர்த்தன, குமார் சங்கக்கார ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மலிங்க சிறிது காலமாக காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதால் 2015 ஆம் ஆண்டின் உலகக்கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் அவரின் கனவை நனவாக்கக் கூடும் எனவும் மஹேல ஜயவர்த்தன தெரிவித்துள்ளார்.

காயம் காரணமாக மலிங்க 16 மாதங்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியாதிருந்ததை சுட்டிக் காட்டியுள்ள மஹேல, மலிங்கவின் கிரிக்






கெட் வாழ்க்கைக் காலத்தை நீடிப்பதற்காக டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றமை சரியானது எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டிற்காக விளையாடுவதை விட ஐ.பி.எல் போட்டிகளில் விளையாடுவதை மலிங்க தெரிவு செய்தார் என்ற விமர்சனம் தவறானது என முன்னாள் அணித்தலைவர் குமார் சங்கக்கார கூறியுள்ளார்.

மலிங்க நாட்டைவிட ஐ.பி.எல் போட்டிகளை தெரிவு செய்திருக்க வாய்ப்பில்லை. அவர் மிக அர்ப்பணிப்புள்ள வீரர். நான் அவர் டெஸ்ட் போட்டிகளில் விளையாட விரும்பாமலிருக்கவும் இல்லை. அவர் 3 வகையானபோட்டிகளிலும்விளையாடுவதற்கு ஆர்வம் கொண்டிருந்தார் என சங்கக்கார தெரிவித்துள்ளார்.

ஆனால் துரதிஸ்டவசமாக அவரின் உடல் டெஸ்ட் போட்டிகளுக்குத் தாக்குப் பிடிக்கவில்லை. டெஸ்ட் போட்டிகளில் விளையாடுமாறு அவரை கிரிக்கெட் சபை நிர்ப்பந்தித்திருந்தால் பல வருடங்களுக்கு முன்னரே இந்த வேகப் பந்து வீச்சாளரை நாடு இழந்திருக்கும் எனவும் சங்கக்கார கூறியுள்ளார்.



யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற அரச பேருந்து நேற்றுக் காலை கைதடிப் பாலத்திலுள்ள இராணுவ காவலரணை மோதி விபத்துக்குள்ளானதைப் படத்தில் காணலாம். படம்: சாந்தன்

## புலிகளின் ஆயுதக் களஞ்சியம் மட்டக்களப்பில் கண்டுபிடிப்பு

மட்டக்களப்பு மாங்கேணியில் புலிகளின் பாரிய ஆயுதக் களஞ்சியமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

மாங்கேணிக்குளம் பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த ஆயுதக் களஞ்சியம் காணப்பட்டதாக கடற்படையின் பேச்சாளர் கமாண்டர் கோசல வர்ணகுலசூரிய தெரிவித்துள்ளார்.

பல்வேறு வகையான துப்பாக்கிகளுக்குப் பயன்படுத்தப்படும் பெருந்தொகையான ரவைகள், பல்ரக துப்பாக்கிரவைகள், குண்டெறி கருவிகள், கைக்குண்டுகள் உள்ளிட்ட பெருந்தொகையான குண்டுவகைகள், தொலைத்தொடர்புக் கருவிகள், அதியுயர் தொழில்நுட்ப தகவல் பரிமாற்றக் கருவிகள், தகவற் பரிமாற்றக் கருவிகளுக்கான அலைவரிசை சீராக்கி அன்டெனாக்கள், புலிகளின் இடைப்பட்டிகள், கிளேமோர் குண்டுகள், விமான எதிர்ப்புக் குண்டுகள் என்பன பெருந்தொகையில் அங்கிருந்து கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## இசை வேள்வி

(யாழ்ப்பாணம்)

வடமாகாண ஆளுநரின் பணிப்புரைக்கமைவாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மே மாதம் முதலாம் வாரம் "இசை வேள்வி" என்ற நிகழ்வை நடத்தவுள்ளது.

இந் நிகழ்வு தொடர்பான ஒத்திகை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்று வருகின்றது. இதில் யாழ்ப்பாண மாவட்ட இசைக்கலைஞர்கள் மற்றும் வாத்தியக் கலைஞர்கள் நாளை புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெறும் ஒத்திகையில் கலந்து கொண்டு தங்கள் பங்களிப்பை வழங்குவதோடு வரவையும் உறுதிப்படுத்துமாறு பண்பாட்டலுவல்கள் திணைக்களம் கேட்டுள்ளது. (ந)

## தமிழ் மக்களைக் காப்பாற்றுவதில்...

டதாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழு கண்டறிந்துள்ளது.

இப் போரின்போது பொதுமக்களைப் பாதுகாப்பதற்காக ஐக்கிய நாடுகள் சபை காத்திரமான நடவடிக்கைகளை எடுக்காதமை குறித்து எழுந்துள்ள கேள்விக்கு, இப் போரின் இறுதிக் கட்டத்தின் போது ஐக்கிய நாடுகள் சபையின் செயற்பாடுகள் தொடர்பாக முறையான மீள்மதிப்பீடு ஒன்றைச் செய்வதன் மூலமே பதிலைப் பெறமுடியும்.

ஐக்கிய நாடுகள் சபை பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்து கணக்கெடுப்புக்களை எடுக்க முற்பட்டபோதெல்லாம் அரசாங்கம் அதற்குத் தடைகளை ஏற்படுத்தி வந்தது.

தமிழீழவிடுதலைப்புலிகள் அழிக்கப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே இந்திய அரசாங்கமும் இருந்ததால், பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்து மத்திய அரசு கவலை கொள்ளவில்லை.

இலங்கை விவகாரம் தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் அங்கத்துவ நாடுகளிடம் ஒருமித்த கருத்து இருக்கவில்லை என்றே கூற வேண்டும். ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புப் பேரவையிலோ, மனிதவுரிமை ஆணைக்குழுவிலோ காத்திரமான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டதாக தென்படவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது அரசாங்கத்தால் மேற்கொள்ளப்பட்ட படை நடவடிக்கைகளின்போது பல நாடுகள் ஒத்துழைப்பு வழங்கின. அரசாங்கத்திற்கு ஆயுதங்கள் வழங்கிய நாடுகள், ஒத்துழைப்புக்களை வழங்கிய நாடுகள் மற்றும் இலங்கை அரசாங்கத்திற்கு உதவுவதற்கு இந்தியா உட்பட எல்லா வகையிலும் முன்னின்ற நாடுகள் என நீண்ட பட்டியல் உள்ளது.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக் கட்டப் போரின்போது அரசாங்கத்திற்குப் பல்வேறு புலனாய்வு உதவிகளை இந்தியா வழங்கியுள்ளது. போர்ப் பிராந்தியத்தில் பொதுமக்களின் உயிரிழப்புக்கள் குறித்த தகவல்களையும் இந்தியா அறிந்திருந்தது.

பாதுகாப்பு வலயங்களுக்கு உள்ளேயும் புலனாய்வு வசதிகளை இந்தியா கொண்டிருந்தது என்றே நான் நம்புகின்றேன்.

இப் போரின் போது பொதுமக்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் குறித்து இந்தியாவுக்கு நன்றாகத் தெரிந்தபோதிலும் தமிழீழ விடுதலைப் புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாடு இந்திய அரச மட்டத்தில் காணப்பட்டது.

விடுதலைப்புலிகளின் தலைவர்கள் சரணடைவது தொடர்பில் நான் ஈடுபட்டிருக்காத போதிலும், இவ் விவகாரம் குறித்துப் பல தரப்பினருக்கும் இடையில் பல்வேறு கருத்துக்கள் பரிமாறப்பட்டிருந்தன. வன்னிப் போரின் இறுதிக் கிழமையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமைத்துவம் பௌதிக ரீதியில் பிரிந்து காணப்பட்டதுடன் பாதுகாப்பு வலயப் பகுதியில் இருந்து அவர்கள் வேறுவேறு திசைகளில் தப்பிச் செல்ல முற்பட்டார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தலைவர்கள் சரணடைவது தொடர்பான விவகாரத்தில் விஜய் நம்பியாரும் ஈடுபட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. இவ் விவகாரத்தில் சூழ்ச்சிகள் இடம்பெற்றிருந்ததாகவும் கூறப்படுகின்றது. ஆனால் இத்தகையதொரு சூழ்ச்சி தேவைப்பட்டிருக்கும் என்று நான் கருதவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகளின் மீதமுள்ள தலைவர்கள் சரணடையுமாறு தூண்டுதல் ஒன்று கொடுக்கப்பட்டதாகவே நான் கருதுகிறேன். இறுதியில் அவர்கள் சரணடைந்த போது சுட்டுக் கொல்லப்பட்டு விட்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

வன்னிப் போர் உச்சக்கட்டத்தை அடைந்திருந்த காலத்தில் கொழும்பில் ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகத்தின் பேச்சாளராக கோர்டன் வைஸ் பணியாற்றியமை குறிப்பிடத்தக்கது. (ந-5)

## பாதுகாப்புச்...

அவர் அமெரிக்காவில் தனக்கு நெருக்கமான அதிகாரிகளுடன் கலந்துரையாடவுள்ளதாக பாதுகாப்பு அமைச்சின் தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஆயினும் அவரது விஜயம் மற்றும் அமெரிக்காவில் மேற்கொள்ளும் கலந்தாலோசனைகள் என்பன குறித்த விவரங்கள் ஊடகங்களுக்கு வெளியிடப்படமாட்டாது என்றும் பிரஸ்தாப தகவல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## ஐ.நா. நிபுணர்....

பதியின் செயலகத்தில் இருந்து அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து ஐக்கிய நாடுகள் சபை நிபுணர்கள் குழுவின் அறிக்கைக்கு பதிலளிக்கும் வகையிலான கூட்டறிக்கை ஒன்றை வெளியிட ஜனாதிபதி ஆர்வம் கொண்டிருப்பதாக ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ந-5)

## தமிழ்த் தேசிய...

கூட்டமைப்பின் பிரதிநிதிகள் நேற்று வடக்கிலுள்ள தடுப்பு முகாம்களுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளதாக ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் தெரிவித்திருந்தார்.

வன்னியில் இடம்பெற்ற இறுதிக்கட்டப் போரின் போது சரணடைந்த மற்றும் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளோரின் பெயர் பட்டியலை நேரடியாகப் பார்வையிடுவதற்கு அனுமதிக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் இடம்பெற்ற பேச்சு வார்த்தையில் வலியுறுத்தி வந்தது.

கடந்த 12ஆம் திகதி அரசாங்கத் தரப்பு பிரதிநிதிகளுடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகளும் இணைந்து பிரஸ்தாப விஜயத்தை மேற்கொள்ளவிருந்த நிலையில் திடீரென அன்று காலை குறிப்பிட்ட விஜயம் ஒத்திவைக்கப்படுவதாக கூட்டமைப்பினருக்கு அரசாங்கம் அறிவித்திருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் அரசாங்கத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை மீண்டும் பேச்சு வார்த்தை இடம்பெறவுள்ள நிலையில் நேற்று இவ்விஜயம் மேற்கொள்ளப்படுவதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் அரசாங்கத்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் இரண்டாவது தடவையாகவும் ஏமாற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


## வாகன விற்பனை

1. NISSAN B 11 14 - XXXX A/C சிறந்த முறையில் (WORKING CONDITION), POWER STEERING மற்றும் அனைத்து வளங்களுடனும் வெள்ளை நிறம்.
2. NISSAN FB14 GC - XXXX POWER MIRROR, POWER SHUTTER, AUTO GEAR, POWER STEERING, MINT CONDITION, வெள்ளை நிறம்.
3. DOLPHIN VAN 54 - XXXX மிகவும் நல்ல நிலையில், ஒரிஜினல் சீற் வளங்களுடன் வெள்ளை நிறம்.

தொடர்பு:- 0774528818 (4688)

SM COMPLEX
824, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

## பதவி வெற்றிடம்

☼ ஓவ்செற் இயந்திர இயக்குநர் (ஆண்கள்)

☼ ஓவ்செற் இயந்திர பயிலுநர் (ஆண்கள்)

அனுபவமும், ஆர்வமுடையவர்கள் பிற்பகல் 3.30 மணிக்கு நேரில் வரவும்.
குறிப்பு: யாழ்.நகரமையத்திலிருந்து 5 கி.மீற்றர் தூரத்திற்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

வலம்புரி இல.3, 2-ம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### திருமதி கார்த்திகேசு பகவதிப்பிள்ளை



மலேசியாவை பிறப்பிடமாகவும் சித்தன்கேணியையும், கனடாவையும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கார்த்திகேசு பகவதிப்பிள்ளை நேற்று (25.04.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஷ்ணு- பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், திருமதி நல்லமுத்துவின் பெறாமகளும், காலஞ்சென்ற கார்த்திகேசு அவர்களின் அன்பு மனைவியும், சிவனேஸ்வரி (ராணி- கனடா), வரதராசா (P.S சேவிஸ் ஸ்ரேசன்), சடாச்சரதேவி (ரதி), பூபதிராசா (கனடா), புஸ்பவதி (மாலா), ஜீவராசா (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும்,

காலஞ்சென்ற சண்முகநாதன் மற்றும் கலாவதி (யாழ். வட்டு. திருநாவுக்கரசு ம.வி), சுந்தரராசா (சுசிலாதேவி அச்சகம்), பாக்கியலக்சுமி, சிவராசா (இலங்கை வங்கி யாழ்ப்பாணம்), ஜெயக்குமாரி ஆகியோரின் மாமியாரும், காலஞ்சென்ற பத்மரேகை (மலேசியா) மற்றும் கனகசுந்தரம் (மலேசியா), குமாரசிங்கம் (கனடா), தனபாலசிங்கம் (லண்டன்), தேவவதி, நேத்திரவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவனேஸ்வரி, வசந்தா, பாலசுப்பிரமணியம், சத்தியசீலன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், சுகந்தன்- சகிலா, சேந்தன்- வதனி, சுதாகினி- உதயேந்திரன், சொக்கேசன், லோஜினி- மயூரன், சிவதர்ஷனா- லக்சுமிகாந்தன், குமுதா, விஸ்வாகரன், அகிலா, கபிலன், வினுஷா, நிலேஷ், மயூரன், கார்த்திகா ஆகியோரின் பாட்டியும் உசியந்தன், பவினுஷா, சுமுகாயன், சகீல், சபிக்கா, சேவயா, சேவயிஷா, லிஷாறா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரிகைகள் இன்று (26.04.2011) செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று வழுக்கையாறு மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
மகன் கா.வரதராசா

(3072)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.